449

Regd. No. 2569

449

OFFICE OF THE REGISTRAR OF ...
10 JAN 1934

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

மலர் 4

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 12

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1352 ஷஃபான்மீ 1933 டிசம்பர் மீ

உள்ளடக்கம்.

1.	அல்புர்கான் ...	441
2.	அல் ஹதீது ...	445
3.	ரமளான் முபாரக் ...	446
4.	நோன்பின் விபரம் ...	447
5.	தராவீஹ் தொழுகை ...	454
6.	அப்கன் அரசர் நாதிர்ஷாஹ் ...	455
7.	ஹஸ்ரத் இமாம் அஹ்மத் பின்ஹம்பல் ...	458
8.	முஸ்லிம்களும் ஜக்காத்தும் ...	460
9.	இஸ்லாமிய ஒழுக்கம் ...	462
10.	தொழுகையின் அவசியம் ...	466
11.	மதக்கல்வியும் பாடசாலைகளும் ...	470
12.	திருக்குர்ஆன் செயற்கை ...	473
13.	கீழ்நாட்டு பூர்வீகக் கைத்தொழில்கள் ...	477

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

"ஹயாத்த மஸீஹ் அலைஹிஸ்ஸலாம்"

(முதற் பாகம்)

ஹஜ்ரத் ஈஸா நபியவர்களின் சரித்திரச் சுருக்கம், நபியவர்கள் விண்ணுக்குயர்த்தப்பட்ட விபரம், இனி அவர்கள் உலகுக்கு வரும் விபரம் ஆகிய இவைகள் குர்ஆன் ஹதீது முதலிய ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டது. காதியானிகள் ஹஜ்ரத் ஈஸா நபியவர்களைப்பற்றிக் கூறும் கூற்றுகளுக்கு இந்நூல் தக்க மறுப்பாக மிளிர்கின்றது இந்நூலைப் போலொரு நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்ததில்லை. காதியானித் தமிழ் புத்தகங்களைப் படித்து வழிவிலகிச் செல்லும் சோதர சோதரிகளின் கண்களை இந்நூல் திறந்துவிடும் என்பதிலையமின்று 90 பக்கங்களைக்கொண்டது. விலை அணா 7 தான்.

இரண்டாம் பாகம் அச்சிலிருந்து கொண்டிருக்கிறது சீக்கிரம் வெளிவரும்.

கிறிஸ்தவர்களுக்கோர் வாயாப்பு

கிறிஸ்தவப் பாதிரிகள் இஸ்லாத்தைப்பற்றியும் நபிகள்பிரானவர்களைப்பற்றியும் விடுத்த 14 வினாக்களுக்கு சுன்னத்துவல்ஜமாஅத்து உலமாக்களால் அளிக்கப்பட்ட விடைகள் இதிலடங்கி இருக்கிறது. இந்த நூலைப் படித்துப் பார்ப்பார்களாயின் உண்மை இஸ்லாத்தைத் தெரிந்துகொள்வார்கள் என்பதில் எள்ளத்துணையும் சந்தேகமில்லை. மேலும் லாகூர் அஹ்மதியா பார்ட்டி தலைவர் முஹம்மது அலி, M. A., LL. B., யால் எழுதப்பட்ட இயேசுவின் இரகசியம் குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் விரோதமாகயிருப்பதை நன்கு தெரிந்துகொள்வர். சொற்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன. முந்திக்கொள்ளுங்கள். விலை அணா 6 தான்.

சுன்னத்ஜமாஅத்தின் விஸ்வாசம்

சுன்னத்துவல் ஜமாஅத்து என்றால் என்ன என்று வினவும் காதியானிகளுக்கு இது ஒரு பதிலாகும். இது சுன்னத்துவல் ஜமாஅத்து முஸ்லிம்கள் யார்? அவர்களின் கொள்கை யாது? சுன்னத்துவல்ஜமாஅத்தை விட்டு விலகியவர்கள் யார்? அவர்களின் கொள்கைகள் யாவை? இக்கொள்கைகள் தோன்றிய காலம் ஆகியவைகளைத் தெளிவுபட விளக்கும் நூல். விலை அணா 6 தான்.

காதியானி மத ஆராய்ச்சி

காதியானி மதக்கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ளாமல் அநேகர் அவர்களின் நூல்களைப் படித்து வழிதவறி விடுகின்றனர். இஸ்லாத்துக்கும் காதியானி மதத்துக்குமுள்ள வேற்றுமை, காதியானிகள் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் என்று கூறிக்கொண்டு அதைக் கெடுப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சி விபரம் முதலியவைகள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. காதியானிகளைச் சீர்திருத்த முஸ்லிம்கள் என்றும், மிர்ஜா குலாம் அஹ்மதைச் சீர்திருத்தக்காரர் என்றும் கருதி வருபவர்களின் கண்ணைத் திறந்துவிட்டு அவர்கள் இஸ்லாத்தைவிட்டு எவ்வளவு தூரம் விலகிச் சென்றிருக்கின்றனர் என்பதை நன்கு துலக்கும் நூல். 200-பக்கங்களுக்கு மேற்கொண்டது. விலை ரூபா 1-0-0 தான்.

OFFICE OF THE REGISTRAR ...
19 JAN 1934
MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1352 ஷஃபான் ௴ 1933 ௵ டிசம்பர் ௴	இதழ் 12

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கிறோம்)

அல்புர்கான்.

இறைவனால் மானிடகோடிகளுக்கு அருளப்பெற்ற வேதங்கள் பல உள. அதில் திருக் குர்ஆன் இறுதி வேதமாகும். முன்னுண்டான வேதங்களும் ஆகமங்களும் காலக்கிரமத்தில் ஜனங்களால் அநேக மாறுபாடுகள் அடைந்துவிட்டனவாதலின், அவைகள் நேர்வழியினின்று வெகுதூரம் பின்னடைந்து விட்டது. வேதங்கள் அனுப்பப்படுவது ஆண்டவனது அனுக்கிரஹங்களி லொன்றாகும். அவைகளை திருக் குர்ஆனைக்கொண்டு பூர்த்தியடையச் செய்யவேண்டு மென்பது அவ்வாண்டகையின் நாட்டம் போலும். அதற்கேற்ப "இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை சம்பூர்ணமாக்கி விட்டேன்; என்னுடைய அனுக்கிரஹத்தைப் பூர்த்தியடையச் செய்துவிட்டேன்; உங்களுக்கு இஸ்லாத்தையே நான் சன்மார்க்கமாகப் பொருந்திக்கொண்டேன்" (அல்குர்ஆன்) என அருள்செய்திருக்கின்றான். இத்திருவஸனங்களைக்கொண்டே சத்திய திருவேதம் பூர்த்தியடைந்துளது; இதற்குப்பின் வேதம் அருளப்படும் வாயல் அடைபட்டுப்போய்விட்டது. இத்திருவேதம் இறுதிவேதமாயிருப்பதால் முன்னுண்டான வேதங்களின் சாரத்தையும் சங்கிரகத்தையும் இதில்பொதித்துவைக்க வேண்டியதாயிருந்தது; முற்காலத்தில் நடைபெற்ற முக்கியமான. சம்பவங்களையும், நபிமார்களின் சரித்திரங்களையும் வெளியிடவேண்டியதிருந்தது; வேதக்காரர்கள், முஷ்ரிகீன்கள், சாபியீன்கள் முதலானோர்களுக்கு ஜனிக்கும் சந்தேகங்களுக்கு சமாதானங் கூறவேண்டியது மிருந்தது; சமயோசிதமாய் நல்லடியார்களுக்குத்தேவையான உபதேச இரத்தினங்களை அறிவிக்கவேண்டியதாகவு மிருந்தது; இறுதி நாள்வரை இதே வேதம் நேர்வழித் தீபமாய் விளங்க வேண்டியதாகவுமிருந்தது. எனவே இவ்வெல்லா அம்ஸங்களையும் பொருந்தியதாய் இத்திருவேதம் அருளப்பட்டிருக்கின்றது. இதன் பாஷா அமைப்பையோ இவண் வர்ணித்துக்

கூறிவிடுவதென்பது முடியாத காரியமாகும். அரபிப்பாஷையில் மாபெரும் பாண்டித்தியம் பெற்ற நிபுணர்களெல்லாம் இதன் அமைப்பைக்கண்டு ஆச்சரியமுற்றனர்; ஒரு சிலர் தாங்கள் இவ்வாறு ஒரு காவியம் இயற்ற வேண்டுமென பெரும் முயற்சி செய்தனராதலின், அம்முயற்சியில் அன்னோர் வீழ்ச்சியடைந்தனரேயன்றி கோரிய காரியத்தில் சற்றேனும் ஜயம் பெற்றார்களில்லை.

நபிகள்பிரான் முஹம்மத் (ஸல்.) அவர்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலும் படிக்கவில்லை; எந்த ஆசிரியர்களின் சாகவாசத்திலுமிருக்கவில்லை; சிறு பிராயத்தில் ஆடு ஒட்டகம் மேய்க்கும் தொழிலைக் கொண்டிருந்தார்கள்; அதன்பின் வியாபாரத் துறையில் ஈடுபட்டிருந்தார்கள்; இதைத் தவிர்த்து படிப்பதற்குள்ள சந்தர்ப்பம் அவர்களுக்கு கிஞ்சிற்றும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் அவர்களுடைய திருவாழ்க்கையானது மிகவும் பரிசுத்தத்தன்மை வாய்ந்ததாகவேயிருந்தது. மகான் அவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பொய் புகன்றதே கிடையாது; யாரையும் வஞ்சித்து எக்காரியத்தையும் செய்தது கிடையாது; ஏழைகளுக்கு உபகாரம் புரிவதிலும் இயல்பில்லாதவர்களுக்குத் தேவையான சௌகரியங்களைச் செய்து கொடுப்பதிலும், பசித்து வந்தவர்களை உபசரிப்பதிலும் தங்கள் வாழ்நாட்களைக் களித்துவந்தார்கள். அரபியர்களோ இரத்தவெறி கொண்டவர்கள்; யுத்தஞ் செய்வதையே தங்கள் தொழிலாகக் கொண்டவர்கள்; ஆடம்பரங்களையும் வீண்விளையாட்டுகளையும் அதிகமாக உகப்பவர்கள். இவர்களின் இவ்வலங்கோலச் செயல்களை பெருமானார் கண்டு மனம் சலிப்பார்கள்; அவர்களுக்கிடையே பிணக்குகள் ஏற்பட்டுவிடுமாயின் அவைகளை சமாதானஞ் செய்து வைப்பதற்கு தாங்களே முன்னின்று அரும்பாடுபடுவார்கள். இந் நற்குணங்களும், நற்செய்கைகளும் அரபி நாடெங்கும் பிரசித்திபெற்றிருந்தது.

பெருமானார் (ஸல்.) அவர்களின் 40-வது வயதில் இம்மகத்தான வேதம் அருளப்பட்டவுடன் அதனை ஜனங்கள்பால் எடுத்தோதினார்கள்; நன்னோக்கமும் நற்சிந்தனையும் உடையவர்கள் இதனை வரவேற்று பெருமானார் (ஸல்.) அவர்களை ஆண்டவனின் தூதரென்று ஒப்புக்கொண்டார்கள். பெருமானார் (ஸல்.) அவர்களுடைய உண்மைக்கு அவர்களின் வாழ்க்கையே பெரும் அத்தாக்ஷியாக இருந்தது. இந்நிலைமையில் விதண்டாவாதிகள் வம்புத்தனமாய், இவ்வேதம் நபிபெருமானார் (ஸல்.) அவர்களாலேயே இயற்றப்பெற்றதென்று பறைசாற்ற முற்பட்டார்கள். அவர்களின் இவ்வெண்ணத்தை அகற்றுவான்வேண்டி இறைவன்,

"நாம்நமது (நபியாகிய) அடியாருக்கு அருள் செய்திருக்கும் இ(வ்வேதத்)தில் நீங்கள் சந்தேகப்பட்டு (இது நம்மால் அருளப்பட்டதல்லவென்றும், நமது அடியார் முஹம்மது (ஸல்.) தானாகவே கற்பனை செய்து கொண்டாரென்றுங் கூறுகின்ற) நீங்கள் உண்மை சொல்பவர்களாயின் (இவ்வேதத்திலுள்ள) ஏதேனும் (மூன்று வசனங்களையுடைய சிறிய) ஒரு அத்தியாயத்தைப் போன்றதை (அமைத்துக்) கொண்டு வாருங்கள்" (என்று கூறியதுடன், பின்னும் அவர்களை நோக்கி "அவ்வாறு உங்களால் மாத்திரம் அமைக்க முடியாவிடில் உங்களுக்கு உதவியாக) அல்லாஹ்வைத் தவிர நீங்கள் உங்களை ஆமோதிப்பவர்களையும் (துணைக்கு) அமைத்துச் சேர்த்து (க் கொண்டு நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்தேனும் இதைப் போன்றதொரு அத்தியாயத்தை அமைத்து)க்கொண்டு வாருங்கள்" என்று கூறினான்.

இவ்வாறு இறைவன் அறைகூவி அழைத்ததைக்கண்ட இஸ்லாத்தின்விரோதிகள், இதைப்போல அமைக்க எவ்வளவோமுயற்சி எடுத்துக்கொண்டனர். எனினும் அது அவர்களால் சாத்தியப்படவேயில்லை. இம்மட்டோடே நின்றனரில்லை. அரபதேசத்தில் அக்காலை கவி கூறுவதிலும், காவியம் எழுதுவதிலும் நிகரற்றவர்களென்று கருதியிருந்த பலரை அழைத்து இவ்வேதத்திலுள்ள ஏதேனும் சிறியதொரு அத்தியாயத்தைப்போல அமைத்துத் தரும்படி கோறினார்கள். அவர்களும் அவ்வாறு செய்து முடிக்க அபார முயற்சி எடுத்துக்கொண்டனர். என்றாலும் அதுவும் குதிரைக் கொம்பாகவேதான் வந்து முடிந்தது. அவர்களில் ஒருசிலர் அவ்வாறு எழுதியும் பார்த்தனர்; அவர்களிலுள்ளவர்களே அதில் அநேகங் குற்றங் குறைகள் இருக்கின்றனவாதலால் அதனை திருவேதத்திற்கு எதிரிடையாகக் கொண்டு போவ

தற்கில்லை எனக்கூறி பின்னடைந்து விட்டனர். அவ்வாறு அவர்கள் அமைத்துள்ள வாக்கியங்களிற் பலவற்றை சரித்திர நூற்கள் காப்பாற்றிவைத்திருக்கின்றன. ஆகவே கலா வல்லுனர்கள், காவியங்கூறும் புலவர்கள் யாவராலும் அமைக்க முடியாத நிலைமையில், படிப்பின் வாசனையே அறியாத நபிபெருமானார் (ஸல்.) அவர்கள் தாங்களே சுயமே இவ்வேதத்தை இயற்றினார்களென்று கூறிக்கொண்டு திரிந்தது அவர்களின் மூடத்தன்மையேயன்றி வேறில்லை என்பது நன்கு ருஸுவாய்விட்டது.

அக்காலத்திலிருந்த அரபியர்களால் தான் அவ்விதம் அமைக்க முடியவில்லை என்பதல்ல; இவ்வேதம் அருளப்பெற்று இற்றைக்கு 1360 வருடங்களாயும் இதுவரை எதிர்மதவாதிகளில் எத்தனையோ பேர் அதனைச் செய்ய முயற்சித்தனர்; ஆனால் ஒருவராலும் அவ்வாறு செய்ய முடியாதுபோயிற்று. "அவ்விதம் ஒரு போதும் உங்களால் செய்யவே முடியாது." (அல்குர்ஆன்) என்று இறைவன் அறிவித்ததற் கேற்ப, இற்றையநாள்வரை ஒரு சிறு அத்தியாயத்தையும் ஒருவராலும் எழுதிக் காட்டவே முடியவில்லை. அவ்வாறே இனியும் யாரும் செய்ய முடியாதென்பது தெற்றனே புலனாகும் விஷயமாகும். சத்திய இஸ்லாத்திற் கெதிரிடையாய் கோடிக்கணக்கான திரவியங்களை செலவுசெய்யும் இதரமதவாதிகளுக்கு இவ்விஷயம் தெரியாததன்று. இச் செலன்ஜில் உலகம் தோல்வியுற்றிருக்கிறதென்பதை நன்குணர்ந்தே அன்னோர் இதரவழிகளில் இஸ்லாத்திற்கு எதிர்புரிந்து வருகின்றனர். ஆகவே மனிதர்களால் அமைக்கமுடியாத அவ்வளவு மேலான விதத்தில் அமைந்திருக்கும் இவ் வேதத்தின் அமைப்பே, இது இறைவனால் அருளப்பட்டதென்பதற்கு பிரத்தியட்சமான நித்திய சாக்ஷியாக இருக்கின்றதென்பதை தெளிவாகத்தெறிந்துக்கொள்ளலாம். இவ் வேதத்தின் அமைப்பப்போலவே இதில் கூறப்பெற்றுள்ள தத்துவங்களும் மிகமிக மேலான உன்னதம் பொருந்தியதாக இருக்கின்றன. ஒவ்வொரு அன்னிய மதத்தினரும் தங்கள் தங்கள் வேதந்தான் மேலானதென்றும், அதுவே மானிட வர்க்கத்தினருக்கு இன்றியமையாததென்றும் கூறிவந்தனர். ஆனால் தற்காலை அவ்வேதங்கள் சீர்திருத்தப்படவேண்டுமென்றும், அவரவர்களின் வேதவரம்பிற்குள் ளிருந்துகொண்டு உயிர் வாழ்வதே முடியாதகாரியமென்றும் கூற முற்பட்டு விட்டனர். எனவே அவர்கள் தங்களுடைய மதத்தை தற்கால நிலைமைக்கும் மனித இயற்கைக்கும் முற்போக்கான அபிவிர்த்திக்கும் பொருத்தமானவிதத்தில் திருத்தியமைக்கவேண்டுமெனக் கூறுகின்றனர். ஆனால் இன்றைக்கு அவர்கள் எதிர்பார்க்கும் சீர்திருத்தம், 1350 வருஷங்களுக்குமுன் திருக் குர்ஆனால் அறிவிக்கப்பட்ட சீர்திருத்தமாகவே காணப்படுகின்றது. பெயரளயில் இவ்வேதத்தை அவர்கள் விரும்பா விடினும் சீர்திருத்தமென்னும் புகல்பெயரை வைத்துக்கொண்டேனும் இவ்வேதத்தில்கூறப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு விடுகின்றனர். அவ்வளவு மேலான விதத்தில் அமைந்திருக்கும் உன்னதம் பொருந்திய இத்திருவேதம், தம்பக்தகோடிகளுக்கு தினே தினே புதியபுதிய கருத்துக்களையும் ஹிதோபதேசங்களையும் அறிவித்துக்கொண் டிலங்கா நிற்கின்றது.

இம்மாட்சிமைதங்கிய வேதம் பற்பலபாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட் டிருப்பினும், நம் தாய்பாஷையாம் செந்தமிழில் ஏகதேசத்தில் மொழிபெயர்க்கப்படாதிருப்பது முஸ்லிம்களின் பெரும் குறையேயாகும். அவ்வாறு தமிழில் மொழி பெயப்பதற்கு பலரும்முயற்சி செய்துவருகிறார்களென்பது நேயர்கள் அறிந்ததே. இத் திருவேதம் இவறவனால் அருளப்பட்டிருப்பதால் சொற்சுருக்கமும் மட்டிடமுடியாத கருத்தும் அமைந்ததாய்த் திகழ்கின்றது. இதனால்தான் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் இதன் முந்திய அத்தியாயமான "ஸூரத்துல் பாத்திஹா"வுக்கு விரிவுரையான வியாக்கியானம் செய்யப்புகின், எழுபது ஒட்டகம் சுமக்கும்படியான அளவு கிரந்தங்கள் எழுதிவிடுவேனென அறிவித்திருக்கின்றார்கள். திருவசனங்களுக்குப் போதியவிரிவுரையைக் கொண்டுதான் சாமான்யர்கள் அதன் கருத்துக்களைச் செவ்வனே தெரிந்துகொள்ள ஹேதுவாகயிருக்கும். இதை உன்னியே நமது சங்கத்தாரும் திருக்குர் ஆனின் விரிவான வியாக்கியானம் வெளியிட நாடினார்கள். இதற்கேற்ப இவ்வரும் மாசிகையின் நூன்முகத்தில் ஒவ்வொரு அத்தியாயத்தின் பதவுரை, பொழிப்புரை, விரிவுரை முதலானவைகள் நமூனாவாக வெளியிடப் பட்டுவந்தது. இந்நான்கு வருடங்களுக்கிறுதியில் 30-ல் ஒருபாக

மான "ஜுஸ்உ அம்மா" வரைமுடிவு பெற்றிருக்கின்றது. இதனை யாம் முன் மாதிரியாகவே உலமாக்கள் அறிஞர்கள் பார்வைக்கு வெளியிட்டு வந்துளோம். இதனை திருவேதத்தின் மூலபாஷையான அரபிப் பாஷையுடன் சேர்த்தே அச்சிடவேண்டியது மிக அவசியமாக யிருக்கின்றது. எங்களது உரைகளை உலமாக்களும் அறிஞர்களும் போற்றிப்புகழ்ந்து எழுதியிருப்பதோடு அல்லாஹ்த ஆலாவின் திருவஸனத்தின் மகாத்மியத்தை அறிந்துகொள்வதற்கு இவை சாலச்சிறந்ததாய் இருக்கிறதென்றும் தெரிவித்து வருவதோடு திருக்குர் ஆனின் சகலபாகங்களையும் மூலபாஷையுடன் இதே தோரணையில் அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென்று பலரும் பன்முறை நேரிலும் கடிதமூலமும் கேட்டுவருகின்றனர். நாமும் மாசிகையில் வெளியிடுவதை நிறுத்தி அவ்வாறே தனிக்கிரந்தமாக அச்சிட்டு வெளியிடுவதற்கு முயற்சித்து வருகிறோம்.

'ஹாரிதுல் அஃவர்' என்னும் சஹாபி அறிவிக்கிறார்கள்: நான் ஒருநாள் பள்ளிவாசலுக்குச் சென்றேன்; அங்கு ஜனங்கள் பலவாறான வீண் பேச்சுகளில் பராக்காயிருந்தனர்; அதனைப் பார்த்துவிட்டு ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்களிடஞ் சென்று விஷயத்தை அறிவித்தேன்; அவ்வாறு செய்கின்றார்களா வென்று ஹஸ்ரத் அவர்கள் கேட்டார்கள். அவ்வாறு தான் செய்கின்றார்களெனயான் தெரிவிக்கவே, ஹஸ்ரத் அவர்கள் கூறியதாவது:—பிற்காலத்தில் பலவாறான பித்னாக்கள் ஏற்படும், அதைவிட்டு மீட்சி பெறுவதற்குள்ள மார்க்கம் அல்லாஹ்த ஆலாவின் திரு வேதமாக யிருக்கும்; அதில் முன்னோர்களின் சரித்திரங்களும் பின்னால் நிகழ்பெறக் கூடிய சம்பவங்களும் உங்களுக்கிடையே ஏற்படவேண்டிய தீர்மானங்களும் அமைந்திருக்கின்றது; அதுவானது சத்தியம் அசத்தியம் இவைகளைப் பிரிக்கக்கூடியதாகும்; அதில் வீண்பேச்சுகள் எதுவுங் கிடையா; அதனை வெறுமையாய் விட்டு விட்டவர்களை அல்லாஹ்த ஆலா நாசப் படுத்திவிடுவான்; நேர்வழியை அதல்லாததினின்று தேடுவானாகில் அல்லாஹ்த ஆலா அவனை வழிகெட்டவனாக ஆக்கிவிடுவான்; அது அல்லாஹ்வின் பலம் பொருந்திய கயிறாகவும் நுண்ணிய போதனையாகவும் நேரான பாதையாகவும் இருக்கும்; கெட்ட எண்ணமுடையவர்களால் அதனைப் பேதகப்படுத்த முடியாது; நாவுகளினால் அதில் மற்றொன்றைக் கலந்துவிடவும் முடியாது; அதைக் கொண்டு அறிஞர்கள் வயிறு நிறைந்தவர்களாய் விடமாட்டார்கள்; அதனை மடக்கி மடக்கி ஓதுவதுகொண்டு அது பழையதாக ஆய்விடவுமாட்டாது; அதில் பொதிந்து கிடக்கும் அற்புத ஆச்சரியங்கள் முடிவுபெற்றுவிடவுமாட்டாது, அதனை ஜின்வர்க்கத்தினர் கேட்டவுடன், நேர்வழி காட்டக்கூடியதும், ஆச்சரியமானதுமான குர்ஆனை நாங்கள் கேள்வியுற்றோம்; இதோ அதைக்கொண்டு ஈமான் கொண்டுவிட்டோம் எனக் கூறினர்; குர்ஆனைக் கொண்டு பேசுபவன் உண்மையே பேசுபவனாகவும் அதன் கட்டளையை ஒழுகி நடப்பவன் நற்கூலி கொடுக்கப்படுபவனாகவும், அதைக் கொண்டு தீர்ப்பளிப்பவன், நீதஞ்செய்பவனாகவும் அதனளவில் ஜனங்களை அழைப்பவன் நேரான பாதையளவில் அழைப்பவனாகவும் ஆய்விடுகின்றான் என நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன் என்பதாகும். இந்த ஹதீதில் திருக் குர்ஆனின் மகாத்மியத்தையும், அதில் பொதிந்து கிடக்கும் தத்துவங்களையும், அதனைப் பின்பற்ற வேண்டிய அவசியத்தையும் நபி பெருமானார் (ஸல்.) அவர்களே விபரமாய் அறிவித்துள்ளார்கள். எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியுள்ள சகல விஷயங்களும் அதில் பொதிந்து கிடக்கிறதென்பதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லை. அரபிப் பாஷையில் திருக் குர்ஆனுக்கு தப்ஸீர் எழுதிய விரைவுரை கர்த்தாக்களும் இதனை விபரித்துக் கூறியிருக்கிறார்கள். இத்திருவேதத்தில் அமைந்துகிடக்கும் புதயல்களை நம் தமிழ்ப் பாஷையில், வெளிப்படுத்திக் காட்டக்கூடிய தப்ஸீர்-வியாக்கியான நூல் இல்லாதிருப்பது பெரும் குறையேயாகும். வியாக்கியான நூலில் திருவஸனங்களின் மொழிபெயர்ப்பு வெளியிடுவதோடு அத் திருவஸனங்களைக் குறித்து நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கும் வியாக்கியானங்களையும் வெளியிடல்வேண்டும்; மகான்களான இமாம்கள் அத் திருவஸனங்களிலிருந்து எங்கெந்த மஸ்அலாக்களை எடுத்தோதி யிருக்கின்றார்கள் என்னும் விபரங்களையும் குறிப்பிடல்வேண்டும்; முற்கால சரித்திரங்கள் அறிவிக்கப்படுமிடத்து அதன் விபரங்களையும் வெளியிடல்வேண்டும்; பூகோளம், ககோளம் இவைகளைப் பொறுத்து அறிவிக்கப்பட்டிருக்கு மிடத்தும் விபரிக்கப்படல்வேண்டும்; அதில் நேர்வழிபெற்ற அஹ்ல

சுன்னாக்களின் மத்ஹபுகளையும், வழிகெட்டவர்களின் கொள்கைகளையும் விவரித்து அறிவித்தல் வேண்டும். திருக் குர்ஆன் இஸ்லாத்தின் முதல் அத்தாட்சியாக யிருப்பதால் அதன் விரிதநுரையில் சகல விஷயங்களும் ஒருங்கே திரட்டப்படின் அதனைப் படிக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாத்தின் முக்கிய தத்துவார்த்தங்களை உணர்ந்தவராய் விடுவார். இத் தோரணையில் எழுதி முடிப்பதென்றால் மாபெரும் முயற்சியும் அளவற்ற பொருட்செலவும் ஏற்படுமென்பது யாவரும் அறிந்தவிஷயமே. இம் மாபெரும் காரியம் தமிழ் நாட்டிலுள்ள சகல முஸ்லிம்களின் உபகாரமின்றி பூர்த்தியடைய முடியாது. அவசியமும் அவசியமுமான இத் தேள்வையைப் பூர்த்திசெய்வதற்காக சகல முஸ்லிம்களும் பெரும் முயற்சி செய்வார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

இத்திருவேதம் அருளப்பட்ட மகத்தான ரமளான் மாதம் நம்மிடையே முன்னேக்கியிருக்கின்றது. இம்மாதத்தில் திருக் குர்ஆனை அதிகமாக ஓதும்படியும் அதன் கருத்துக்களை உணரும்படியும் ஏவப்பட்டிருக்கிறோம். அதற்கேற்ப நாம் மேலே குறிப்பிட்டவாறு நம் தாய் பாஷையில் தக்க வியாக்கியானங்களை வெளியிடுவதற்கு ஆவனவற்றைச் செய்ய எல்லா முஸ்லிம்களும் சிந்தனை செய்து பார்ப்பார்களாக. இத் தேவையைப் பூர்த்தி செய்வான்வேண்டி மக்களிடையே பெரும் பிரசாரஞ்செய் தாகவேண்டும்; அதற்காக உங்களின் இம்மாசிகை வாரந்தோறும் வெளிவந்து எல்லாரின்கரங்களிலும் அமைதல் வேண்டும். இவை எல்லாம் உங்களின் பேருபகாரத்தைப் பொருத்தே நிற்கின்றது. எல்லாம் வல்ல நாயன் சகல காரியங்களுக்கும் நல்லுதவி புரிவானாக.

அல்ஹதீது.

இப் பிரபஞ்சத்தின்கண் அல்லாஹ்தஆலாவின் திருவஸனங்களுக்குப் பின் பரிசுத்தமானதும் மாண்பு மிக்கதும் நேர்வழி பெற்றுய்யக்கூடியதுமான வசனங்கள் இரு உலக சிரேஷ்டர் நபிகள்பிரான் (ஸல்.) அவர்களுடைய திருவஸனங்களாக இருக்கும். நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் ஆண்டவனால் அருளப்படும் வஹியை அஹிவிக்கக் கூடியவர்களாக இருப்பதால் அவர்களின் திருவாயும் பரிசுத்தத்தன்மை வாய்ந்ததாகவே யிருந்தது. இதனாலேயே அல்லாஹ்தஆலா "அவர் இஷ்டப்படி எதையும் பேசமாட்டார்; அவர் பேசுவது (தன்னால்) அறிவிக்கப்பட்ட வஹ்யாகவே யிருக்கும்" என அருள் செய்திருக்கிறான். எனவே நபி பெருமானார்(ஸல்) அவர்களுடைய ஹதீதுகளின்படி ஒழுகி நடப்பது முஸ்லிம்கள் மீது கடமையாக இருக்கின்றது. நபிகள் திலகம் (ஸல்.) அவர்களினது ஒவ்வொருவார்த்தையும் ஒவ்வொருநடப்பும் சமிக்கையும் மாபெரும் கருத்தமைந்ததாகயிருந்து. அல்லாஹ்தஆலா நபிபெருமானார் (ஸல்.) அவர்களின் குணங்களை வெகுவாய்ச் சிலாகித்து குர்ஆன் ஷரீபில் கூறியிருப்பதால், அவர்களின் குணங்கள் யாதாக யிருக்குமென்று ஹஸ்ரத் ஆயிஷாநாயகி (ரலி.) அவர்களிடம் வினவப்பட்டபொழுது, அக்குணங்கள் திருக்குர்ஆனாக இருந்ததென பதிலளித்திருக்கிறார்கள். எனவே, நபிபெருமானார் சத்தியத் தூதர் (ஸல்.) அவர்களுடைய நடக்கைகளும் உபதேசங்களும் குர்ஆனுக்கு ஒற்றுமையாகவும் அதற்கு வியாக்கியானமாகவும் இருந்ததென்பது வெள்ளிடை. ஆகவே நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களின் ஹதீதுகளை நன்கு தெரிந்து அதன்படி நடந்து வருவதானது, இம்மையிலும் மறுமையிலும் மேன்மையும் உயரியகீர்த்தியும் அளிக்கத்தக்கதாகயிருக்கின்றது. இதனாலேயே எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், என்னுடைய உம்மத்துகளில் யாரேனும் 40 ஹதீதுக்களை மனனஞ்செய்வாராயின் (கியாமத்) மறுமைநாளில் புக்ஹாக்களான அறிஞர்களின் கூட்டத்தில் அவர் எழுப்பப்படுவாரெனக் கூறியிருக்கின்றார்கள். இதன் கருத்தென்னவெனின், முஸ்லிம்களுக்குத் தேவையான கலைகளும் ஞானங்களும் குர்ஆன் ஷரீபிலும் ஹதீதிலும் நிறைந்துகிடக்கிறதென்பதாகும்.



ரமளான் முபாரக்.

இஸ்லாத்தில், ரமளான் மாதம் மாட்சிமையும் விசேஷத் தன்மையும் பொருந்திய தென்பது யாவருமறிந்ததே. சங்கை பொருந்திய இம் மாதத்தில் மகத்தான அநேக சம்பவங்கள் நிகழ்பெற்றிருக்கின்றன: இதே மாதத்தில்தான் திருக்குர்ஆன் இறக்கிவைக்கப்பட்டது; இஸ்லாத்திற்கு ஆரம்ப யுத்தமான 'பத்ர்' யுத்தம் இதே மாதத்தில்தான் நிகழ்பெற்று எம்பெருமானார் நபிய்ய கரீம் (ஸல்.) அவர்கள் ஜெயம் பெற்றார்கள்; மக்கா முஅல்லமாவின் மீது படை எடுத்து ஜெயபேரிகை கொண்டு வெற்றிக் கொடிநாட்டி அதனைக் கைவசப் படுத்திக்கொண்டார்கள். இன்னும் இம் மாதத்தின் முக்கிய விசேஷ மென்னவெனின், கஃபத்துல்லாஹ்விலும் அதற்குச் சூளாலும் வைக்கப்பட்டு வணக்கம் புரியப்பட்டுவந்த விக்ரகங்களை அப்புறப்படுத்தி சுத்தி செய்யப்பட்டதும் இதே மாதத்தில்தான்; இதே சமயத்தில்தான் "சத்தியம் வந்து விட்டது, அசத்தியம் வீழ்ந்து விட்டது, அசத்தியம் விழக் கூடியதாகவே இருக்கிறது" என்னும் மனம் கவரத்தக்க தொனி எழுப்பப்பட்டது. இதுமட்டு மென்ன? இயம்பற்கேலா இன்னும் எத்தனையோ மகத்தானவிஷயங்களினாலும் இம்மாதம் சிறப்புடையதாகத் திகழ்கின்றது. எனவே இதன் மகத்துவம் பொருந்திய விஷேஷங்களை எழுதுவதற்கு இச்சிற்றேடு இடந்தராததாகையால் அதனை விடுத்தனம். இச் சங்கை பொருந்திய மாதத்தில் நோன்பு நோற்கவேண்டியதை அல்லாஹ்த ஆலா உங்கள்மீது கடமையாக்கியுள்ளான். மேலும், பறக்கத்துடைய ரமளான் மாதம் வந்து விடுமாகில் அல்லாஹ்த ஆலா தன் கிருபையைக் கொண்டு உங்களளவில் நோக்குகின்றான்; உங்கள் பாவங்கள் யாவற்றையும் பொறுத்துக் கொள்கின்றான்; உங்கள் பிரார்த்தனையை ஒப்புக்கொள்கின்றான்; நீங்கள் அம் மாதத்தின் மீது எவ்வாறான விருப்பங் கொண்டு அப் புண்ணிய மிக்க கண்ணிய மாதத்தில் நற்கருமங்கள் புரிகின்றீர்கள் என்று பார்ப்பதுடன் மலக்குகளிடமும் உங்களைப்பற்றிச் சிலாகித்து, தன்னுடைய அடியார்கள் தனக்காகவே அவர்களுக் கேற்பட்டுள்ள தாகம் பசி ஆசை முதலியவைகளை விட்டு தனக்கு வணக்கம் புரிவதில் ஈடுபட்டிருப்பதைக் குறிப்பிடுகின்றானென்றும் எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, மகத்துவம் பொருந்திய இம் மாதத்தில் நற்காரியங்களைச் செய்து புண்ணியத்தைப் பெற்றுக் கொள்ளாதவன் பாக்கிய மிழந்தவனாகயிருக்கும் என்பதை நன்கு தெரிந்து கொள்கிறோம். இதுவன்றி நபி பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்கள் உம்மத்தோர்களாகிய நம்மனோருக்கு இம் மாதத்தில் நற்கருமங்கள் புரியும்படி கட்டளையிட்டு வந்ததுடன் தாங்களும் நற்கருமங்கள் புரிவதெற்கென்றே இம் மாதத்தைத் தத்தம்செய்து வைத்திருந்தார்கள். எனவே, இம்மாதம் முழுவதிலும்

நோன்பு நோற்குமாறு கட்டளையிடப் பட்டிருக்கிறோம். ஆனால் நோன்பின் நன்மையையும் அதன் மகாத்மியத் தையும் உணராத அநேகர், அதனை அலக்ஷியமாக விட்டு விடுகின்றனர். இன்றையதினம் உலகத்திலுள்ள வைத் திய நிபுணர்கள், உபவாசத்தில் அநேக நன்மையுண்டென்றும் ஒரு சில முக்கிய வியாதிகளுக்கு அதுவே தக்க ஒளடத மாக இருக்கிறதென்றும் தங்கள் ஆராய்ச்சி வாயிலாய்க் கண்டுபிடித்தி ருக்கின்றனர். சர்வ வஸ்துக்களையும் சிருஷ்டிக்கும் நாயன், இதற்காகவே மானிடர்கள் நோன்பை அனுஷ்டிக்க வேண்டியது என்று எல்லா வேதங்களி லும் அருள் செய்திருக்கின்றான். ஆகவே இது விஷயத்தில் முஸ்லிம்கள் அசட்டை யாகயிருந்து விடாது யாவரும் நோன்பு நோற்று அதன் இகபர நன்மையைப் பெற்றுக் கொள்வார்களாக.

நோன்பின் விபரம்.

நோன்பு கொள்வதாக நிச்சயித்து வைகறை வேளையிலிருந்து சூரியாஸ்தமனம் வரை யில் உண்பதையும், பருகுவதையும், காம நுகர்ச்சியையும் விடுத்திருப்பதே நோன்பா கும். அந்நோன்புகள் பர்லு, வாஜிபு, நபில் மக்றூஹ்தஹ்ரீம், மக்றூஹ்தன்ஜீஹ் எனப் படும்.

1. பர்லான நோன்பு இருவகை. ரமளான் மாதத்தின் நோன்பு ஒருவகை. ஷை மாதத் தில் தவறிவிட்ட (களாவான) நோன்பு மற் றொரு வகை. இதை இன்னகாலத்தில்தான் நிறை வேற்ற வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனால், முதல்வகையான ரமளான் மாதத் தின் (அதாவான) நோன்போ, ரமளான் மாத திலேயே நிறைவேற்றப்படல் வேண்டும்.

2. வாஜிபான நோன்பு. இதுவும் இருவகை யாகும். குறிப்பிட்ட ஒரு மாதத்தில் அல் லது ஒரு தினத்தில், நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய்யப்பட்ட நோன்பு ஒரு வகை. இத்தகைய நோன்புகளை அந்தந்த காலத்திலேயே நிறைவேற்றல் வேண்டும். தேதியோ, மாதமோ, எதுவும் குறிப்பிடா மல், நோன்பு நோற்பதாக வேண்டுதல் செய் யப்பட்ட நோன்பு மற்றொருவகை. இதை ரமளானல்லாத எக்காலத்திலும் நிறைவேற்ற லாம்.

3. நபில் நோன்பு. இதுவும் இருவகைப் படும். முஹர்ரம் மாதத்தின் ஆஷூரா நோன்பு கள் போன்ற சுன்னத்தான நோன்புகள் ஒரு வகை. பிரதி மாதந்தோறும் 13,14,15-ஆம் தேதிகளில் நோற்கப்படும் 'அய்யாமுல்பீள்' போன்ற முஸ்தஹப்பான நோன்புகள் மற் றொரு வகை.

4. இரண்டு ஈதுப் பெருநாள்கள், அய்யா முத்தஷ்ரீக்காகிய துல்ஹஜ்ஜு மாதத்தின் 11, 12, 13 ஆக இவ்வைந்து நாள்களில் நோற்கப் படும் நோன்பு மக்றூஹ்தஹ்ரீமியாகும்.

5. முஹர்ரம்மீ பத்தாந்தேதி மாத்திரம் தனியே நோற்கும் நோன்பு மக்றூஹ்தன்ஜீஹ் ஆகும்.

நோன்புநோற்கக் கடமைப்பட்டவர்கள்

சித்தசுவாதீனம் உள்ளவர்களாய், பருவ மடைந்தவர்களான ஆண் பெண் ஆகிய இரு பாலரும் நோன்பு நோற்கக் கடமைப்பட்ட வர் ஆவர். மாதவிடாய், பேற்றுத்தொடக்கு அதாவது ஹைலு, நிபாஸ் ஆகிய அசந்தர்ப் பம் கொண்ட பெண்கள் அக்காலத்தில் நோன்பு நோற்கக்கூடாது. ஆனால் அக்காலத் தில் விடப்பட்ட நோன்புகளை ரமளான் மாத மல்லாத காலத்தில் நோற்கவேண்டும். பாலர், பித்தர், பிணியாளர், பிரயாணி (முஸாபிர்) நோன்புநோற்க சக்தியற்ற வயோதிகர், ஆகிய இவர்கள் நோன்பு நோற்பது கடமையல்ல. ஆனால் மீளா வியாதியஸ்தரும், நோன்பு நோற்கச் சக்தி அற்ற வயோதிகரும் ரமளான்

மாதத்தின் ஒவ்வொரு நாளிலும் (முத்து) பரிகார தர்மம் கொடுப்பது வாஜிபு. பிரயாணிகள் நோன்பு நோற்பது கடமையில்லையானுலும், அவர்கள் நோன்பு நோற்ருல் நிறைவேறி விடும்.

நோன்பின் நிய்யது

(ஹனபி மத்ஹப் பிரகாரம்)

“நான் நோன்புவைப்பேன்” என தினசரி மனதில் நிர்ணயஞ்செய்து கொள்வதற்கு நோன்பின் நிய்யத்து என்று பெயர். இவ்வாறு நிய்யத்துச் செய்வது பர்லு. அதைச் சொல்லுவது சுன்னத்து. ஆதலால், நோன்பு நோற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் விடியற்காலத்தில், அதாவது ஸஹர் நேரத்தில், ஒருவன் சாப்பிடுவானுகில், அதுவே நிய்யத்தாகிவிடும். “நான் நாளை நோன்பு வைப்பேன் இன்ஷா அல்லாஹ்” என்று சொல்வானுகில் அதுவும் நோன்பின் நிய்யத்தாகும்.

சூரியாஸ்தமனம் முதல் சூரியன் உச்சியில் வரும்வரை, அதாவது ஷரஈ நடுப்பகல் வரையில், நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்து கொள்ளலாம். ஆகையால் ஷரஈ நடுப்பகலிலிருந்து சூரியாஸ்தமனத்திற்குள் நிய்யத்துச் செய்தல் கூடாது. ரமளான் மாதத்தில் வேறெந்த நோன்பிற்கும் நிய்யத்துச் செய்தல் ஆகாது. அவ்வாறு நிய்யத்துச்செய்து நோன்பு நோற்ருலும் அவன் நிய்யத்துச் செய்த நோன்பு நிறைவேருது. ஆனல் அந்த நோன்பு ரமளான் மாதத்தின் பர்லான நோன்பாக நிறைவேறிவிடும். ஆனல் பிரயாணிகள் மீது ரமளான் மாத நோன்பு நோற்பது கடமையல்லவாதலால் அவர்கள் பிரயாணியாக இருக்குங்காலத்தில் வேறெந்த நோன்பைக் குறித்து நிய்யத்துச் செய்தாலும், அவர்கள் நிய்யத்துச் செய்த நோன்பு நிறைவேறிவிடும் எனினும், பிரயாணிகள் ரமளான் மாதத்தில் ரமளான் மாதத்தைய பர்லான நோன்பையே நிய்யத்துச் செய்வது உத்தமமாகும்.

[குறிப்பு :—ஒரு மனிதன் சாதாரணமாக மூன்று நாட்கள் சிரமமில்லாமல் நடந்து செல்லக் கூடிய தூரத்திற்காவது அதற்கு அப்பாலாவது செல்லுவானுகில் ஷரீஅத்துப்படி பிரயாணியாக (முசாபிராக) கருதப்படுவான். இந்த தூரத்தை சுமார் 48 மைல் என மேதாவிகள் கணித்துள்ளனர். ஆகையால் 48 மைல் தூரத்திலும் அதற்கப்பாலுமுள்ள எந்த ஊருக்கும் ஒருவன் சென்று, 15 நாட்களுக்குள்ளாகத் திரும்பி விடுவதாக இருந்தால், அவன் முஸாபிராகி விடுவான். இத்தகையோர் பிராணியாக இருக்குங் காலத்தில் ரமளான் மாதத்தின் பர்ளான நோன்பை நோற்பது அவசியம் அன்று. அம்மாதத்தில் நோன்பு நோற்ருல் அது பர்ளாக நிறைவேறிவிடும். அவ்வாறு நோற்காதிருந்தால் இதர காலத்தில் அதைக் களாச் செய்யவேண்டும். பிரயாணிகள் கஸர் தொழுவதற்கும் இதுவே கணக்கு.]

ஸஹர் செய்வது

நடுநிசிக்குப்பின் கிழக்கு வெளுப்பதற்குள் நோன்பு நோற்கும் நிய்யத்துடன் உணவருந்துவதற்கு ‘ஸஹர்’ செய்தல் என்று பெயர். கிழக்கு வெளுப்பதற்கு முன்னதாகவே, ஒருவன் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்துவிட்டாலும் அதற்குப்பின் கிழக்கு வெளுக்கும் வரை உண்ணவும் பருகவும் செய்யலாம்; நோன்புக்கு முரண்பட்ட மற்றெல்லாக் காரியங்களையுங் கூடச் செய்யலாம். கிழக்கு வெளுத்ததும் அவைகளில் எதையும் செய்யக்கூடாது “நீங்கள் ஸஹர் செய்யுங்கள்; அதனுல் பறகத் திருக்கிறது” என நபிகள் பிரான் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்ருர்கள். கடைசி நேரத்தில் ஸஹர் செய்வது விரும்பத்தக்கதாகும். (முஸ்தஹப்பு) ஆனல் கிழக்கு வெளுத்து விடுமோ என்று ஐயம் உண்டாகும் வரையில் அவ்வளவுநேரம் ஸஹர் செய்வதைப் பிற்படுத்துவது வெறுக்கத்தக்கது (மக்ரூஹ்) ஆதலால் அவ்வாறு சந்தேக மேற்பட்டபின், உண்டி கொள்ளாமலிருப்பது நல்லதாம். அவ்வாறு சாப்பிட்டாலும் நோன்பு நிறைவேறி விடும். ஆனல் கிழக்கு வெளுத்தபின்பு சாப்பிட்டதாகப் பின்னல் வெளியாகின் நோன்பு கைகூடாது; அதைத் திரும்ப நோற்பது வாஜிபு.

‘ஸஹர், செய்வதற்கு ஏற்ற நேரத்தை அறிவிப்பதற்காகச் சில விடங்களில் நகாரா’ அடிப்பதுபோன்ற அறிக்கைகள் செய்யப்படும். அவைகள் சரியான நேரத்தில் ஒழுங்காகச் செய்யப்படுவதாக இருந்தால் அவைகளை அனுசரித்து ‘ஸஹர்’ செய்யலாம். சரியான நேரம் தவறி அறிவிக்கப்படுவதாகச் சந்தேகம் ஏற்

பட்டால் அவைகளை அனுசரிக்கக் கூடாது. இராக்காலங்களில் மனிதர்களின் அரவம் கேட்கும்போது சேவல்களும் கூவுவது வழக்கமாக யிருப்பதால் அவைகளை அனுசரித்து 'ஸஹர்' செய்யக் கூடாது எனச் சிலர் கூறியிருக்கிறார்கள் ஆதலால் அதை அனுசரிக்காதிருப்பதே உத்தமம்.

நோன்பு திறத்தல்

சூரியாஸ்த மனத்திற்குப் பின் நோன்பை விடும் நிய்யத்துடன் ஏதேனும் ஒரு வஸ்துவைப் புசிப்பதற்கு, நோன்புதிறத்தல் என்று பெயர். இதற்கு 'இப்தார்' என அறபியில் கூறுவர். சூரியாஸ்தமனத்திற்குப் பின், மக்ரிப் தொழுவதற்கு முன், ஏதேனும் ஒரு வஸ்த்துவை நோன்பைவிடும் எண்ணத்துடன் புசிப்பது சுன்னத்து, "சீக்கிரம் நோன்பைத் திறப்பவன் எனக்கு அதிகப் பிரியமானவன்" என நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதால், சூரியாஸ்தமனம் ஆனதும் தீவிரமாக நோன்பு திறக்கவேண்டும்.

நோன்பு திறக்கும்போது, "யா அல்லாஹ்! நான் உனக்காகவே நோன்பிருந்தேன்; உன்னையே விசுவாசித்தேன் (ஈமான் கொண்டேன்); உன்னையே நம்பினேன்; நீ கொடுத்த இரணத்தைக் கொண்டே நோன்பு திறக்கிறேன்; நாளைக்கு என்மீதிருக்கும் றமளான்மாத நோன்பை நோக்க நாடுகின்றேன்; ஆதலால், யா அல்லாஹ்! நான் முன் செய்த பாவங்களையும் பின் செய்யக் கூடிய பாவங்களையும் மன்னித்தருள்க!" என்று இறைவனைப் பிரார்த்திப்பது சுன்னத்து. இவ்வாறு துஆ ஓதுவதிலேயே, மறுநாள் நோன்பு நோற்பதாகக் கூறப்படுவதால், மறுநாள் நோன்பிற்கெனப் பிரத்தியேகமாக நிய்யத்துச் செய்யவேண்டுமென்ற அவசியம் கிடையாது. ஆதலால் பிரத்தியேக நிய்யத்துச் செய்யாவிட்டாலும், மறுநாள் நோன்பு நிறைவேறிவிடும்.

நோன்பாளி நோன்பு திறக்கும்போது கேட்கும் துஆ ஒப்புக்கொள்ளப்படுவதால், தனக்கு அவசியமானதை அல்லாஹ்தஆலாவிடம் கேட்டுக்கொள்ளலாம். நோன்பு திறக்கும்போது வயிறு நிரம்பச் சாப்பிடலாகாது. அவ்வாறு சாப்பிடுவதால், நோன்பினாலேற்படும் பலனில்லாது போவதுடன் வியாதிவருவதற்கும் அது காரணமாகும். நபிகள் நாயகம்(ஸல்.)அவர்கள் மூன்றுபேரீச்சம் பழங்களைப் புசித்து நோன்பு திறந்திருக்கிறார்கள். தண்ணீரைமாத்திரம் அருந்தியும் நோன்புதிறக்கலாம். சூரியாஸ்தமனமாகிவிட்டதென நிச்சயமாகத்தெரியும் முன் நோன்பு திறத்தல்கூடாது. அவ்வாறு நிச்சயமாகத் தெரியாமல் சந்தேகமாக இருக்கும்நேரத்தில் நோன்பு திறந்தால் அதைக்களாச் செய்ய வேண்டும். வானத்திலே மப்பு மந்தாரங் காரணமாக சூரியாஸ்தமன நேரம் துலங்காவிட்டால் தாமதித்து நோன்பு திறக்கவேண்டும். சூரியாஸ்தமனமாகி விட்டதெனத் திட்டமாகத் தெரிந்தால், ஆகாயத்தில் மேகமுள்ள காலத்திலுங்கூட, தாமதிக்காது நோன்பைத் திறக்கலாம். சந்தேகமானநேரத்தில் நோன்பைத் திறந்து, சூரியாஸ்த மனத்திற்கு முன்னதாகவே நோன்பு திறந்ததாகப் பின்னால் வெளியானால் அந்த நோன்பைக் களாச் செய்வதுடன் கப்பாறாவும் செய்யவேண்டும். அதாவது, நோன்பை விட்டக் குற்றத்திற்குப் பரிகாரமும் செய்யவேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

றமளான் மாதத்தில் தினந்தோறும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்யவேண்டும். பொழுதடைந்ததிலிருந்து கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்வதும், பர்ளான நோன்புஎன்றும், களாவான நோன்பு என்றும் விவரமாகக் குறிப்பிடுவதும், கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியாஸ்தமனமாகும் வரையில் நோன்பை முறிக்கக் கூடியவைகளைச் செய்யாம லிருப்பதும், நோன்பின் நிய்யத்துகளுக்கு ஷர்த்தாகும்.

ரமளான் மாதம் முழுதும் நோன்பு நோற்பதாக, றமளான் மாதத்தின் முதல் இரவிலேயே நிய்யத்துச் செய்தால் அன்றைய ஒரு நோன்பு மாத்திரமே அந்த நிய்யத்தினால் நிறைவேறும். ஆதலால், ஒவ்வொரு நாளிலும் தனித்தனியே நிய்யத்துச் செய்தல் வேண்டும். ஆயினும் மாத ஆரம்பத்திலேயே அம்மாதம் முழுதும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச்செய்வது சுன்னத்து. ஏனெனில், நோன்பாளி ஓரிரவில் நிய்யத்துச்செய்ய தற்செயலாக மறந்துவிட்டால், அம்மாத ஆரம்பத்தில் செய்த நிய்யத்தின் காரணமாக

மாலிக் மத்ஹபின்படி அந்த நோன்பு நிறைவேறிவிடும். கிழக்கு வெளுப்பதற்குள் நிய்யத்துச் செய்ய மறந்துவிட்டாலும், அதற்குப்பின் ஷராஈ நடுப்பகல் வரை நோன்பு நோற்பதாக நிய்த்துச் செய்துகொள்ளவாம். இதனால், ஹனபி மத்ஹபின்படி அன்றைய நோன்பு நிறைவேறி விடும். ஆதலால், ஹனபி அல்லது மாலிக்கி மத்ஹபின்படி அவனுக்கு நோன்பு கிடைக்கவேண்டுமானால், இன்ன மத்ஹபைப் பின்பற்றி நோன்பு நோற்கிறேன், என நிய்யத்துச்செய்துகொள்வது அவசியமாகும். அந்த நிய்யத்தைச் சொல்லுவது விரும்பத்தக்கதாகும். (முஸ்தஹப்பு). "என்பேரில் கடமையான றமளான் மாதத்தின் நோன்பை அல்லாஹுதஆலாவுக்காக நாளை நோற்கிறேன்" என்று நிய்யத்துச் செய்யவேண்டும். பிறகு "அல்லாஹு லாஇலாஹ இல்லாஹுவல் ஹைய்யுல் கைய்யூம் அலாகுல்லி நப்ஸின் பிமா கஸபத்" என்று ஏழுமுறை ஓதுவது சுன்னத்து. இவ்வாறு செய்வது பூரணமான நிய்யத்தாகும்.

நோன்பை முறிக்கும் விஷயங்கள்

(ஹனபிமத்ஹபுப் பிரகாரம்)

உணவாக உபயோகிக்கக் கூடாத கல், மண், கடிதம், வெள்ளி, பித்தளை, தங்கம், பொன் போன்ற வஸ்துக்களை உட்கொண்டாலும், நோன்பை விடுவதற்கு ஆகுமான காரணங்களாகிய வியாதி, பிரயாணம் முதலியவைகளை உத்தேசித்து ஆகாரம் அருந்தினாலும், வாய்க் கொப்பளிக்கும்போதும், நாசிக்கு நீர் செலுத்தும்போதும் தவறுதலாகத் தண்ணீர் உள்ளே போய்விட்டாலும், மற்றவர்களின் கட்டாயத்தின்பேரில் பயந்துகொண்டு நோன்பை முறித்தாலும், மூக்கு வயிறு தலை போன்ற அவயங்களில் புரைவைத்திருக்கும் புண்களிலே எண்ணெய், மருந்து முதலியவைகளை ஊற்ற அவைகள் மூளை அல்லது வயிற்றினுள்ளே சென்றாலும், கிழக்கு வெளுத்தது தெரியாமல் இன்னுஞ் சிறிது நேரம் இருக்கிறதென்று எண்ணிக்கொண்டு கிழக்கு வெளுத்தபின் சாப்பிட்டாலும், சூரியாஸ்தமனத்திற்கு முன் சூரியாஸ்தமனமாகி விட்டதென்று எண்ணிக்கொண்டு தவறுதலாக நோன்பைத் திறந்துவிட்டாலும், வெற்றிலை, புகையிலை போன்ற பொருள்களைத் தின்றாலும், மூக்குப் பொடி போட்டாலும், காதினுள் எண்ணெய் வார்த்துக் கொண்டாலும், தூக்கத்திலிருக்கும் போது ஏதேனும் வஸ்துக்களைத் தின்றுவிட்டாலும், தான் நோன்பிருக்கிற ஞாபகம் இல்லாமல் காமநுகர்ச்சி கொண்டாலும், பற்களுக்கு இடையிலுள்ள பருமனுள்ள வஸ்துக்களைக் கிழக்கு வெளுத்தபின் விழுங்கினாலும், பற்களுக்கு மத்தியிலுள்ள கடலைப் பருமனுக்குச் சிறியதான வஸ்துக்களை எடுத்து மறுபடியும் விழுங்கினாலும், நோன்பு முறிந்துவிடும். ஆனால், கப்பாறு வாஜிபில்லை.

ஒரு நோன்பாளி ஞாபகமில்லாமல் சாப்பிடுவதால் நோன்பு முறியாது. ஆனால் அவ்விதம் செய்ததால் நோன்பு முறிந்துவிட்டதென நினைத்து, பின்பு சாப்பிட்டாலும், பானம் அருந்தினாலும், நோன்பு முறிந்துவிடும்; அதைக் களாச் செய்யவேண்டும்; ஆனால் கப்பாறு வாஜிபில்லை. நித்திரையில் இந்திரிய ஸ்கலிதமானாலும், தாடி மீசைகளுக்கு எண்ணெய் தடவினாலும், (மிஸ்வாக்கு) பல் குச்சியினால் பல் விளக்கினாலும் நோன்பு முறியாது. ஆனால் அதுபற்றி நோன்பு முறிந்துவிட்டதென நினைத்துக்கொண்டு பின்பு சாப்பிட்டாலும், வேறு வஸ்துக்களைப் புசித்தாலும் பருகினாலும் நோன்பு முறிந்துபோவதுடன் கப்பாறுக் கொடுப்பதும் வாஜிபு. ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு நோன்பு முறிந்துபோகுமாயின், அந்த மாதத்தின் கண்ணியத்தை உத்தேசித்து, பகலில் பாக்கியுள்ள நேரங்களில் சாப்பிடாமலும் பருகாமலும் இருப்பது வாஜிப். றமளான் மாதத்தில் நோன்பாளி, பிறருடைய நிர்ப்பந்தமின்றி தனது மனப்பூர்வமாக நோன்பை முறித்தாலும், நோன்பாளி என்பது ஞாபகமிருக்க காமநுகர்ச்சி கொண்டாலும் நோன்பு முறிந்துபோவதுடன் கப்பாறுக்கொடுப்பதும் வாஜிபாகும். அரிசிமா, கொள்ளு, உளுந்து முதலியவைகளை வேகவைக்காமல் பச்சையாகத்தின்றால் நோன்பு முறிந்துவிடும். ஆனால், கப்பாறுக் கொடுப்பது வாஜிபல்ல. எள்ளை வேகவைக்காமல் தின்னும் வழக்கமிருப்பதால் ஓர் எள்ளை வேண்டுமென்று அப்படியே விழுங்கின் நோன்பு முறிந்துபோவதுடன் கப்பாறுக் கொடுப்பதும் வாஜிபு. ஆனால் ஒரு எள்ளை நன்றாய் மென்றுவிடுவதால், அது பற்களின்

இடையே நின்று விடுவதற்கு இடமிருப்பது பற்றி ஓர் எள்ளை மெல்லுவதால் நோன்புமுறியாது. ஆனால் அவ்வாறு மென்ற எள்ளின் சுவை தொண்டைக்குச் சென்றுவிட்டதாகத் தெரிந்தால் நோன்பு முறிந்துவிடும். மேலும் அவ்வாறு மெல்லும்போது கொஞ்ச பாகம் மாத்திரம் உட்சென்று விடுவதால் நோன்பு முறிந்துவிடு மாயினும் கப்பாரு வாஜிபில்லை.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்.)

கிழக்கு வெளுத்ததிலிருந்து பொழுது அஸ்த்தமிப்பதற்குள் காம நுகர்ச்சி கொள்ளுதல், தனக்கு விவாகஞ் செய்துகொள்வதற்கு மார்க்கச் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட (ஹலாலான) பெண்களைத் திரையில்லாமல் தொட்டு அதனால் இந்திரியம் வெளியாதல், வேண்டுமென வலுவில் வாந்தி செய்தல், ஒளுச்செய்யும்பொழுது அதிகமாக வாய் கொப்பளித்து அதனால் தண்ணீர் உட்செல்லல், ஸ்நானஞ் செய்கையில் தண்ணீருக்குள் மூழ்கி அதனால் துவாரத்திற்குள் தண்ணீர் செல்லுதல், காரல் முதலியவை நம் தொண்டையைவிட்டு நீங்கி வந்தபின் அவற்றை மறுபடியும் விழுங்குதல், வாயிலிருக்கிற இரத்தம் முதலியவைகளைத் துப்பி வாயைச் சுத்திசெய்வதற்கு முன் உமிழ்நீரை விழுங்குதல், சரீரத்தின் உட்புறம் வரையில் துவாரங்களின் வழியே கண்ணுக்குப் புலப்படக்கூடிய பொருள்கள் உட்செல்லுதல் ஆகிய இவைகளால் நோன்பு முறிந்துபோம். புதிதாக இஸ்லாம் மதத்தில் சேர்ந்தவர், அல்லது நோன்பு சம்பந்தமான விதிவிலக்குகளை அறியாதவர் மேற்கண்ட காரியங்களைத் தவறாகச் செய்துவிட்டால் அது மன்னிக்கப்படும்.

நோன்பை முறிக்காதவைகள்

(ஹனபி மத்ஹப் பிரகாரம்)

பொய்யுரைத்தல் புறங்கூறல் முதலியன நோன்பை முறிக்கா. ஆனால் பொய்யுரை பகர்தல், புறங்கூறல் முதலிய கெட்டவழக்கங்களை நீக்காவிடில் நோன்பின் முக்கிய நோக்கமாகிய அகச்சுத்தி சித்தி பெறாது. ஆதலின் மேற்கூறிய செயல்களால் நோன்பு முறியாவிட்டாலும் நோன்பின் பயன் இல்லாமல் போம் என மார்க்க சட்ட அறிஞர்களான பிக்ஹுஉடைய உலமாக்கள் கூறி இருக்கின்றனர். நோன்பை முறிக்கக்கூடிய காரியங்களாகிய சாப்பிடுதல், குடித்தல், காம நுகர்ச்சி கொள்ளுதல் போன்ற காரியங்களை நோன்பாளி என்ற ஞாபகமில்லாமல் செய்துவிடுதல், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், ஸ்நானஞ்செய்தல் ஆகிய இவற்றால் நோன்பு முறியாது. காதுக்குள் தண்ணீர் போய்விட்டாலும், வாய் நிறம்ப இல்லாமல் கொஞ்சமாக வந்த வாந்தியை நோன்பாளி என்னும் ஞாபகமிருக்க விழுங்கிவிட்டாலும், ஈ தூசு முதலிய அற்ப வஸ்துக்கள் தவறி வாய்க்குட் சென்றுவிட்டாலும், மருந்துக்களை இடிக்கும்போது உண்டாகும் காரங்கள், தானியங்களை அறைக்கும்போது உண்டாகும் தூசுகள் முதலியன வாய்க்குள் சென்றாலும், பற்களுக்கு இடையிலிருந்து உதிரம் வெளிப்பட்டாலும், பெண்களை இச்சையுடன் பார்ப்பதால் (தொடுவதாலல்ல) இந்திரியம் வெளிப்பட்டாலும், மததர்மப்படி நீராடக் கடமைப்பட்டவன் பகல் முழுதும் ஸ்நானஞ்செய்யாதிருந்தாலும், வாசனை திரவியங்களை முகர்வதாலும், ஈரத்துணியை வயிற்றில் சுற்றிக்கொள்வதாலும் நோன்பு முறியாது. நோன்பை முறிக்கவேண்டுமென்று எண்ணி, அதனை முறிக்கக்கூடிய காரியங்களைச் செய்யாவிடில் அவ்வாறு எண்ணுவதால்மாத்திரம் நோன்பு முறிந்துவிடாது. காதுக்குள் தண்ணீரை வேண்டுமென்றே வார்த்துக் கொண்டால் நோன்பு முறிந்துவிடுமெனச் சில உலமாக்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் காதின் வழியாக எண்ணெய் மூளைக்குச் செல்வதால் காதுக்குள் எண்ணெய் ஊற்றுவதும் நோன்பை முறித்துவிடும்.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

தான் விவாகஞ் செய்துகொள்ள மதம் அனுமதிக்கும் (ஹலாலான) பெண்களைத் திரையுடன் தொடுவதாலும், அவர்களைத் திரையுடன் முத்தமிடுவதாலும், காம இச்சையை உண்டாக்கக் கூடியவைகளைக் கூர்ந்து பார்ப்பதாலும், சொர்ப்பன ஸ்கலிதத்தாலும், தான் விவாகஞ் செய்துகொள்ள மதம் அனுமதிக்காத (மஹ்றமான) பெண்களைத் திரையில்லாமல் தொடுவதாலும், தன்னால் அடக்க முடியாமல் வாந்தி எடுப்பதாலும், காற்று காரம் முதலியவை உட்சென்றாலும், அசுத்தமாக இருக்கிற தன் வாயை துப்பரவு செய்வதற்கு

முன் தற்செயலாக உமிழ்நீரை விழுங்கிவிட்டாலும், ஈ போன்றவைகள் தொண்டைக்குள் சென்றாலும், வாய்கொப்பளிக்கும்போது தண்ணீர் தவறுதலாக உள்ளே சென்றுவிட்டாலும், பர்ளு அல்லது சுன்னத்து ஆகிய அவசியங்களுக்காக நீராடும் நோக்கத்துடன் பாத்திரங்களிலிருந்து தண்ணீரெடுத்து ஊற்றிக்கொள்ளும்போது தண்ணீர் துவாரத்தின் வழியாக உட்சென்றுவிட்டாலும், கொஞ்சம் நேரம் அறிவுமங்கிப் பின்புதெளிவு ஏற்பட்டாலும், சுத்தமான தன் உமிழ்நீரை விழுங்குவதாலும், பிறரது நிர்ப்பந்தத்திற்கு அஞ்சியோ அல்லது ஞாபகமில்லாமலோ, நோன்பு முறிந்துபோகுமே என அறியாமலோ நோன்பை முறிக்கக் கூடியவைகளைச் செய்தாலும் நோன்பு முறியாது.

நோன்பு நிறைவேறுதற்கான அம்ஸங்கள்

பகல் முழுதும் புத்தி சுவாதீனத்துடனும், முஸ்லிமாகவும் இருக்கவேண்டும். பெண்களுக்கு மேற்கூறிய இரண்டு காரியங்களுடன் மாதவிடாய், பிரசவத்தின் தொடக்கு (ஹைளு, நிபாஸ்) ஆகிய இவை இல்லாதிருப்பதும் அவசியமாகும். பகல் முழுதும் நித்திரை செய்தாலும், மதச்சட்டப்படி ஸ்நானஞ் செய்யக் கடமைப்பட்டவர்கள் (அதாவது ஜுனுபாளிகள்) பகல் முழுவதும் குளிக்காமல் இருந்தாலும் நோன்பு முறியாது. ஆனால் பாவம் வந்துசேரும்.

நோன்பின் சுன்னத்துகள்

நடுநிசிக்குப் பின் 'ஸஹர்' செய்தல், ஸஹர் செய்வதைக் கடைசிநேரம் வரையில் பிற்படுத்தல், சூரியாஸ்தமனமானவுடன் தாமதியாது நோன்பு திறத்தல், பேரீச்சம்பழம் அல்லது தண்ணீரைக்கொண்டு நோன்புதிறத்தல், நோன்புதிறந்தவுடன், "அல்லாஹும்ம லக்க ஸும்து வபிக ஆமன்து, வஅலைக்க தவக்கல்த்து வஅலா ரிஸ்கிக்க அப்தர்த்து பதகப்பல் மின்னீ" என்று பிரார்த்தித்தல், பஜ்ருக்குமுன்னதாகவே ஜுனுபாளியாகி இருந்தால் பஜருக்கு முன்பே குளித்தல், கெட்ட வார்த்தைகளைக் கேட்காமலும், கெட்ட பார்வை பார்க்காமலும், வாசனை திரவியங்களை முகராமலும், காம இச்சை கொள்ளாமலும், நோன்புதிறந்தபின் ஹலால் அல்லாத (மதசம்மதமற்ற முறையில் தேடிய பொருளிலிருந்து தயாரான) உணவை உட்கொள்ளாமலும் இருத்தல் சுன்னத்து

அதிகமாக சதகா (தர்மம்) கொடுத்தல், தன் குடும்பத்திற்குத் தாராளமாகச் செலவு செய்தல், நோன்பு நோற்றவர்களைத் தன்னுடன் சேர்த்து நோன்பு திறத்தல், துப்பரவான இடங்களில் குர்ஆன்ஷரீபை அடிக்கடி ஓதுதல், திக்று ஸலவாத்து முதலியவைகளை ஓதுதல், இஃதிகாப் இருத்தல், வணக்கங்களை அதிதப்படுத்தல் ஆகிய இவைகளும் நோன்பின் சுன்னத்துகளாகும். காம இச்சையுடன் முத்தமிடுதல் ஹறாமாகும். கண்ணில் சுருமா இடுவதால் நோன்பு முறியாவிட்டாலும் சுருமா இடாமலிருப்பது உத்தமம். பொய் கூறல், புறம்பேசுதல், கோட் சொல்லல், பரிகசித்தல், திட்டுதல், நிந்தனைசெய்தல், வீண் பாடல்களைப் பாடுதல் முதலியன செய்யாமலிருப்பது வாஜிபு.

நோன்பின் மக்றூஹுகள்.

நோன்பின் மக்றூஹான காரியங்களை, நோன்பு நோற்பவன் செய்வதால் அவனது நோன்பு முறிந்துபோகாதெனினும் அதன் நன்மை குறைந்துபோம். ஆதலால் நம் நோக்கம் நிறைவேறும்பொருட்டு இயன்றவரையில் மக்றூஹான காரியங்களைச் செய்யாமலிருப்பது அவசியமாகும். அடி திரும்பியபின், பற்குச்சியினால் பல் தீட்டுதல் அதாவது மிஸ்வாக்குச் செய்தல், அவசியமின்றி வஸ்துக்களை மெல்லுதல், உருசிபார்த்தல், மலங்கழித்துவிட்டுத் துப்பரவு செய்வதிலும் நாசிக்கு நீர் செலுத்தித் துப்பரவு செய்வதிலும், அளவுக்கு அதிகமாமத் தண்ணீரை உபயோகித்தல், வாயில் தண்ணீரை வைத்துக்கொண்டிருத்தல், உமிழ்நீரை ஒன்று சேர்த்து விழுங்குதல், காம இச்சை தன்னை மீறிவிடுமென்ற சந்தேகமுள்ளவர்கள் பெண்களை முத்தமிடுதல், குளிக்கும்போது தண்ணீருக்குள்ளிருந்து காற்றை விடுதல் ஆகிய இவைகள் மக்றூஹாகும்.

கப்பாருக் கொடுக்கும் விவரம்.

ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும். அதற்கு இயலாவிட்டால், தொடர்ச்சியாக 60 நாள் நோன்பு நோற்கவேண்டும். 59 நாள் தொடர்ச்சியாக நோன்பு நோற்று, 60-வது நாள் நோற்கத்தவறிவிட்டால் முன்னர் 59

நாட்களிலே அம்மனிதன் நோற்ற நோன்புகள்கணக்கில்சேர்க்கப்படமாட்டா. ஆதலால் மறுபடியும் 60 நாட்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்கவேண்டும். இனி, 60 நாட்களுக்குள் இரண்டு ஈதுப் பெருநாட்கள், அய்யா முத்தஷ்ரீக் என்னும் துல்ஹஜ்ஜு மாதத்தின் 11, 12, 13 ஆகிய தேதிகள் வராமற் பார்த்து, இவைகளல்லாத காலங்களில் நோன்பு வைக்கவேண்டும். ஆனால், பெண்களுக்குமாத்திரம் மாதவிடாய் நாட்கள் மன்னிக்கப்பட்டுள. ஆகையால் ஷை மாதவிடாய் காலத்திற்கு முன்வைத்த நோன்புகளைக் கணக்கு வைத்து, 60 நோன்புகள் நோற்கவேண்டும். இவ்வாறு நோன்புநோற்க இயலாவிடில் 60 ஏழைகளுக்கு இரண்டு நேரமும் நடுத்தரமான போஜனம் வயிறார அளிக்கவேண்டும். அல்லது பித்று சதக்காவின் அளவாக 60 மிஸ்கீன்களுக்கு ஸதக்கா கொடுக்கவேண்டும். இதைச் செய்யவும் சக்தி யில்லையானால் அல்லாஹுதஆலா இடத்தில் மன்னிப்புக்கேட்க வேண்டும். இவ்விதம் பரிகாரத்தை மேலே விவரித்த முறைப்படி கொடுக்கவேண்டும். அடிமையை வாங்கி விடுதலை செய்யச் சக்தியுள்ளவர்கள் நோன்பு வைக்கவோ, 60 பேருக்கு சதக்கா கொடுக்கவோ கூடாது.

நோன்பை முறித்தவன் புத்தி சுவாதீனமுள்ளவனாகவும், பருவ மடைந்தவனாகவுமிருந்தால் தான், நோன்பை முறித்ததற்கு மேற்கண்டவாறு கப்பாரு அதாவது பரிகாரம் செய்யவேண்டும். சிறு பிள்ளைகள், பயித்தியக்காரர்கள் ஆகிய இவர்கள் கப்பாருக் கொடுக்க வேண்டியதில்லை. றமளான் மாதத்தின் அதாவான (அதாவது களாவல்லாத) நோன்புக்கு இரவிலும், ஷரஈ நடுப்பகல் வருதற்குள்ளும் நோன்பு நோற்பதாக நிய்யத்துச் செய்யலாமாதலால், இரவில் நிய்யத்துச் செய்தவர்களுக்குத் தான் மேலே கண்டவாறு கப்பாருவாஜிபாகும். பகலில் நிய்யத்துச்செய்தவர்களுக்கு கப்பாருவாஜிபாகாது.

இவ்வாறு கப்பாருவாஜிபாவதற்கு மற்றொரு ஷரத்துண்டு. அதாவது நோன்பை முறித்த அன்றையதினமே நோன்பை முறிக்கத்தகுந்த காரணங்கள் எதுவும் ஏற்படாதிருக்கவேண்டும். நோன்பை முறித்த அன்றையதினமே நோன்பு வைக்க இயலாதவிதமாக வியாதி வந்துவிட்டாலும், பெண்பிள்ளை நோன்பைமுறித்த அன்றையதினமே ஹைறு அல்லது நிபாஸ் அவளுக்கு வந்துவிட்டாலும் கப்பாருக் கொடுப்பது வாஜிபாகாது. ஒருவன் ஞாபகமில்லாமல் அல்லது பிறரின் கட்டாயத்தினால் பசி தாகம் அதிகமாகி, அதனால் தனக்கு ஆபத்து வந்துவிடுமென்ற பயத்தினால் நோன்பை முறித்தால் அதற்காகக் கப்பாருக் கொடுப்பது வாஜிபில்லை. கப்பாருக் கொடுக்கும் விதமாக ஒரே வருஷத்தில் இருமுறைநோன்பை முறித்துஇரண்டிற்கும் சேர்த்து கடைசியில் ஒரே தடவையில் ஒரேகப்பாருக்கொடுக்கலாம். ஆனால்ஒருதரம் கப்பாருக்கொடுத்த பின் மறுமுறையும் அதேவருஷத்தில் கப்பாருக் கொடுக்கவேண்டிய விதமாக நோன்பை முறித்தால் இவ்விரண்டாம் முறைக்காக இன்னொரு முறை கப்பாருக் கொடுக்கவேண்டும்; முதலில் கப்பாருக் கொடுத்தது போதாது. இரண்டு வருஷத்தில், வருஷம் ஒன்றுக்கு ஒவ்வொரு நோன்பாக கப்பாருக் கொடுக்கும் விதமாக நோன்பை முறித்திருந்தால் இவ்விரண்டிற்கும் தனித்தனியே கப்பாருக் கொடுக்க வேண்டும்; இரண்டிற்கும் ஒன்றாக ஒரே தடவையில் ஒரேகப்பாரு கொடுக்கக் கூடாது.

நோன்பு நோற்பது கடமையாகாத சந்தர்ப்பங்கள்

நோன்பு நோற்றால், வியாதி அதிகரித்துவிடும் என்ற பயம் நோயாளிக்கு இருந்தாலும், பாம்புதீண்டிவிட்டாலும், குழந்தைக்குப்பால்வற்றிவிடும் என்றபயம் பால்கொடுக்கும் பெண்ணுக்கு இருந்தாலும், கர்ப்பத்தின் காரணத்தாலும் நோன்பு நோற்காதிருக்கலாம். இவைகளில் எதையேனும் காரணமாகக் கொண்டு நோன்பு நோற்காதிருந்தாலும், நோற்றநோன்பை முறித்தாலும், ஷை நோன்பைக் களாச்செய்யவேண்டும். ஷை காரணங்கள் இருக்கும் போதே அவனிறந்துவிட்டால் அவன் குற்றவாளியாகமாட்டான். ஆனால் அக்காரணங்கள் நீங்கியபின் அந்த நோன்புகளைக் களாச்செய்யாம லிருந்தால் விட்டுப்போன அந்த நோன்புகளுக்குப் பதிலாக 'பித்யா' கொடுக்கும்படி அவன் மரணமடையும்போது வஸிய்யத்துச் செய்வது வாஜிபு.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்.)

கடினமான பசி, அடக்கமுடியாத தாகம், தயம்மம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்

கிற வியாதி ஆகிய இவைகளில் ஏதாவதொன்றை முன்னிட்டு நோன்பை விடலாம். (48 மைல் தூரத்திற்குக் குறையாத தூரத்திலுள்ள ஊருக்குச் செல்லும்) பிரயாணியும் நோன்பை விடலாம். ஆனால் அவன் நல்ல காரியத்தைச் செய்வதற்காகப் போகவேண்டும். திருட்டு முதலிய காரியங்களைச் செய்யப்போகிறவன் நோன்பை முறிக்கக் கூடாது.

பித்யா கொடுத்தல்

நோன்பு நோற்க வியலாத வயோதிகர் ஆணானாலுஞ்சரி பெண்ணானாலுஞ்சரி ரமளானின் நோன்பிற்காக பித்யாக் கொடுப்பது வாஜிபு. ஒவ்வொரு நோன்பிற்கும் 'பித்று' சதக்காவின் அளவு தானியம் அல்லது அதன் கிரயம் ஏழைகளுக்குக் கொடுப்பதற்கு 'பித்யா' என்று பெயர். பல நோன்புகளுக்குள்ள பித்யாவை ஒரு மிஸ்கீனிடம் கொடுக்கலாம். ஒரு நோன்பின் பித்யாவை பல மிஸ்கீன்களிடம் கொடுக்கக்கூடாது. இவ்வாறு பித்யாக் கொடுத்தபின் நோன்பு வைக்கச் சக்தி பெற்றுவிட்டால் அந்த நோன்புகளைக் களாச்செய்வது வாஜிபு.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாரம்)

நடுத்தரமான மனிதன் இரண்டு கைகளையுங்கொண்டு தானியங்களை ஒருமுறை ஒவ்வொரு நாளும் அள்ளிக் கொடுப்பதற்கு 'பித்யா' என்று பெயர். ஒரு நாளுக்காகக் கொடுக்கப்படும் பித்யாவுக்கு 'முத்து' என்று பெயர். ஒரு முத்தை ஒருவனுக்குத் தான் கொடுக்கலாம். இரண்டு மூன்றுபேருக்குக் கொடுக்கக் கூடாது. ஆனால் பல முத்துகளைப் பலருக்குக் கொடுக்கலாம்.

தராவீஹ் தொழுகை

ரமலான் மாதத்தில் இஷாத் தொழுகைக்குப்பின் 'தராவீஹ்' தொழுவது சகல முஸ்லிம்கள்மீதும் 'சுன்னத்து முஅக்கதா' வாகும். இதை இமாம் ஜமாஅத்தாகத் தொழல் 'சுன்னத்து கிபாயா'. ஆதலால் ஒரு சிலர் மஸ்ஜிதில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுதுவிட்டால் இதரர் ஜமாஅத்தாகத்தொழாவிட்டாலும் குற்றமாகாது. ஆனால் இமாம் ஜமாஅத்தாக ஒருவருமே தொழாவிடின், யாவரும் சுன்னத்தை விட்ட குற்றத்திற்கு ஆளாவார்கள்.

இந் தராவீஹ் 20 ரக்கஅத்துகளாகும். அவைகளை இரண்டிரண்டு ரக்கஅத்துகளாக பத்துமுறை தக்பீர் கட்டித் தொழவேண்டும். ஒருமுறை தக்பீர் கட்டுவதிலேயே இருபது ரக்கஅத்துகளையும் தொழுதால் தராவீஹ் நிறைவேறிவிடும். ஆயினும் அவ்வாறுதொழுவது மக்றூஹ். ஒவ்வொரு நான்கு ரக்கஅத்துகளுக்குப் பின்னும் நான்கு றக்கஅத்துத் தொழுகையின் நேரம் தாமதித்திருப்பது முஸ்தஹப்பு. அதாவது விரும்பத்தக்கது. இஷாத் தொழுகைக்கு முன்னம் தராவீஹ் தொழக்கூடாது. மார்க்கச் சட்டப்படி முதலில் இஷாவையும் பின்னால் தராவீஹையும் ஒருவர் தொழுது அப்புறம் அவர் தொழுத இஷாத் தொழுகையானது நிறைவேறவில்லை எனத் தெரிந்தால் ஷெ இஷாவையும் தராவீஹையும் அவர் திரும்பவும் தொழவேண்டும். ஆனால் ஷெ இஷாத் தொழுகை நிறைவேறவில்லையென்று கிழக்கு வெளுத்த பின்பு தெரிந்தால் இஷாவை மாத்திரம் மறுபடியும் தொழவேண்டும்; தராவீஹ் தொழுகையை மறுபடியும் தொழவேண்டியதில்லை. அவ்வாறு திரும்பத் தொழுவது மக்றூஹ்.

தராவீஹ் தொழுகையில் ஒருமுறை குர்ஆன் முழுவதையும் ஓதி கத்தம் முடிப்பது சுன்னத்து. ஆதலால்தான் வழக்கமாகத் தொழும் மஸ்ஜிதில் குர்ஆன்கத்தம் ஓதித் தொழாவிடில், அவ்வாறு தொழுகை நிறைவேற்றப்படுகிற வேறு மஸ்ஜிதுக்குத்தொழச் செல்லலாம்.

ஜமாஅத்து நடந்துகொண்டிருக்கும் பொழுது ஒருவர் தொழ வந்து, ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் தொழுகை இஷாவின் பர்ளா, அல்லது சுன்னத்தான தராவீ

ஹா என்று நிச்சயமாகத் தெரியாவிட்டால் "இப்பொழுது நடைபெறும் தொழுகை பர்ளு தொழுகையாக இருந்தால் இந்த இமாமுடன் சேர்ந்து பர்ளைத் தொழுகின்றேன்; தராவீஹ் தொழுகையாயின் இந்த இமாமுடன் சேர்ந்து தராவீஹ் தொழுகின்றேன்" என்று சங்கல்பம் செய்து தக்பீர் கட்டி அந்த ஜமாஅத்துடன் தானும் சேர்ந்து தொழலாம். ஆனால் அத்தொழுகை பர்ளு தொழுகையென்று பின்பு தெரியவந்தால் பர்ளு நிறைவேறிவிடும். இல்லையேல், பர்ளானஇஷாவை இரண்டாவது முறை தொழவேண்டும். ஆனால் இஷாவின் பர்ளுக்குமுன் தராவீஹ் தொழக் கூடாதென்பதை உத்தேசித்து "இது இஷாவின் பர்ளான தொழுகையாகயிருந்தால், இஷாவைப் பின்பற்றுகின்றேன்; இல்லையேல், இமாமைப் பின்பற்றவில்லை என்று தாமதித்து வந்தவர் நிய்யத்துச் செய்து அந்த இமாமைப் பின்பற்றித் தொழல் கூடாது.

ஒரு மஸ்ஜிதில் தராவீஹ் தொழ வைத்த இமாம் அதே இரவில் வேறொரு மஸ்ஜிதில் தராவீஹ் தொழ வைப்பது கூடாது. ஆனால் ஒரே இமாம் ஒரு மஸ்ஜிதில் எட்டு ரக்கஅத்தும், வேறொரு மஸ்ஜிதில் பன்னிரண்டு ரக்கஅத்துமாகத் தொழுகையை நடத்தி வைக்கலாம். ஒரு மஸ்ஜிதில் இமாமுடன் தராவீஹ் தொழுதுவிட்டு அதே இரவில் வேறொரு மஸ்ஜிதில் இமாம் ஜமாஅத்துடன் தராவீஹ் தொழுவது குற்றம் அன்று. ஆனால் வித்று தொழுகையை இரண்டாவது மஸ்ஜிதிலும் தொழக்கூடாது. தராவீஹில் சில ரக்கஅத்துகளில் சேரமுடியாமல் பிந்தியவர் அவைகளைத் தனியாகத் தொழுதால் வித்றுடைய ஜமாஅத்துத் தனக்குக் கிடைக்காது என்று தோன்றின், இமாம் ஜமாஅத்துடன் வித்றுத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு பாக்கி இருக்கும் தராவீஹ் தொழுகையைப் பின்னால் தொழலாம். ரமளான் மாதத்தில் மாத்திரம் வித்றுத் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழலாம். ஆனால் பர்ளையும் தராவீஹையும் இமாம் ஜமாஅத்தாக இல்லாமல் தனிமையாகத் தொழுதவர் வித்று தொழுகையை மாத்திரம் ஜமாஅத்துடன் தொழக் கூடாது.

அப்கன் அரசர் நாதிர்ஷாஹ்

மாஜி அப்கன் அரசர் அமீர் அமானுல்லா கான் அவர்கள், மார்க்கத்திற்கு மாறான சில காரியங்களைச் செய்ததன் பலனை அப்கனிஸ்தானத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியைத் தனக்குச்சாதகமாக உபயோகித்து அரசாங்கத்தைக் கைப்பற்றி கொடுங்கோன் முறையில் ஆட்சி செய்துவந்த கொள்ளைக் கூட்டத்துத் தலைவனை பச்சா சக்காவை, எவ்வித ரத்தம் சிந்தலுமின்றி அரச பதவியினின்றும் அகற்றி, அப்கன் தேசத்தைக் காப்பாற்றிச் சீரும் சிறப்புமாய் ஆட்சி செய்துவந்த அப்கன் சிங்கம் நாதிர்ஷாஹ் அவர்கள் சென்ற நவம்பர் மாதம் 8-ந் தேதி அப்துர்ரஹ்மான் என்ற துட்டனால் சுட்டுக் கொல்லப்பட்டார். இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹிராஜிஊன். அதற்கு முதல் வருஷம் ஜெனரல் குலாம் நபிகான் என்பவர் தேசத்திற்கும் அரசாங்கத்திற்கும் விரோதமாகக் குழப்பம் செய்தாரென்ற குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டார். இவரது மரணத்திற்காகப் பழிவாங்கும் நோக்கத்தின்பேரில் முரட்டு சுபாவம் படைத்த அப்துர்ரஹமான் என்பவன், மர்ஹூம் நாதிர்ஷாஹ் அவர்கள் அர்க் மாளிகையில் மாணவர்களுக்கு வெகுமதி அளித்துக்கொண்டிருக்கையில் மூன்று முறை தொடர்ச்சியாகச் சுட்டதன் பலனை, ஷஹீதானார். கொலை செய்தவன் ஜெனரல் குலாம் நபிகானின் வயோதிக ஊழிக்காரனின் புதல்வன். பல சதியாலோசனைக் குற்றங்களில் சம்பந்தப்பட்டு மன்னிப்புப் பெற்று விடுதலையடைந்தவன். மேற் கூறப்பட்ட குலாம் நபிகானும் அவனது கோஷ்டியினரும் இவ்விதமாகச் சதிக்குற்றங்களில் தண்டிக்கப்பட்ட

தற்கும் அமீர் அமானுல்லாஹ்வின் பட்டந் துறவிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு.

அமீர் அமானுல்லாகான் அவர்கள் ஐரோப்பியரின் நாகரீகத்தைப் பின்பற்றித் தமது தேசத்தை ஆட்சிபுரிந்து ஐரோப்பிய தேசங்களைப்போல் சீர்திருத்தமுள்ள தேசமாக முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்ற ஆவேசத்தால் பல சீர்திருத்தங்களைத் தமது தேசத்தில் கட்டாயமுறையில் புகுத்த முயற்சித்தார். ஆனால், அவர் புகுத்த முயற்சித்த சீர்திருத்தங்கள் தேசத்தின் பொருளாதார வர்த்தகத் துறைகளிலில்லாமல் ஐரோப்பியரின் நடையுடைபாவனை பழக்கவழக்கங்களைப் பெரிதும் சம்பந்தப்பட்டிருந்ததனால் அது சன்மார்க்க இஸ்லாத்திற்கு முரணானவை என்ற அபிப்பிராயத்தின்பேரில் தேசத்திலுள்ளபொதுஜனங்களுக்குஆத்திரத்தைமூட்டின. அதன்பயனாய் நாட்டில்குழப்பமுண்டாயிற்று. முஸ்தபா கமால் பாஷாவைப் போல் ராணுவம் போலீஸ் முதலியவைகளை தமது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டனவாகவும், தனக்காக உயிர் கொடுப்பனவாகவும் வைத்திருந்தால் இவ்வாறான சம்பவம் எளிதில் ஏற்பட்டிராது. அவ்வாறில்லாமல் அவைகள் வேறு நிலைமையிலிருந்தமையால் குழப்பம் முற்றிப்பட்டத்தைத் துறக்க வேண்டிய நிர்பந்தமேற்பட்டது அவருக்குப் பின் பட்டத்துக்கு வந்த இனாயத்துல்லாகான் அதைச் சமாளிக்கச் சக்தியற்றிருந்ததால் மூன்று நாளைக்குள் தமது அரசுரிமையைவிட்டு அகன்று உயிர் தப்பவேண்டிய நிலைமையிலாகிவிட்டார். இறுதியாகஇக்குழப்பத்திற்குத் தலைமை வகித்த பச்சாசக்கா என்பவன் பட்டத்திற்கு வந்து தேசத்தைச் சின்னாபின்னப்படுத்தினான். இவனது சைனியங்கள் நகரங்களைக் கொள்ளையிட்டன; வர்த்தகம் கைத்தொழில் இவைகளெல்லாம் நாசமாயின. அரசாங்கப் பொக்கிஷம் காலியாயிற்று; பத்து வருஷகாலமாக தேசத்தைப் பல வழியிலும் விருத்திசெய்வதற்காக அமானுல்லா விதைத்திருந்த வித்துக்களெல்லாம் ஒரு நொடியில் நாசமாக்கப்பட்டன. தேசமெங்கும் கொலையும் ரத்தப் பிரவாகமுமே காணப்பட்டன. தேசத்தில் தோன்றிய அராஜகத்தைக் கண்ணுற்ற அப்கன் தேசாபிமானிகளும் தலைவர்களும், அக்காலத்தில் நோய்வாய்ப்பட்டு பிரான்சு தேசத்தில் படுத்த படுக்கையிலியிருந்த நாதிர்ஷாஹ் அவர்களுக்கு ஆயிரக்கணக்காகத் தந்திகள் அனுப்பி தேசத்தைக் காப்பாற்றும்படி மன்றாடினர்.

தாய்நாட்டின்பால் பற்றுள்ள வீரசிங்கமான ஜெனரல் நாதிர்கானுக்கு உணர்ச்சியுண்டாயிற்று. தேசத்தின் துர்ப்பாக்கிய நிலைமையைக்கண்டு மனந்துடித்தார். மக்களைக் காத்து தேசத்திற்கு விமோசனம் அளிக்க வேண்டுமென்ற நன்னோக்கத்தின் பேரில் பாரிஸ் நகரைவிட்டு அப்கனிஸ்தானை நோக்கிப் புறப்பட்டார். றஹ்மான் கிருபையால் அவரது நோயும் அவரைவிட்டகன்றது. இந்தியா வழியாக அப்கன் எல்லைப்புறத்தையடைந்து அப்கனியத் தலைவர்களைக்கொண்ட ஜிர்காவைக் கூட்டி பச்சாசக்காவிடம் சமாதான முறையில் தேசத்தை விடுவிக்க முயன்றார். இம்முயற்சி பயனடையாமற் போகவே,தமது சகோதரர்களின் தலைமையில் சைன்யங்களைத் திரட்டி இரண்டு மூன்று வழியாகக் காபூலை நோக்கிப் படையெடுத்துச்சென்றார். பச்சாசக்கா அமானுல்லாவைப்போல் ராணுவத்தை ஒழுங்குபடுத்தி வைக்காமலும் செங்கோலாட்சி செய்யாமலுமிருந்ததால் பொதுஜனங்களும் சைனியங்களும் அவனைச் கைவிட்டனர். இறுதியாக ஜெனரல் நாதிர்கானிடம் சரண்புகுந்தான். தேசத்தைச் சின்னாபின்னப்படுத்திய குற்றத்திற்காக தேசமக்களின் நீதிஸ்தலத் தீர்ப்புப்படி கொல்லப்பட்டான்.

நாதிர்கான் அவர்கள் தளகர்த்தராக இருந்த காலத்தில் அப்கனிஸ்தானத்திற்கு அரும்பெருந் தொண்டுகளனந்தம் புரிந்து, அவர்களின் அன்புக்குரியவராக இருந்ததுடன் முன்னர் ஏற்பட்ட அப்கன் பிரிட்டிஷ் யுத்தத்தில் காட்டிய ராணுவ நிபுணத்துவத்தின் பயனாக அப்கனிஸ்தானத்திற்குக் கிடைத்த பூரண சுயேச்சையையும் அதன்பயனாய் அப்கனிஸ்தானம் அடைந்த முன்னேற்றத்தையும் கண்ட பொதுமக்கள் நாதிர்கான் அவர்களைத் தங்களின் உயிர் தோழராகவும் ஒப்பற்ற தலைவராகவும் கருதி மதித்து வந்தனர். இறுதியாக அழிந்தொழிந்து போகுந்தருவாயிலிருந்த அப்கனிஸ்தானை ஐரோப்பாவிலிருந்து ஓடிவந்து காப்பாற்றிய ஒப்பற்ற தொண்டினைக் கண்டு

அப்கன் அரசப் பதவியை அவருக்கே அளித்தனர். அப்பதவியை ஏற்க அவர் மறுத்தும் மக்களின் வற்புறுத்தலுக்கியையத் தமது தேச க்ஷேமத்தைக் கருதி, இறுதியாக அப்பதவியை ஏற்று சன்மார்க்க இஸ்லாத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தேசத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரும் துறையில் சென்ற நான்கு வருஷ காலமாக மிகமாட்சியுடன் ஆட்சி புரிந்துவந்தார். பத்து வருஷ காலமாக ஆட்சி செய்துவந்த அமானுல்லாகான் தேசத்தைக் கொலைபாதகனை பச்சா சக்காவுக்குக் காட்டிவிட்டு ஓடிவிட்டாலும் அவரது உப்பைத் தின்ற பலர் அவர்பால் அன்புபூண்டு அவரை நேசிப்பது சகஜம். அதற்கேற்ப ஜெனரல் குலாம் நபிக் கோஷ்டியார் அமானுல்லாவை மீண்டும் பட்டத்தில் வைக்கவேண்டும் என்ற நோக்கத்தின்பேரில் நாதிர்கானின் ஆட்சியைத் தகர்க்க முயன்றனர். நாதிர்கான் அவர்கள், ராணுவத் தளகர்த்தராகவும், ராஜிய நிபுணராகவுமிருந்தமையான், அவரது ஆட்சியை நேர்முகமாக எதிர்க்கத் தைரியமின்றிப் பற்பலவிதமான சதியாலோசனைகளைச் செய்து நாதிர்கானுக்கு விரோதமாகத் துவேஷப் பிரசாரம் செய்யவும், பிரிட்டிஷாரின் செல்வாக்குக்குட்பட்டு அவர் ஆட்சி புரிவதாகவும் கூறி மலை ஜாதியினரைத் தூண்டிவிட்டனர். இவர்களால் நேர்ந்த குழப்பம் வெகு சீக்கிரத்தில் அடக்கப்பட்டு அதற்குக்காரணமாக இருந்த பலர் மரண தண்டனையும் விதிக்கப்பட்டனர். அவர்களில் ஜெனரல் குலாம் நபிகானும் ஒருவர். இவர் கொல்லப்பட்டதைப் பழிவாங்கும் நோக்கத்தின்பேரில் அப்கனிஸ்தானத்திற்கும் முஸ்லிம் உலகிற்கும் பெருமையாயிருந்த அரசர் நாதிர்ஷாஹ் கொல்லப்பட்டு ஷஹீதானார்.

இவரது மரணத்தால் அப்கனிஸ்தானம் மாத்திரமல்லாமல் முஸ்லிம் உலகம் முழுதுமே இன்று வருந்தித் துடிக்கிறது. இஸ்லாத்திற்கும் முஸ்லிம் உலகிற்கும் இவரது எதிர்பாராத மரணத்தால் ஏற்பட்ட நஷ்டம் ஈடு செய்ய முடியாததாகும். இவர், சீர்குலைந்த அப்கனிஸ்தானை தன் நிலையிலாக்க அரும்பாடுபட்டு சகல துறைகளிலும் அபிவிருத்திசெய்தார்; ராணுவத்தைப் பலப்படுத்தினார்; வர்த்தகம் ஓங்கும்பொருட்டு தேசத்திலுள்ள முக்கிய நகரங்களுக்கெல்லாம் ரஸ்தாக்கள் போட்டு, அவைகளில் போக்குவரத்துக்குரிய சாதனங்களைப் பெருக்கினார்; கைத்தொழில் வளர்ச்சிக்காகப் பலமுறைகளையும் கையாண்டார்; இறுதியாகத் தமது தேசத்திற்கெனத் தனிச் சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தின்பேரில் இந்திய முஸ்லிம் நிபுணர்களிற் பலரைத் தமது தேசத்திற் கழைத்து இஞ்சினீரிங் காலேஜ் முதலிய கல்விஸ்தாபனங்களை ஏற்படுத்தத் திட்டம் போட்டார். இவ்வித நிலைமையில் அவருக்கு எதிர்பாராத வண்ணம் மரணம் வந்தெய்தியது. தமது தேசத்தின் நலனை மாத்திரம் கவனித்தா ரென்பதில்லை அலிகாரிலுள்ள முஸ்லிம் சர்வகலாசாலைக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 3600 வீதம் பண உதவி செய்து அதையும் வளர்க்கத் தலைப்பட்டார். இறைவன், ஒப்பற்ற இவ்வரசருக்குத் தனது கருணையால் மக்பிரத்துச் செய்வானாக. இவரது மரணம் நமக்கு ஆறாத்துயரை அளிக்க வல்லதாக இருந்தாலும், இவரது புத்திர ரத்தினமாகிய முஹம்மது ஜாஹிர்கான் அவர்களை அப்கனிஸ்தானம் ஏகோபித்து அரசராக ஏற்றுக்கொண்டதுடன் தேசத்தில் எவ்வித உள் நாட்டுக் கலகமும் ஏற்படாமல் அப்கன் அரசாங்கம் நடைபெற்று வருவதும், தன தருமைத் தந்தையாரின் வழியினைப் பின்பற்றி தேச முன்னேற்றத்திற்கான முறையில் இஸ்லாமிய சன்மார்க்கக் கட்டளைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு ஆட்சிபுரிவதாகப் பிரகடனம் செய்திருப்பதும், அனுபவசாலிகளும், ராஜிய நிபுணர்களும், மதத் தலைவர்களும் அவரை ஆதரித்து நிற்பதும் நமக்கு ஆறுதலை அளிக்கிறது. எல்லாம் வல்ல இறைவன் இவரது ஆட்சியை இஸ்லாமிய சன்மார்க்க ஆட்சியாக ஆக்கி, மக்களுக்கு இம்மை மறுமைப் பேற்றிற்கான நல்வழியில் நடாத்த அருள் புரிவானாக ஆமீன்.

சிங்கை சந்தாதார் :—இக் கனவான்களில், 2047, 2042, 2346, 921, 993, 942, 1528, 945, 972, 929, 2502, 2541, 2523, 2502 A., 2503 E., 2522, 982, 932, 983. ஆகிய சந்தாதார்கள் நமது ஏஜண்டு ஜனாப் மு. முஹம்மது ஷரீப் சாஹிப் அவர்களிடம் தங்கள் சந்தாக்களை செலுத்தியிருப்பதை மிகவும் பாராட்டுகின்றோம்.

ஹஸ்ரத் இமாம் அஹ்மத்பின் ஹம்பல்

நீங்கள் அல்லாஹ்த ஆலாவை உவக்கிறவர்களாக இருப்பீர்களாயின் என்னைப் பின் தொடர்ந்து நடந்து கொள்ளுங்கள்; அதுபோழுது அல்லாஹ்த ஆலா உங்களை விரும்புவான்; உங்கள் பாவங்களை மன்னித்துவிடுவோன் என்று நபியே கூறும். (அல்குர்ஆன்.)

சோதரீர்! முற்காலத்திலிருந்த முஸ்லிம்கள் அல்லாஹ்த ஆலாவின்மீது உவப்பும் பிரீதியும், எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடப்பதனுல்தான் ஏற்படுகிறதெனக் கருதி, அவர்களைப் பின்பற்றி நடப்பதை, தாங்கள் விடுதலை பெறுவதற்குள்ள பிரதான வழியென்பதாக உறுதிகொண்டிருந்தார்கள். எனவே, எம்பெருமானர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடப்பதைத் தவிர விடுதலை பெறுவதற்கு வேறு யாதொரு மார்க்கமும் அன்னேருக்குப் புலனுகவே இல்லை. எவன் அல்லாஹ்த ஆலாவுக்கு பயந்து மறுமை நாளில் ஏற்படக்கூடிய அமளியைவிட்டு விடுதலைபெற நாடுகின்ருனே அவன், அவசியம் எம்பெருமானர் சத்தியத்தூதர்(ஸல்.) அவர்களைப்பின்பற்றி நடப்பதுடன் தன்னுடைய அமல்களையும் தூய்மை பொருந்தியதாகச் செய்து கொள்வான். இதன்காரணமாய் மானிடர்கள் ஆண்டவனுல்உவக்கப்பட்டவர்களாயும், அவனது கிருபையைப் பெற்றுக்கொள்பவர்களாயும், அவனுடைய கோபாக்கினியினின்று தூரமானவர்களாயும் ஆய்விடுகின்றூர்கள். சுருங்கக்கூறின், எவர்கள் எம்பெருமானர் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடப்பதை தங்களது பிரதான கடமையாகக்கொண்டுள்ளோர்களோ அன்னேர் அல்லாஹ்த ஆலாவால் உவக்கப்பட்டவர்களாயும், அவனது உண்மை அடியார்களாகவும், நேரான சன்மார்க்கத்தைப் பின்பற்றியவர்களாகவும் ஆய்விடுகின்றூர்கள். இவ்வாறு பின்பற்றுதவர்களால் வழமைக்கு மாற்றமான அபார அற்புத நிகட்சி நடைபெறினும், அவை வெகு காலத்திற்கு நிற்காது; ஒரு காலத்தில்அதன் இரகசியம்வெளியாகியேதீரும். ஆனல் எம்பெருமானர் (ஸல்.) அவர்களினது நடைபாவனை என்னும் சுன்னத்தைப் பின்பற்றி யொழுகுபவர்களின் கியாதியும் கீர்த்தியும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகும். உதாஹரணமாக: ஹஸ்ரத் ஷேக் முஹைஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்.) அவர்களினது சரித்திரங்கள் யாவருக்கும் நன்கு தெரியும். அம்மகான் அவர்கள், எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி யொழுகி வந்ததின்பயனுக அளவற்ற பாக்கியங்களுடன் சிறப்புற்று விளங்கி இருக்கின்றூர்கள். அவர்களின் வாழ்க்கைச் சரிதையானது நம்மனேர்க்கு ஓர் பெரும் படிப்பினையாக இலங்கிக்கொண்டிருக்கின்றது. அவர்கள் ஆத்மசுத்தியோடு புரிந்துவந்த தியாகந்தான் அவர்களை முஸ்லிம்களின் தலைவராகச் செய்துவிட்டது. அவர்களின் ஜீவியவாழ்க்கை முழுதிலும் மானிடர்களை நேர்வழியின்பக்கல் அழைக்கும் மகானுய்த் திகழ்ந்தார்கள். இதுபொழுது அவர்களின் ஹிதோபதேசங்களானது முஸ்லிம்களுக்கு நேர்வழி காண்பித்துக் கொண்டிருக்கின்றது.

ஹிஜ்ரீ 2-வது நூற்றூண்டில் எம்பெருமானர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றி நடந்து மேன்பதவி அடைந்து சிறந்து விளங்கியவர்களில் நமது இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்.) அவர்கள் பிரதானமானவர்களாகும். அம்மகானவர்களின் ஹிதோபதேசங்களானது உலக முழுதிலுமுள்ளவர்களின் மனதைக் கவரச் செய்துவிட்டது. இதன்பயனுய் மகான் அவர்கள் ஹம்பலி மத்ஹபுக்கு இமாமாக மிக்க கியாதிபெற்று விளங்கினர்கள். ஆகவே, மகான் அவர்கள் எவ்வாறு சுன்னத்தைப் பின்பற்றி நடந்து சிறப்புற்று விளங்கினர்களென்பதை இதன்கீழ் விவரிக்கிறேம்.

மகான் அவர்களின் பிறப்பு

ஹஸ்ரத் அவர்கள் ஹிஜ்ரீ 164-ம் ஆண்டில் பக்தாத்மா நகரில் பிறந்தார்கள். அவர்கள் அரபி வம்ஸத்தைச் சேர்ந்தவர்கள். மகான்

அவர்களின் முதியோர்கள் அரப் தேசத்தி லிருந்து குராஸானில் வந்து தங்கினர்கள். அதன்பின் ஹஸ்ரத் அவர்களின் தந்தையார் குராஸானைவிட்டு பக்தாத் நகரை சுய பதி யாக ஆக்கிக்கொண்டார்கள். அதற்குப் பின்பு அங்குதான் ஹஸ்ரத் அவர்கள் ஜனன மானார்கள். அதிர்ஷ்ட சம்பவமாய் ஹஸ்ரத் அவர்கள் ஜனித்தது றபீஉல் அவ்வல் மாத மாகவே இருந்தது. இதனல் எம்பெருமானர் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுதல், எதிர்பா ராதவிதத்தில் பிறப்பிலும் ஹஸ்ரத் அவர் களுக்கு ஏற்பட்டுவிட்டது பெரும் பாக்கிய மாய் அமைந்தது. மேலும், அல்லாஹ்த ஆலாவின் கிருபையால் ஹஸ்ரத் அவர்கள் தாயார் வயிற்றிலிருக்கும்பொழுதே, எம்பெரு மானர் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி நடந்த சிறப்பையும் பெற்றுக் கொண்டார்களென்று கூறுவது மிகைப்படக் கூறியதாக மாட்டா தென்பது யாவருக்கும் நன்கு புலனுகும். அதாவது, ஹஸ்ரத் அவர்களை, தங்கள் சிறு பிராயத்திலேயே தந்தையை இழந்த எதிமாகச்செய்து தாயாரின் பரிபால னத்திலிருக்கும்படி செய்துவிட்டான். ஹஸ் ரத் அவர்கள் பக்தாத் நகரில் ஆரம்பக்கல்வி பெற்ற பின் கூபா, பஸரா, மக்காமுஅல் லமா, மதீனு முனவ்வரா, ஷாம், இராக் முத லிய இடங்களுக்கு உயர் கல்விக்காகச் சுற் றுப் பிரயாணஞ்செய்து அநேக ஹதீதுகளைத் தெரிந்துகொண்டார்கள். அதன்பின் எம் பெருமானர் (ஸல்.) அவர்களைப் பின்பற்றி யொழுகவேண்டு மென்னும் அவாவுடன் அவர்களது சொல் செயல் முதலியவற்றைத் தெரிந்துகொள்வதற்காக அநேக இடங்க ளுக்குச் சுற்றுப் பிரயாணஞ் செய்து, ஒவ் வொன்றையும் தக்க முறையில் தெரிந்து திட்டம் செய்வதற்காக அரும் பிரயத்த னஞ் செய்தார்கள். அவ்வாறு பிரயத்தனம் செய்து திட்டப்படுத்திய ஹதீதைக்கொண்டு அமல் செய்கிறவர்களாயும் இருந்தார்கள். மகான் அவர்கள், ஆராய்ந்தெடுக்கும் ஹதீது கள் பெரும் நம்பிக்கையோடு யாவராலும் ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருந்தது. இத னல் ஹஸ்ரத் அவர்கள் பெரும் கியாதியோடு சிறந்து விளங்கினர்கள். ஹஸ்ரத் அவர் களின் உஸ்தாதுகளுங்கூட ஹஸ்ரத் அவர்க ளால் எடுத்துக் கூறப்படும் ஹதீதுகளைக் கொண்டு நம்பிக்கை வைக்கிறவர்களாய் விட் டார்கள். ஹஸ்ரத் அவர்கள் தங்கள் 31-ம் வயதில் பிக்ஹு, உஸுலபிக்ஹு முதலிய கல்விகளை, செய்யிதுனு இமாம் ஷாபிஈ றஹ் மத்துல்லாஹி அலைஹி அவர்களிடம் கற் றிருக்கிறுர்கள். ஆனல் ஹஸ்ரத் இமாம் ஷாபிஈ (றஹ்.) அவர்கள் உஸ்தாக இருந் தும் சிஷ்யராகிய ஹஸ்ரத் இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (றஹ்.) அவர்களை நோக்கி, ஏதாகிலும் சஹீஹான ஹதீதுகள் தென்பட் டால் தங்களுக்கு தெரிவிக்கும்படி கூறியிருக் கிறுர்கள். இதனல் ஹஸ்ரத் அஹ்மத் (றஹ்.) அவர்கள் ஹதீதுகளை திட்டம் செய்வதில் எவ்வாறு சிறந்து விளங்கினர்களென்பது நன்கு புலனும். ஹஸ்ரத் அவர்கள் குண சாலியாகவும், புத்தி தீக்ஷணியமுள்ளவர்க ளாகவும், தூய்மையான குணம் படைத்தவர் களாயும் கல்வியை பெரும் பாக்கியமாக மதிப்பவர்களாயும் அதற்கு நெகிராக யா தொரு வஸ்துவுமே கிடையாதென்று எண் ணுபவர்களாயு மிருந்தார்கள். ஹஸ்ரத் இமாம் அபூஹனீபா (ரஹ்.) அவர்களின் பிர தான சிஷ்யரான ஹஸ்ரத் இமாம் அபூயூசுப் (றஹ்.) அவர்களிடமும் கல்வி பயின்றிருக்கி கின்றுர்கள். ஹஸ்ரத் அவர்கள் தங்களுக் குக் கிடைக்கும் ஹதீதைத் திட்டப்படுத்தி, இந்த ஹதீதானது எம்பெருமானர் நபீய்ய கரீம் (ஸல்.) அவர்களின் சொல் செயலாக இருக்குமென்று தங்களுக்கு நம்பிக்கை ஏற் பட்டபின், தாங்கள் அதன்படி அமல் செய்த பின்புதான் கிரந்தத்தில் வரைவதற்கு முற் படுவார்கள். இவ்வாறுன அநேக ஆயிரம் ஹதீதுகளை ஹஸ்ரத் அவர்கள் மனனஞ் செய்திருந்தார்கள். எவ்வளவு ஹதீதுகள் மனப்பாடமிருந்ததோ அவையாவற்றையும் அனுஷ்டித்து நடக்கிறவர்களாகவு மிருந்தார் கள். எவர்கள் உண்மையில் எம்பெருமானர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களை உவப்பு பிரியம் வைக்கிறவர்களா யிருந்தார்களோ அவர்க ளெல்லோரும் ஹதீதுகளைமட்டும் கற்றுணர்ந் திருந்தார்களென்பதில்லை; அதன்படி அமல் செய்கிறவர்களாயு மிருந்து வந்தார்கள். அன்னேர் ஹதீதுகளைத் தெரிந்துகொண்ட தெல்லாம் அதன்படி அமல் செய்வற்கே யன்றி வேறில்லை. அவ்வாறு கற்றுக்கொள் வதில் எவ்வளவுதூரம் கஷ்ட நஷ்டங்களை அடைந்திருக்கிறுர்களென்பது அம்மகான் களின் சரித்திரவரலாறுகளை நன்கு தெரிந்து

கொள்வது கொண்டு இனிது புலனுய்விடும். அம்மகான்கள் அளவற்ற பிரயாசையோடு அநேக ஹதீதுகளைத் தெரிந்துகொண்டு அதன்படி தாங்களும் அமல் செய்ததுடன் இதரர்களும் அவ்வாறே செய்யும்படி தூண்டுதல் செய்துவந்திருக்கிறார்கள். அவர்களின் உள்ளும் புறமும் ஒன்றுபோல் இலங்கிக்கொண்டிருந்தது. அப்பெரியார்களின் மனதில் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள்மீது ஏற்பட்டிருந்த மட்டிலடங்காப் பிரதியின் காரணமாய், பெருமானார் (ஸல்.) அவர்களின் சொல் செயல் முதலிய சகலவற்றையும் அப்படியே தயர்ந்து நடப்பதற்கு சதாவும் அரும் பாடுபட்டு, தங்கள் முழு கவனத்தையும் அதிலேயே செலுத்தி வந்திருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் ஹதீதுகளைத் தக்க முறையில் தெரிந்து கொள்வதற்காக தாங்கள் 700 சஹாபிகளைச் சந்தித்து, 7½ லக்ஷம் ஹதீதுகளைக் கேட்டு, அதிலிருந்து 30 ஆயிரம் ஹதீதுகளை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கின்றார்கள். அவ்வாறு ஒழுங்கு படுத்தி வைக்கப்பட்ட கிரந்தம் மிகப் பிரதான கிரந்தமாகத் திகழ்கின்றது. அவர்கள் 'ஹாபிஸுல் ஹதீது' என்னும் சிறப்புப் பெயருடன் சிறந்து விளங்கினார்கள். மேலும் ஹதீதுகளைக் கற்பித்துக் கொடுக்குங்கால் வாய்மொழியாகவே கூறுவார்கள்.

ஹஸ்ரத் அவர்களின் தந்தையின் திருநாமம் முஹம்மதாகும். அவர்களுடைய தகப்பனார் பெயர் ஹன்பல் என்பதாகும். எனவே, ஹஸ்ரத் அவர்களைப் பின்பற்றுவோர் பாட்டனுடைய பெயரைக்கொண்டு ஹம்பலீ என்றே அழைப்பட்டு வருகின்றார்கள். ஹஸ்ரத் அவர்கள் தாங்கள் அளவற்ற பிரயாசையோடு ஹதீதுகளைத் தெரிந்து கொள்வதிலீடுபட்டிருந்ததின் பயனாக பிரஸ்தாபம் என்னும் வானத்தில் ஒளி வீசும்படியான நக்ஷத்திரமாக விளங்கினார்கள். ஹஸ்ரத் அவர்கள் உண்மை பேசுபவர்கள் என்பதில் பெரும் பிரக்யாதி பெற்று விளங்கிவந்ததுடன் எவ்வாறான கஷ்ட சங்கடங்கள் நேரிட்ட போதிலும் உண்மையே பேசுபவர்கள் என்னும் நற்பெயர் பெற்றவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

(தொடரும்.)

முஸ்லிம்களும் ஜக்காத்தும்.

இஸ்லாத்தின் 5 முக்கிய கடமைகளில் ஜக்காத்தும் ஒன்றாகும். இந்த ஜக்காத்தை வற்புறுத்தி இறைவன் தனது திருமறையின் கண் அநேகம் இடங்களில் கூறி இருக்கிறான். இஸ்லாத்தின் 5 கடமைகளில் இது மூன்றாவது கடமையாகக் கருதப்படுகிறது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு கலீபாகவாக இருந்த ஹஜ்றத் அபூபக்ர் ஸித்தீக் (றலி.) அவர்கள், தங்கள் காலத்தில் ஜக்காத் கொடுக்க மறுத்தவர்களிடம் (ஜிஹாத்) யுத்தம் செய்ததாகச் சரித்திரம் கூறுகிறது. எனவே, இதிலிருந்து நாம் ஜக்காத் கொடுப்பதை நபிகள் நாயகமவர்களும் ஸஹாபிகளும் எவ்வளவு முக்கியமாகப் பாவித்து வந்திருக்கிறார்கள் என்பதை யூகித்துக்கொள்ளலாம். ஆகவே இந்த ஜக்காத் என்பது என்ன? இதை யார் யார் கொடுக்கவேண்டும். இதைப்பெற உரிமையுள்ளவர் எவர்? இதனாலேற்படும் பயன் யாது என்ற விஷயங்களைக் கவனிப்போம்:—

தன்னுடைய பொருளிலிருந்து ஒருபாகத்தை, ஹாஷிம் குலத்தைச் சேராமலும், அவர்களால் உரிமை விடப்பட்ட அடிமையாக அல்லாமலும் இருக்கிற முஸ்லிம் ஏழைக்கு, அல்லாஹ்வுக்காகச் சொந்தப்படுத்திக் கொடுப்பதற்கு ஜக்காத் என்று பெயர். ஆனால், அறபிப் பாஷையில் 'ஜக்காத்' என்ற பதத்திற்கு அதிகப்படியானது என்று அருத்தங்கொள்வர். எனவே, இதிலிருந்து எவர்மீது ஜக்காத் விதியாகிறதோ அவரிடம் அதிகப்படியான சொத்து இருக்கிறதென்றும், அந்த அதிகப்படியான சொத்தைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்துக்கொள்ள

அவனுக்கு உரிமையில்லை என்பதும் ருஜூ வாகிறது.

தவிர, இந்த ஜக்காத் பணத்தை அதை யடைய அருகதை யுள்ளவரிடம் ஒப்புவிக்கா மல் அந்தப் பணத்திலிருந்து உண்டி தயார் செய்து, அதை அருந்த அனுமதிப்பது அல்லது தனக்குச் சொந்தமான ஒரு வீட்டில் ஒரு ஏழையைக் குடிவைத்து அதை ஜக்காத் பணத்திலிருந்து வஜாச்செய்வது கூடாது. ஏனெனில், ஜக்காத் பணத்தைப் பிறரிடம் பரிபூரணமாக ஒப்புவித்துவிட வேண்டும். சாப்பிட அனுமதிப்பதும், குடியிருக்க வைப்பதும் பூரணமாக ஒப்புவிப்பதாகாது. தன் பெற்றோர்கள், பிள்ளைகள் தன் மனைவி அல்லது கணவன் ஆகியவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. ஏனெனில், இவர்களுக்கு அளிக்கும் பொருள் மறுபடியும் தன்னிடம் வந்து விட இடமுண்டு. தவிரவும் ஏழைகளாகிய பெற்றோருக்கு பணக்காரர்களாகிய மக்கள் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவ்விதமே ஏழைகளாகிய மக்களைப் பராமரிக்கப் பெற்றோர்களும் கடமைப்பட்டிருக்கின்றனர். கணவன் மனைவிக்கிடையிலும் இதேவிதமான சம்பந்த மிருப்பது தெரிந்த விஷயம். ஆதலால் இவர்களுக்குக் கொடுக்கும் பணம் தன்னைவிட்டு முற்றிலும் நீங்கிய தாக மாட்டாது.

கடனைவிட்டும், தனக்கு அவசியமாக வுள்ள செலவுகளை விட்டும் அதிகப்படியான முதல், ஒரு வருஷம் பூர்த்தியாகத் தன்னிட மிருக்குமாயின் அதற்காக ஜக்காத் கொடுக்க வேண்டும். இவ்விதம் அதிகப்படியாக வுள்ளது 200 திர்ஹத்தைக் கடந்துவிட வேண்டும். அதாவது 52½ ரூபாய் அல்லது அது பெறுமான நகை முதலியவைகள். ஆடுமாடு ஒட்டகம் பூமி இவைகளுக்கு வேறுவிதமான ஜக்காத் உண்டும். எனவே மேற்கண்ட விகிதப்படியுள்ள சொத்துக்காரன் தன்னுடைய அதிகப்படியான சொத்தில் நாற்பதில் ஒரு பாகம் ஜக்காத் கொடுக்க வேண்டும்.

இந்த ஜக்காத்தை அடைய உரிமையுள்ளவர்கள் எட்டு வகையினராவர். அதாவது: பக்கீர் (அதாவது மேற்கூறப்பட்ட விகிதத்துக்கும் குறைந்தசொத்துள்ளவர்), மிஸ்கீன், (எவ்விதச் சொத்தும் இல்லாதவர்) ஆமில், (இந்த ஜக்காத் வகையராக்களை வசூல் செய்பவர்கள்) முஅல்லபத்துல்குலூப், (அதாவது மௌலா இஸ்லாம்), அடிமைகள், கடனாளிகள், (தன்னுடைய சொத்திலிருந்து கடன் கொடுத்தால் அவனுக்கு மீதப்படும் சொத்தில் அவன்மீது ஜக்காத் கொடுப்பது கடமையாக ஏற்படாதவன்), வழிப்போக்கர்கள் (முஸாபிர்கள்), மார்க்க யுத்தம் புரிவோர் ஆகியவர்களாவார்கள். இவர்களையன்றி ஏனைய ஜனங்களுக்கு ஜக்காத் கொடுக்கலாகாது. ஒரே ஒருவருக்கு மாத்திரம் ஜக்காத் பொருளைக் கொடுத்து அவரைச் சீமானுக்குதல் கூடாது. (மக்றூஹூ). ஜக்காத் பணம் விநியோகம் செய்யும் தினத்தில் சுவால் செய்யாதிருப்பது முஸ்தஹப்பு. ஒரு நாளுக்கு வேண்டிய உணவுள்ளவர்கள் ஜக்காத் பணம் வாங்குவதற்காக சுவால் செய்ய மாட்டார்கள். அதாவது பிச்சையெடுப்பது ஹலாலல்ல.

எனவே, இந்த மஸ்அலாவிலிருந்து, ஒரு நாளுக்கு வேண்டியவரைவுள்ளவர் பிச்சை எடுப்பது கூடாது என்று நமது மார்க்கம் கட்டளையிட்டிருக்க, ஜக்தாத் பணத்தைவாங்குவதற்கென ஊரூராய்ப் பிரயாணம் செய்துகொண்டிருப்பது தகுமா என்பதைக் கவனிக்கவேண்டும். இத்தகையவர் பக்கீருடைய கூட்டத்தில் சேர்க்கப்படத் தகுதியுள்ளவராக இருந்தும் தானாக வலியச்சென்று பிச்சை கேட்பதை இஸ்லாம் மதம் விலக்குகிறது என்பதை இந்த பக்கீர்களும் ஜக்காத் பணம் வாங்க அலைபவர்களும் நன்கு கவனிக்கவேண்டும். சில ஊர்களிலுள்ள லெப்பைமார்களும், மற்றவர்களும் (இவர்களுக்குப்போதிய சொத்திருந்தும்) ஜக்காத்பணத்தை வாங்கப் புறப்பட்டு விடுகின்றனர். இவர்கள் ஊர் மக்களுக்கு உழைப்பவர் எனக் கருதி ஜக்காத் கொடுப்பவர்கள், மற்ற ஏழைகளுக்குக் கொடுப்பதைப் பார்க்கிலும் அதிகப்படியாகவே கொடுத்துவிடுகின்றனர். இவ்விதம் கொடுப்பதில் இரண்டுவித நஷ்டமேற்படுகிறது. அதாவது பிச்சை எடுக்கத்தகாதவர் பிச்சை எடுக்கச்செல்லுகிறார். ஜக்காத் பணத்தை அடைய உரிமையற்றவருக்கு ஜக்காத் பணம் கொடுக்கப்படுவதால் அவ்வாறு கொடுக்கப்பட்ட அந்தப் பணம் ஜக்காத்தாக நிறைவேறுவதில்லை. இதனால் கொடுப்பவரும் வாங்குபவரும் குற்றவாளிகளாகின்றனர்.

தக்க இனத்தைக் கவனித்து ஜக்காத் பணத்தைக் கொடுக்காமல் வந்தவர் யாவருக்கும் ஜக்காத் கொடுப்பதாலும், பிச்சை எடுக்கத் தகாதவர்களும் பிச்சை எடுக்கப் புறப் பட்டுவிடுவதாலும், பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கென இறைவனல் நமக்கு விதிக்கப்பட்ட இந்த கடமையினுல் வருஷந்தோறும் றமளான் மாதத்தில் அநேகம் ஆயிரக்கணக்கானவர்கள் பொருளாசையினுல் பிச்சை எடுக்கப் புறப்பட்டுவிடுவதை நாம் பார்க்கிறேம். எனவே ஜக்காத் கொடுப்பவர் ஜக்காத் பணத்தை அடையத் தகுதியுள்ளவரைக் கவனித்துக் கொடுப்பதும், பிச்சையெடுக்கத் தகாதவர் பிச்சைக்குச் செல்லாதிருப்பதும் அவசியமாகும். தவிரவும் அவ்வாறு கவனிப்பதால் மிக மிக ஏழைகளாயுள்ளவர்களுக்கு அந்தப்பணம் உதவுவதால் நாட்டில் தரித்திரம் நீங்கி பிச்சை எடுப்பவரும் குறைவர் என்பதை அறிவித்துக் கொள்கிறேம்.

இஸ்லாமிய ஒழுக்கம்.

சென்ற வருஷத்திய மீலாத் கொண்டாட்டத்திற்கென நபிகள் நாயகமவர்களின் சரித்திரவரலாற்றை எழுதி உலகுக்கு ஈந்த அறிஞர் நவ்வாப் ஸத்ருயார்ஜங் பஹாதுர் மௌலான ஹபீபுர் ரஹ்மான்கான் சாகிப் ஷெர்வானீ அவர்கள், இஸ்லாமிய ஒழுக்கம் சம்பந்தமாக நீண்ட வியாசம் எழுதி இருக்கிறர்கள். அவைகளிற் சில வற்றை நம் வாசகர்களுக்கு எடுத்தெழுதுவாம். ஒழுக்கத்தை விரும்பாத மக்கள் ஒருவருமில்லை. ஒழுக்கத்தைப்போதிக்காத மதமுமில்லை. ஒழுக்கத்தை வற்புறுத்தாத நாடுமில்லை. எங்குபார்த்தாலும் ஒழுக்கம் ஒழுக்கம் என்றே ஓலம் கேட்கப்பட்டு வருகின்றது. ஆனல் ஒவ்வொரு வகுப்பாரும் ஒழுக்க விஷயத்தில் இவ்வளவு தூரம் ஒற்றுமையாக இருந்தாலும் அதை நிர்ணயிப்பதில் அபிப்பிராயபேதமுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் அவரவருடைய உணர்ச்சிதான். ஒவ்வொருவரும் தத்தம் உணர்ச்சியைத் தழுவி ஒன்றை சிரேஷ்டமாகக் கூறுவர். அது மற்ருெரு சாராரின் உணர்ச்சிக்கு விரோதமாக இருக்கலாம். ஆதலால், அது அவருக்கு சிறந்த ஒழுக்கமாகப் புலப்படாது போகும். இவ்விதமாக ஒழுக்கத்தை வற்புறுத்தும் ஜன சமூகத்திலும் அதை நிதானிப்பதில் ஒற்றுமையில்லை என்பது நிதரிசனமாயிருக்கிறது. ஆதலின் பிற மதத்தவர்கள் விஷயத்தைக் கருதாமல் நம் சத்திய இஸ்லாம் மதம் நமக்குப் போதிக்கும் ஒழுக்கத்தைப்பற்றி மாத்திரம் நாம் கவனிப்பது அவசிபமாகும். ஏனெனில், நம்முடைய இம்மை மறுமைப் பேற்றிற்குரிய வழிகாட்டி நமக்கு இஸ்லாம்மதம் தான். இஸ்லாம் இல்லையென்ருல் நாமும் இல்லை. நாம் இருக்கிறேம் என்ருல் இஸ்லாமும் இருக்கிறது. எனவே நமக்கு உயிரைப் போலிருக்கிற மேலும் அதிலும் அதிகமாயிருக்கிற இஸ்லாத்தைத்தான் நாம் கவனிக்க வேண்டும். அது நம்மை எவ்விதம் தூண்டுகிறது என்பதைத்தான் கவனிக்க வேண்டும். எனவே, மௌலான அவர்கள் இஸ்லாமிய ஒழுக்கம் என்று தலையங்கமிட்டு, இஸ்லாம் மதம் நமக்கு போதிக்கும் ஒழுக்கமென்னவென்று விளக்கி இருப்பதால், அது நம்மவருக்கு அதிகம் பிரயோஜனம் செய்யுமென நம்புகிறேம். அது வருமாறு :—

உண்மை.

இஸ்லாமிய போதனையில் உண்மை மூன்று விதமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. எண்ணம், சொல், செயல், (அதாவது மனம் வாக்கு காயம்) ஆகிய மூன்றிலும் மனிதன் உண்மையாயிருக்கவேண்டும். "(நபியே) உம்மிடம் முனபிக்குகள் வந்தால் நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதர் என்று நாங்கள் சாக்ஷியங் கூறுகிறேம் என்று கூறுவார்கள் ஆனல், நிச்சயமாக நீர் அவனுடைய தூதர் என்பதை அல்லாஹ் அறிகிறன். இன்னும் நிச்சயமாக அந்த முனபிக்குகள் மஹா

பொய்யர்கள் என்பதை அல்லாஹ் சாக்ஷியங் கூறுகிறான்'' என்று நமக்கு தெய்வத்திரு மறை தெளிவுபட விளக்குகிறது. அதாவது, நபிகள் நாயகம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்தான் என்பதில் சந்தேகமே இல்லை. மூனபிக்குகளும் நாயகமவர்களை அல்லாஹ் வின் தூதர் என்றுதான் இயம்பியுளர். எனவே அவர்கள் கூறிய வார்த்தைகள் உண்மையே யாயினும் அவர்கள் எண்ணம் அவ்வாறிருக்கவில்லை. ஆதலால்தான் அவர்கள் உண்மையை யுரைத்தும் அல்லாஹு சுபுஹான ஹுவதஆலா அவர்களை பொய்யர்களென புகன்றுளான்.

"எல்லாக் கிரியையிலும் உண்மையான உள்ளம்தான் மேலானது'' என்பது நாயக வாக்கியம். உண்மை யுரைப்பதில் உங்களுக்கு ஆபத்து வருவதாகத் தோன்றிடினும் அதில் உங்களுக்குக் கதிமோக்ஷமிருக்கிறது ஆதலின் உண்மையைக் கடைப்பிடியுங்கள். ஏனெனில், உண்மை நன்மையின் பக்கல் உங்களை அழைத்துச்செல்கிறது. நன்மை சொர்கத்தில் சேர்க்கிறது. உண்மையே பேசி உண்மையிலிருப்பானாயின் அவன் அல்லாஹ் விடத்தில் உண்மையாளன் என்றெழுதப்படுகிறான். பொய்யானது துற்செய்கைக்கு வழி காட்டியா யிருக்கிறது. துற்செய்கை நாகத்தில் சேர்க்கிறது. "பொய்யுரைத்து அதிலேயே ஸ்திரமாயிருப்பானாயின் அல்லாஹ்விடத்தில் பொய்யன் என எழுதப்படுகிறான்'' என்று நாயகமவர்கள் நவின்றிருக்கிறார்கள்.

"மனிதன் தன் சொல்லை உண்மையினால் அழகுபடுத்துவதுதான் அழகு; தன்னுடைய செய்கைகளை உண்மையினால் ஒழுங்குபடுத்துவதுதான் திறமை'' என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள்.

வஸ்துக்கள் அவைகளுக்கு மாறானவைகளைக் கொண்டு நன்கு உணரப்படுகின்றன. அதாவது, ஒன்றுக்கொன்று நேர் விரோதமான இரண்டு வஸ்துக்களை ஒப்பிட்டுச் சீர் தூக்கிப் பார்க்கும்போது அவைகள் நன்கு உணரப்படுகின்றன. ஆதலால், உண்மையைப்பற்றி நாம் கூறுமிடத்து, பொய்யைப் பற்றியும் நாயகமவர்கள் கூறி இருப்பதை ஈண்டு குறிப்பிடுவது அவசியமெனக் கருதுகிறோம்:

"பொய்யானது ஈமானுக்கு வெகு தூரத்திலிருக்கிறது. ஆதலின் பொய்யைத் தவிர்ந்துக் கொள்ளுங்கள். ஒருவன் பரிகாசத்திற்கேனும் பொய்யுரைப்பதை விடாதவரை இன்னும், உண்மையானவனாக இருந்தபோதிலும் சச்சரவு செய்வதைத் தவிர்க்காதவரை அவனுடைய ஈமான் பரிபூரணமாகாது. பொய்யானது முகத்தைக் கருப்பாக்கி விடுகிறது. நீ உனது சகோதரன் ஒருவனிடம் ஒரு சமாச்சாரத்தைக் கூறுகிறாய்; அது உன்னிடத்தில் பொய்யாக இருக்கிறது; ஆனால் அதை அவன் மெய்யென நம்புகிறான் இது எவ்வளவு பெரிய மோசடி என்பதைச் சிந்தித்துப்பார். எனவே, பொய்யுரைத்தல் அது பரிகாசத்திற்காகவேனும் அல்லது தமாஷுக்காகவேனும் சரியே கூடாத காரியமாயிருக்கிறது. தன் மைந்தனுக்கு ஒரு வாக்குறுதியைச் செய்து அதை நிறைவேற்றாமலிருப்பதுங்கூட ஜாயிஸ் இல்லை.'' பொய்யுரைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாத சந்தர்ப்பங்களிலுங் கூட ஆதாரமற்ற ஒரு பேச்சைக் கூறிவிடுவதையும் நாயகமவர்கள் நமக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஆகவே பொய்யின் வாடையைக்கூட விலக்கி இருக்கிறார்கள். ஒரு ஸஹாபிப் பெண் ரிவாயத்துச் செய்வதாவது'—

"ஒரு நாள் நாங்கள் நாயகமவர்களின் சமுகத்திலிருந்தோம். நாயகமவர்களுக்கு உணவு கொண்டுவரப்பட்டது. உணவருந்தும்படி எங்களையும் நாயகமவர்கள் கூறினார்கள். எங்களுக்குப் பசிக்கவில்லை என்று நாங்கள் யாவரும் கூறினோம். அதற்கு நாயகமவர்கள் பசியுடன் பொய்யையும் ஒன்று சேர்க்காதீர்கள் என்று கூறினார்கள்.''

ஒருமுறை நாயகமவர்கள் தங்கள் மனைக்கேகினார்கள். மனையில் தங்கள் மனைவியான உம்முல் மூமினீன் ஹஜ்றத் ஆயிஷா ஸித்தீக்கா (ரலி.) அவர்கள் தமது சகோதரின் தலையில் பேன் பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பேனில்லா விட்டாலும் வெறுமனே தனது நகத்தினால் சட் சட் என்ற சப்தம் உண்டாக்கிப் பேனைக் குத்துவதுபோல் நடித்தார். உடனே நாயகமவர்கள் "ஆயிஷாவே! அவ்வாறு செய்ய வேண்டாம். இது விரல்களுக்குரிய பொய் என்பது உனக்குத் தெரியாதா?'' என்றார்கள்.

ஒரு முறை ஒருஸ்திரி நாயகமவர்கள் முன்னிலையில் தன்னுடைய புதல்வனை "மகனே! வா!உனக்கு ஒன்று தருகிறேன்" என்றுகூறி அழைத்தனள். அப்பொழுது நாயகமவர்கள் அந்தஸ்திரீயை நோக்கி, அந்தப் பையனுக்கு என்ன கொடுக்கவேண்டும் என எண்ணி இருக்கிறாய் என்று வினவினார்கள். அதற்கு அந்த ஸ்திரி "அல்லாஹ்வின் தூதரே! ஒரு கஜூர் பழம் கொடுப்பேன்" என்றனள். அப்பொழுது நாயகமவர்கள் அந்த ஸ்திரீயை நோக்கி "அந்தப் பையனுக்கு நீ ஏதுங்கொடுக்க வில்லையானால் உன்னுடைய அந்தச்சொல் உனது கிரியைகளில் பொய் என்று எழுதிவைக்கப்படும்" என்றார்கள்.

"ரமளான் மாதம் முழுதும் நோன்பு நோற்றேன் என்றோ, ரமளான் இரவு முழுதும் வணங்கினேன் என்றோ நீங்கள் கூற வேண்டாம்" என நாயகமவர்கள் விலக்கி இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது பகற்பொழுதில் மாத்திரம்தான். இராக்காலங்கள் நோன்பாக இருப்பதில்லை. இராமுழுதிலும் ஒருவன் வணங்கிக்கொண்டிருக்க முடியாது. மலஜல உபாதைகள், மற்றவருடன் சம்பாஷித்தல் போன்ற பல காரியங்களையும் செய்யச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும். ஆதலால் ரமளான் மாதம் முழுதும் நோன்பு வைத்ததாகவோ அல்லது ரமளான் இரவு முழுதும் வணங்கியதாகவோ ஏற்படாது.

பொய்யுரைப்பதற்குரிய காரணத்தையுங்கூட நாயகமவர்கள் கூறி இருக்கிறார்கள். தன்னை எவன் கேவலமாகக் கருதுகிறானோ அவன்தான் பொய்யுரைக்கிறான் என்று கூறி இருக்கிறார்கள். பொய்யின் மோசமானவழியாதெனில் நிபாக்கு(நயவஞ்சகம்)தான். நபிகள் நாயகமவர்கள் காலத்தில் மதீனாவிலிருந்தவர்களில்எவர் வெளிக்கு முஸ்லிமாகவும், உள்ளில்காபிராகவும் நடித்தனரோ அவர்கள்உள்ளும் புறமும் ஒன்றுபோல் காபிராக இருந்தவர்களைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு கெட்டவர்களாகப் பாவிக்கப்பட்டனர்.

"நிச்சயமாக முனாபிக்குகள் நரகத்தில் மிகக் கீழான படியிலிருக்கின்றனர்" என்று திருவேதமும் தீர்ப்புக்கூறி இருக்கிறது. மனதிலில்லாததை வாக்கினுரைப்பதும் முனாபிக்குத் தன்மைதான். ஒருமுறை ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்கள் ஒருவரைப் பார்த்து "நீங்கள் அவருடன் எவ்வாறு நடந்துகொள்கிறீர்கள்" என்று வினவினார்கள். அதற்கு அவர் நாங்கள் அவரைச் சந்திக்கும்போது அவரைச் சந்தோஷப்படுத்தும் படியான பேச்சைக் கூறுகிறோம். அவரிடத்திலிருந்து வந்துவிட்டால் அதற்கு விரோதமாகப்பேசுகிறோம் என்று கூறினர். அதற்கு ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.) அவர்கள், "நபிகள் நாயகமவர்கள் காலத்தில் இப்படிச் செய்வதை முனாபிக்குத்தனம் என யாங்கள் கருதிவந்தோம்" என்று கூறினார்கள். சொல்லி, சொன்னதுபோல் செய்யாதிருப்பதுவும் முனாபிக்குத் தன்மைதான். நாயகமவர்களின் ஸஹாபியான ஹஜ்ரத்ஹுதைபா (ரலி.) அவர்களிடம் ஒருவர் 'நிபாக்' என்றால் என்ன? வென வினவியபோது, இஸ்லாத்தின் ஏற்றத்தை எடுத்துக் கூறி அதன்படி நடவாதிருப்பதுதான் நிபாக்கு. நீங்கள் செய்யாததை, நீங்கள் சொல்வது அல்லாஹ்விடத்தில் சகிக்க முடியாததாக இருக்கிறது என்று திரு குர்ஆன் கூறுகிறது என்று பதில் கூறினார்கள்.

முனாபிக்குகளுக்கு மூன்று அடையாளங்களிருக்கின்றன. அவன் பேசும்போது பொய்யுரைப்பான், வாக்குறுதி செய்தால் அதற்கு மாறு செய்வான், அமானிதம் வைத்தால் அதை மோசம் செய்வான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. மனிதன் துற்செய்கையில் எல்லையை யடைந்துவிட்டால் தன்னுடைய கண்களுக்கு அவன் எஜமானாகிவிடுகிறான். அதாவது நினைத்த மாத்திரத்தில் கண்ணீர் வடிக்கும் பழக்கத்தை யுடையவனாகிவிடுகின்றான். எனவே நீலிக் கண்ணீர் வடிப்பதில் திறமையுள்ளவனாகி விடுகின்றான். இது மற்றொருவிதமாகவும் கூறப்படுகிறது. அதாவது ஈமானுள்ளவர்கள் மனதால் அழுகின்றனர்; நிபாக்குள்ளவர்கள் மூளையினாலழுகின்றனர். அதாவது கடவுள்பால் பக்தியுள்ள மூமின்கள் உருக்கமுடன் மனவாக்குக் காய சுத்தியுடன் உருகிக் கண்ணீர் சொரிவர். நயவஞ்சகப்புல்லர்கள், மனவாக்குக்காயசுத்தியின்றி அவர்களுடைய புத்தியானது இவ்விடத்தில் கண்ணீர் வடித்தால்தான் ஏமாற்ற முடியும் என அறிவிக்குமாயின் உடனே தாரை தாரையாய் கண்ணீர் சொறிந்துவிடுவர்.

அமானிதம்

அமானிதத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் ஹதீதுகளைக் கவனிக்குமிடத்து, ஈமானுள்ளவர்களுக்கு இஃதோர் முக்கியாம்சமாக இருக்கிறது. அமானத், ஈமான் என்ற இரு அரபிப் பதங்களுடைய அடிப்படையானது (Root) நெருங்கிய சம்பந்தமுள்ளதாக இருப்பதுபோல், அதன் கருத்துக்களும் நெருங்கிய சம்பந்தமுள்ளவைகளாகவே இருக்கின்றன. மூமினானவனிடம் பொய்யையும், மோசத்தையும் தவிர பாக்கியுள்ள கெட்ட பழக்கங்கள் இயற்கையா யிருக்கக் கூடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஈமானும் மோசக்கருத்தும் ஒன்று சேரா என்று ஹதீதில் வந்திருக்கிறது. அமானிதத்தைக் காப்பாற்றும் தன்மையற்றவனுக்கு ஈமானில்லை; வாக்குறுதியை நிறைவேற்றாதவனுக்கு மதமில்லை என்று நபிகள் நாயகமவர்கள் தங்கள் குத்பாப் பிரசங்கங்களில் கூறுவது வழக்கம் என்று ஹஜ்ரத் அனஸ் (ரலி.) கூறியிருக்கிறார்கள்.

"உன்னிடத்தில் அமானிதம் வைத்தால் அதை நிறைவேற்று; உனக்கு ஒருவன் மோசஞ்செய்தால் அதற்காக அவனுக்குமோசஞ்செய்யாதே; அமானிதம் சீமான்தனமாகும்; அமானிதம் பெருமை பயப்பதாகும்" என்று பெருமானார் நவின்றுள்ளார்கள். இருதயத்தில் மோசக்கருத்து இருக்கும்வரை உண்மையான கண்ணியத்தை அடைவதெப்பொழுது? "உங்களுடைய மார்க்க பக்தியில் எல்லாவற்றிற்கும் முதன்மையாகச் செல்லும் கிரியை அமானிதம்தான்" என்று கூறப்பட்டிருக்கிறது. "நீங்கள் ஒருவனுடைய தொழுகையைக் கவனிக்காதீர்கள். இன்னும் அவனுடைய நோன்பைக் கவனிக்காதீர். ஆனால் பேச்சில் உண்மையுரைக்கிறானா? அமானிதத்தை நிறைவேற்றுகிறானா என்று கவனியுங்கள்" என ஹஜ்ரத் உமர் (றலி.) கூறி இருக்கிறார்கள்.

வாக்குறுதியை நிறைவேற்றல்.

ஈமானுக்கு அமானிதம் எவ்வளவு முக்கியமாக இருக்கிறதோ அவ்வளவு முக்கியம், மத பக்திக்கு வாக்குறுதியை நிறைவேற்றுதல் இருக்கிறது. ஆதலால் "வாக்குறுதியை நிறைவேற்றாதவனுக்கு மார்க்கபக்தியில்லை" என்று வந்திருக்கிறது. "உங்களில் சிறந்தவர் எவர் என்று நான் கூறமாட்டேன். எனினும், பரிசுத்த மனத்துடன் வாக்குறுதியை நிறைவேற்றுபவர் உங்களிற் சிறந்தவர் ஆவார்." "நியாயத் தீர்ப்பு நாளில் பரிசுத்த மனத்தவராய் வாக்குறுதியை நிறைவேற்றுபவரே அல்லாஹ்வின் நல்லடியாராயிருப்பார்" என்றும் வந்திருக்கிறது. வாக்குறுதியை நிறைவேற்றுதல் என்ற பிரசினையில், மற்றொரு சாரார், எந்த மதத்தையுடையவர் எந்தக் கொள்கையையுடையவர் என்ற பாகுபாடு செய்யவில்லை. எவரிடத்தில் வாக்குறுதி, அல்லது உடன்படிக்கை செய்தாலும் அதை நிறைவேற்றுங்கள் என்றுதான் கட்டளையிடப்பட்டிருக்கிறது.

ஹுதைபா என்ற ஸஹாபி கூறுவதாவது:—பத்று யுத்தத்திற்கு முன் என்னையும் எனது தந்தையரையும் மக்கத்து முஷ்ரிக்குகள் பிடித்துக் கொண்டு, பத்ரில் நாயகமவர்களுடன் சேர்ந்து, முஷ்ரிக்குகளுக்கு விரோதமாக யுத்தம் செய்யக் கூடாது என்று வாக்குறுதி வாங்கிக்கொண்டு விட்டு விட்டனர். பின்னர் பத்றுயுத்தம் ஏற்பட்ட காலத்தில் நாயகமவர்களிடம் ஹுதைபா (றலி.) அவர்கள் இச்சம்பவத்தைக் கூறிய போது "நீங்கள் செய்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்; முஷ்ரிக்குகளை எதிர்க்கும் விஷயத்தில் எங்களுக்கு அல்லாஹுதஆலாவின் உதவி வேண்டியதா யிருக்கிறது" என்று கூறிவிட்டார்கள். பத்றுயுத்த சம்பவத்தை யுணர்ந்தவர்களுக்கு, இந்த ஹதீதில் நாயகமவர்கள் செய்த கட்டளையினால், நாயகமவர்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் எவ்வளவு சிரத்தையுடனிருந்தார்கள் என்பது தெரியவரும். வாக்குறுதியை நிறைவேற்றும் விஷயத்தில் நடந்த சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் பற்றி இஸ்லாமிய சரித்திரத்தில் அதிகம் கூறப்பட்டிருக்கிறது. அதிலும், திம்மிக்காபிர் என்று சொல்லப்படுபவர்களாகிய பிறமதத்தவர்களுடன் முஸ்லிம்கள் செய்த உடன்படிக்கைகளையும் அவைகளை அவர்கள் நிறைவேற்றிய முறைகளையும் பார்வைக்கு மூனாவாக இரண்டொரு சம்பவத்தை ஈண்டு குறிப்பிடுவாம்:—

ஹஜரத் உமர் (றலி,) அவர்கள் கலீபாவாக இருந்தகாலத்தில் ஷாம்தேசத்தில் ஹஜ்ரத் அபூ உபைதத்துப்னு ஜர்ராஹ்

(றலி.) அவர்களின் தலைமையில் உரோமர்களுடன் யுத்தம் நடந்தது. ஹிம்மஸ் நகரை முஸ்லிம்கள் கைப்பற்றிய பின் உரோமச் சக்கிரவர்த்தியான ஹிர்க்கல், மிகப் பலமான படையைத் திரட்டி ஒரே மூச்சில் முஸ்லிம்களை நசுக்கிவிட ஆயத்தம் செய்தான். இதையுணர்ந்த ஹஜ்ரத் அபூ உபைதா (றலி.) அவர்கள், தங்களது ராணுவத் தளகர்த்தர்களை ஒன்று கூட்டி ஆலோசனை செய்தார்கள். ஹஜ்றத் முஆவியா (றலி.) அவர்களின் சகோதரரான யஜீதுப்னு அபீசுப்யான் (றலி.) அவர்கள், பெண்களையும் பிள்ளைகளையும் முதியோரையும் நகரத்தில் விட்டுவிட்டு நாம் யாவரும் நகருக்கு வெளியில் ஒன்று கூடி யுத்தம் செய்யவேண்டும்; இதற்குள் காலிதுப்னு வலீத் (றலி.) அம்றுப்னுல் ஆஸ் (றலி.) ஆகிய தளகர்த்தர்களையும் திமிஷ்கு, பலஸ்தின் ஆகிய இடங்களிலிருந்து தருவித்துக் கொள்ளவேண்டும் என்று கூறினர். ஷர்ஹபீலுப்னுஹஸனு (றலி.) அவர்கள், இச்சந்தர்ப்பத்தில் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறப் பூரணச் சுயேச்சை யளிக்கவேண்டும் அதாவது, பட்டணத்திலுள்ளவர் யாவரும் புறமதத்தவராயிருப்பதால் நமது பெண்டு பிள்ளைகளைக் கைதி செய்து நமது விரோதிகளிடம் ஒப்புவித்துவிடக் கூடும் என்றூர். அதற்கு அபூஉபைதா (றலி.) அவ்வாருயின் அவர்களை நகரத்தை விட்டு வெளியேற்றிவிடுவோம் என்றூர். அதை மறுத்து ஷர்ஹபீலுப்னுஹஸனு (றலி.) தலைவ! உங்களுக்கு அவர்களை வெளியேற்ற உரிமையில்லை. கிறிஸ்தவர்கள் நகரத்தில் சமாதானமாக வாழவேண்டும்; அவர்களுக்காக நாம் யுத்தம் செய்யவேண்டும் என்றல்லவோ நாம் அவர்களுக்கு அபயம் கொடுத்திருக்கிறோம் என்று கூறினர். அபூ உபைதா (றலி.) அவர்கள் தமது தவறை ஒப்புக்கொண்டு, இறுதியாக ஹிம்மஸ் நகரையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் காலி செய்துவிட்டு எல்லாச் சேனையையும் பந்தோபஸ்தான ஒரு இடத்தில் ஒன்று கூட்டிக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து, 'பிரஜைகளுக்குப் பாதுகாவல் செய்வதாக ஒப்புக்கொண்டு அவர்களிடம் "ஜிஸ்யா" வரி வாங்கி இருக்கிறோம்; தற்சமயம் நாம் காலி செய்துவிடுவதால் நமது காப்பு அவர்களுக்கில்லை ஆதலின் அவர்களிடம் வாங்கிய வரியை நாம் அபகரிக்கக் கூடாது' என்று கூறி லக்ஷக்கணக்காக வசூலாகி இருந்த திரவியத்தை வாபஸ் செய்துவிட்டுச் சென்றூர்கள்.

இவர்கள் இவ்வாறு செய்ததையும் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்ததையும் கண்ட யூதர்களும் கிறிஸ்தவர்களும், இவர்களின் பிரிவுக்காகக் கண்ணீர் வடித்ததுடன் இவர்கள் வெற்றியடைந்து திரும்பவந்து நாட்டை யாளவேண்டும் என்றும் பிரார்த்தித்தனர். முக்கியமாக யூதர்கள் ஹிம்மஸ் நகரிலுள்ள கோட்டை வாசல்களை எல்லாம் அடைத்துக் கொண்டு அவ்வூரில் ஹிர்க்கல் சைனியங்கள் பிரவேசியா திருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர்.

இதிலிருந்து, தங்களுக்கு விரோதியாகவுள்ளவர்களை ஜெயித்து அவர்களுக்கு அபயம் கொடுத்த பின், அவர்களைக் காப்பாற்றுவதாக முஸ்லிம்கள் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றினர் என்பதை உணரவேண்டும்.

தொழுகையின் அவசியம்

இஸ்லாம் மார்க்கத்திலுள்ள கடமைகளில் பிரதானக் கடமை தொழுகையாகும். எனவே, இக்கடமை எந்த நேரத்திலும், எந்த விதத்திலும் (சிலகுறிப்பிட்ட மார்க்க சம்பந்தமான சங்கடம் ஏற்பட்ட சமயத்தைத்தவிர) மன்னிக்கப்படுவது கிடையாது. ஆகவே, இஸ்லாமிய வணக்கங்களிலெல்லாம் தொழுகையானது மகா சிரேஷ்டமாய்த் திகழ்வதால், சகல வணக்கங்களுக்கும், கிரீடம் போன்றும் அல்லாஹ்த ஆலாவால் உகப்பட்டதாகவும் மிளிர்ந்துகொண் டிருக்கின்றது மகாக் கீர்த்தியும் மேன்மையும் வாய்ந்த அல்

லாஹ்த ஆலா தன் பரிசுத்த வேதத்தின் 700 இடத்தில் தொழுகையை நிறைவேற்றும்படி கூறி இருக்கிறானென்றால், தொழுகையின் முக்கியத்தையும் அவசியத்தையும் வற்புறுத்த வேறு எவ்வாறான ஆதாரங்களும் தேவையாகமாட்டாதென்பது வெளிப்படை. மானிடன் மார்க்கக் கட்டளையைப் பின்பற்றியொழுகுவதற்கு குர்ஆனின் ஒரு ஆயத்தே போதுமானதாகயிருக்க, 700 இடத்தில் கூறியிருப்பது எவ்வளவு விசேஷம் பொருந்தியதாக அமைந்திருக்கிறதென்பது நன்குபுலனாகும். அல்லாஹ்த ஆலா தனக்கு பயந்து நடந்தவும், இம்மை மறுமையில் சீதேவித்தனம் பெற்றவுமானவர்களைச் சிலாகித்துக் கூறுங்கால், அன்னோர் மறைவான விஷயங்களின்மீது உறுதி கொண்டு, தொழுகையை நிலைநிறுத்துகிறவர்களென்று கூறி இருக்கின்றான். இவ்வாக்கியத்திற்கு விரிவுரை எழுதிய ஹஸ்ரத் தனுவுல்லா சாஹிப் பானீபத்தீ அவர்கள், தொழுகையின் சட்ட திட்டங்களையும் அதன் ஒழுங்கு முறைகளையும் பேணி நடப்பவர்களென்றும் அதனை தக்க முறையில் விடாமல் தொழுதுவருபவர்களென்றும் கூறியிருக்கின்றார்கள்.

தொழுகையை தொழுதுகொள்ளுங்கள்; ஜகாத்தை நிறைவேற்றி வையுங்கள்; தொழுகையை நிறைவேற்றுபவர்களுடன் சேர்ந்து தொழுது கொள்ளுங்கள். அதாவது இமாம் ஜமாஅத்தாக என்றும், உங்கள் வீட்டிலுள்ளவர்களை தொழுதுகொள்ளும்படி செய்யுங்களென்றும், (முஹம்மதே) என்னை ஞாபகம் செய்வதற்காக தொழுகையை நிறைவேற்றுவீராகவென்றும், ஒ நபியே! நன்னம்பிக்கை கொண்ட எனது அடியார்களிடம் தொழுகையை நிறைவேற்றி வைக்கும்படியும், நாம் அவர்களுக்கு கொடுத்திருப்பதி னின்று செலவு செய்யும்படியும் கூறுவீராக என்றும், தொழுகையை நிறைவேற்றி வையுங்கள்; அல்லாஹ்த ஆலாவுக்கு இணை வைத்தவர்களாக ஆய்விடாதீர்கள் என்றும், பரிபூர்ண நன்னம்பிக்கை கொண்ட முஃமின் யாரெனின், தொழுகையை நிறைவேற்றி வைப்பவனும் அல்லாஹ்த ஆலா அவனுக்குக் கொடுத்திருப்பதைச் செலவு செய்பவனுமாகும் என்றும், அவர்கள் தான் உண்மை விஸ்வாசிகளென்றும், தொழுகையின்மீது பேணுதலாக இருந்து உறுதியுடன் அதனை நிறைவேற்றுங்கள் என்றும், எவர்கள் நன்னம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் புரிந்தார்களோ இன்னும் தொழுகையை நிலைபாடாக்கி வைத்தார்களோ அவர்களுக்கு நற்கூலியானது அவர்களுடைய நாயனிட மிருக்கின்றது; அவர்களுக்கு யாதொரு பயமுங் கிடையாது என்றும் கூறியிருக்கின்றான். இன்னும் குர்ஆன் ஷரீபில் இவைபோன்று 700 இடத்தில் தொழுகையை நிறைவேற்றும்படி கட்டளை பிறப்பித்திருக்கின்றான். ஆதலின் இதிலிருந்து தொழுகை எவ்வளவு பிரதானமான கடமையாய் இருக்கிறதென்பதும், அதனை தக்க முறையில் நிறைவேற்றி வைக்க முஸ்லிம்கள் எவ்வளவுதூரம் பிரயத்தனஞ்செய்ய வேண்டுமென்பதும் நன்கு புலனாகின்றது.

தொழுகை, முந்திய நபிமார்களின் உம்மத்துகளுக்கு கடமையாக இருந்தது

தொழுகையானது ஓர் முக்கிய பிரதான வணக்கமாக இருப்பதால், அஃது நம்மீது கடமையாக இருப்பதுபோல், முந்திய எல்லா நபிமார்களைப்பின்பற்றிய உம்மத்துகள்யாவர் மீதும் கடமையாக இருந்தது. "அல்லாஹ்வைத் தவிர யாரையும் வணங்கக்கூடாது; தாய் தந்தையர்களுடனும் பந்துக்களுடனும் எதீம்களுடனும் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ள வேண்டும்; மனிதர்களிடம் அழகான முறையில் நடந்துகொள்ள வேண்டும்; தொழுகையை நிலைபாடாக்கி வைக்க வேண்டும்; ஜகாத்தைக் கொடுக்கவேண்டும்" என்று நாம் பனூ இஸ்ராயீல்களிடம் அறுதிமானம் வாங்கியதை ஞாபகப்படுத்திப் பாருங்கள் என அல்லாஹ்த ஆலா கூறி, முந்திய நபிமார்களின் உம்மத்தோர்மீது தொழுகை கடமையாக்கப்பட்டிருந்ததைத் தெரிவிக்கிறான்.

"யா அல்லாஹ்! என்னையும் என் சந்ததிகளையும் சதாவும் தொழுகையை நிலைபாடாக்கி வைக்கிறவர்களாகச் செய்துவிடுவாயாக" என்று ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை.) அவர்கள் பிரார்த்தனை புரிந்திருக்கின்றார்கள் என்றும், அவர் (ஹஸ்ரத் இப்றாஹீம் (அலை.) தமது சந்ததிகளுக்கு தொழுகை ஜகாத் இவைகளை வற்புறுத்திக் கூறி இருக்கின்றார் என்றும்; (ஹஸ்ரத் லுக்மான் (அலை.) எனது சந்ததியே! தொழுகையை நிவைற்றி வையும்; நலவான காரியங்களைச் செய்யும்படி கட்டளையிடும்;

கெடுதியைவிட்டு விலகிக்கொள்ளும் எனக் கூறி யிருக்கின்றார்களென்றும், (ஹஸ்ரத் ஈஸா (அலை.) "நான் ஜீவனோடிருக்கும் காலமெல்லாம் அவன் என்னை தொழுகை, ஜகாத் இவைகளை நிறைவேற்றும்படி கட்டளையிட்டிருக்கின்றான்" என்றும், அவர்கள் (ஹஸ்ரத் ஷுஐப் (அலை) அவர்களைச் சேர்ந்தோர்). ஏ ஷுஐபே! இந்த உம்முடைய தொழுகையானது எங்களுடைய முதியோர்கள் வணங்கிக்கொண்டிருந்த விக்கிரகங்களை விட்டு விடும்படி கூறுகிறதா? எனக் கூறினார்களென்றும் அல்லாஹ்த ஆலா தெரிவித்து, முன்னுண்டான நபிமார்களின் உம்மத்தோர் பேரிலும் தொழுகை கடமையாக்கப்பட்டிருந்ததென குர்ஆன் ஷரீபில் அறிவித்திருக்கிறான்.

தொழுகை சம்பந்தமான ஹதீதுகள்.

மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களால், குர்ஆன் ஷரீபில் தொழுகை விஷயமாய் கூறப்பட்டிருப்பவைகள் நன்கு தெரியவரும். இவண் ஹதீதுஷரீபில் அது சம்மந்தமாய்க் கூறப்பட்டிருப்பவைகளை கவனிப்பது கொண்டு, எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தொழுகை விஷயமாய் எவ்வாறான கட்டளை பிறப்பித்திருக் கின்றார்களென்பது செவ்வனே நன்கு புலனாகும். அதாவது, ஹஸ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி.) அவர்கள் எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களை நோக்கி, அமல்களில் அல்லாஹ்தஆலாவுக்குப் பிரியமான அமல் எதுவாகுமெனக் கேழ்க்கவே, "குறிப்பிட்ட நேரத்தில் தொழுகையை நிறைவேற்றிவைப்பதாக இருக்கு"மென்று கூறினார்கள். தவிர முஃமீனான அடியானுக்கும் காபிருக்கு மிடையே வித்தியாசம், தொழுகையை விட்டிருப்பதாகுமென்று கூறியதாக ஜாபிர்பின் அப்துல்லாஹ் (ரலி.) அவர்களால் ரியாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்தஆலா ஐந்து நேரத்துத் தொழுகையை நம்மீது கடமையாக்கி யிருக்கிறானென்று எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருப்பதாக உப்பாதிப்னு சாமித் (ரலி.) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

ஒருநாளன்று எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் முன்பாக தொழுகை சம்மந்தமான பிரச்சினை எழுந்தகால், எவன் தொழுகையைப் பேணுதலுடன் நிறைவேற்றி வருவானோ மறுமை நாளில் அன்னோனுக்கு விடுதலை ஏற்படுமென்றும், எவன் அதனை பொடுபோக்காக விட்டுவிட்டானோ அன்னோனுக்கு விடுதலை கிடைக்காது; அவன் காரூன் பிர்அவ்ன் ஹாமான் முதலியவர்களுடனிருப்பான் என்றும் உலக ரெட்சகர் சத்தியத்தூதர் (ஸல்.) கூறியிருக்கின்றார்கள்.

தொழுகையின் மேன்மை.

முந்திய நபிமார்கள் (அலை.) அவர்களின் உம்மத்தோர்களுக்கு எந்தெந்த தொழுகைகள் கடமையாக இருந்ததோ, அந்த தொழுகைகளுக்குக் கொடுக்கப்பட்ட நன்மை பதவிகள் யாவற்றும் எம்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் உம்மத்தோர்களாகிய நம்மனோருக்கு ஏற்பட்டிருக்கிறது. உதாஹரணமாக, பஜர் தொழுகையை ஹஸ்ரத் ஆதலை (அலை.) அவர்களும், லுஹர் தொழுகையை ஹஸ்ரத் தாவூத் (அலை.) அவர்களும், அசர் தொழுகையை ஹஸ்ரத் சுலைமான் (அலை.) அவர்களும், மக்ரிப் தொழுகையை ஹஸ்ரத் யஅகூப் (அலை.) அவர்களும், இஷாத் தொழுகையை ஹஸ்ரத் யூனுஸ் (அலை.) அவர்களும் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்களென்று இமாம் ராபியீ அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே வலுப்பந்தங்கிய மாபெரும் நபிமார்கள் அனுஷ்டித்து வந்த தொழுகைகள் யாவற்றும் நமக்கு அளிக்கப்பட்டு, அதன் பயன்களை பெற்றுக்கொள்வதற்கு அருகதையுடையவர்களாய் விட்டோமென்பது திண்ணம்.

எதுபொழுது மானிடன் தொழுகைக்காக ஆயத்தமாகி "அல்லாஹ் அக்பர்" என்று கூறுகின்றானோ, அதுபொழுதே பாவத்தை விட்டு பரிசுத்தம் பெற்றவனாகி விடுகின்றான் என நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கின்றார்கள்.

உங்களிலொருவனுடைய தெருவாயலிலுள்ள வாய்க்காலில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் நிலைமையில், அதில் தினந்தோறும் ஐந்து முறை குளிப்பானாகில் அவன் தேகத்தில் அழுக்குப் படியாதிருப்பதுபோல, ஐந்து நேரத் தொழுகையை நிறைவேற்றுபவனுடைய பாவங்கள் யாவற்றையும் அல்

லாஹ்த ஆலா மன்னித்து விடுகிறுன் என சதத்தியத்தூர் (ஸல்.) அவர்கள் கூறி இருக்கின்றுர்கள்.

தொழுகையானது மார்க்கத்தின் தூணுகும்

தொழுகையானது 'தீன்' என்னும் கட்டடத்திற்குத் தூணுகு மென்றும், அதில் 10 விதமான பயன்களுண்டாயிருக்கிற தென்றும் எம்பெருமானுர் சமாதானத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுறைறு (ரலி.) அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது, (1) இம்மை மறுமை இரு உலகிலும் தொழுகாளியின் முகம் ஒளி பொருந்தியதாக இருக்கும்; (2) நற்காரியங்கள் புரிவதன் மீது விருப்பமுண்டாகும்; (3) திரேக சுத்தம் ஏற்படும்; (4) அல்லாஹ்த ஆலாவின் கிருபை ஏற்படும்; மற்ற வணக்கங்கள் அவனுல் ஒப்புக்கொள்ளப்படுவதற்குள்ள ஹேதுவு உண்டாகும்; (5) கபரின் இருள் நீங்கி ஒளிவேற்படும்; (6) நன்மைத்தட்டு அதிகரித்து கனமாகும்; (7) சுவர்க்கத்தில் பலவாறுன இன்ப சுகங்கள் ஏற்படும்; (8) நரகம் அதிலுள்ள பலவாறுனகஷ்டம் இவைகளினின்று விடுதலைஏற்படும்; (9) மறுமைநாளில் சங்கை பொருந்திய அல்லாஹ்த ஆலா சந்தோஷமடைவதற்குக் காரணமாக இருக்கும்; (10) சுவர்க்கத்தில் அல்லாஹ்த ஆலாவின் தரிசனேயும் மற்ற காருண்யங்களும்கிட்டும்.

மேலும், குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் ஒழுங்காக தொழுகையை நிறைவேற்றி வருவானுகில், அன்னேனுக்கு 14 நற்பயன்கள் கிட்டுகின்றன. 1) தொழுபவனுடைய மனதில் அல்லாஹ்வின் மீது பிரீதி அதிகரிக்கின்றது. (2) அவனது திரேகம் நல்ல சுவாத்தியமாக இருக்கின்றது. (3) மலக்குகள் அவனேப் பேணிக் காப்பாற்றி வருகின்றனர். (4) அவனுடைய சகல காரியாதிகளிலும் அல்லாஹ்வின் கிருபை ஏற்படுகின்றது. (5) அவனது திருவதனத்திலிருந்து பாக்கியசாலிகளின் அடையாளம் வெளியாகின்றது. (6) அல்லாஹ்த ஆலா கபருடைய வேதனேயினின்று அவனேக் காப்பாற்றுகின்றுன். (7) சிராத்துல் முஸ்த்தகீம் பாலத்தை அதிதீபரமாகக் கடந்து செல்லுவான். (8) மலக்குகள் அவனேக் காத்துக்கொண்டிருப்பார்கள். (9) நரக வேதனேயை விட்டு விடுதலே யடைவான் (10) அவனுக்கு நன்மை தீமைகளே நிறுக்கும் தராசிலிருந்து விடுதலே ஏற்பட்டுவிடும். (11) அவனுக்கு எம்பெருமானுர் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் சிபாரிஷ்செய்வார்கள். (12) அல்லாஹ்த ஆலா அன்னேனுக்கு தக்க சன்மான மளிப்பான். (13) அல்லாஹ்த ஆலா அவனே யாதொரு கவலேயும் இல்லாதவர்களுடன் சேர்த்துவிடுவான். (14) அவன் அல்லாஹ்வின் தெரிசனேயைக்கொண்டு சந்தோஷமுடையவனுக இருபபான். மேலே கூறப்பட்டுள்ள திருவஸனம் திருஹதீது ஆகிய இவைகளினுல், இஸ்லாம் மார்க்கத்தில் சகல வணக்கங்களேப் பார்க்கினும் தொழுகை தான் பிரதான முடையதாகு மென்பதும், அத்தொழுகையைக் கொண்டே அல்லாஹ்த ஆலாவின் விருப்பமும் மலக்குகளின் பிரீதியும் இரு உலகின் ஜெயமும் அமல்கள் ஒப்புக் கொள்ளப்படுவதென்பதும், எம்பெருமானுர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களின்சிபாரிஷ் ஏற்படுகிறதென்பதும் நன்கு புலனுகின்றன. மேலும் தொழுகையானது விரோதியை விறட்டும் ஆயுதம்போலும், ஷைத்தான் பேரில் வெறுப்பு ஏற்படுத்திவைப்பதாகவும் முன்கர் நகீர் என்னும் மலக்குகளுக்கு ஒழுங்கானபதில் சொல்லக்கூடியதாயும், சிராத்துல் முஸ்தகீம் என்னும் பாலத்தை தீபரமாகக் கடந்து செல்வதற்குக் காரணமாகவும், மறுமைநாளில் கிருபை என்னும் நிகழலில் தங்குவதற்குப் பிரதானமாகவும் இருக்கிறதென்பது நன்கு புலனுகின்றது. ஆகவே தொழுகையினு லேற்படும் நற்பயன்களே நன்கு தெரிந்து அதனே கடைபிடித் தொழுகுவோமாக.

சந்தா நேயர்களுக்கு!

வருஷ ஆரம்பத்தில் சந்தாச் செலுத்திய நண்பர்களின் சந்தா முடிவடைந்து விட்டபடியால், 1934-ம் ஆண்டுக்குள்ள தங்கள் சந்தாவை முன்னதாகவே அனுப்பி மாசிகையை ஆதரிக்கும்படி கோருகிறேம்.

மதக்கல்வியும் பாடசாலைகளும்

இந்திய முஸ்லிம்கள், முன்னேற்றத்திற்கான எல்லாத் துறைகளிலும் ஏனைய மதசகோதரர்களைக் காட்டிலும் பிந்தி இருக்கின்றனர் என்பது பிரத்தியக்ஷம். இவர்கள் இவ்வாறு பிந்தி இருப்பதும் இயற்கையே. இதற்காக முஸ்லிம்களையோ அவர்கள் தலைவர்களையோ குறைகூறிக் கொண்டிருப்பது வீண் வேலையாகும். ஏனெனில், பிரிட்டிஷார் இந்தியாவின் அதிகாரத்தைப் பெரும்பாலும் முஸ்லிம்களிடமிருந்து பெற்றனர். ஆதலின் அதிகாரத்தைப் பறிகொடுத்தவர் அதிகார வர்க்கத்தோடு ஒத்துழைத்துத் தங்களுக்கு வேண்டிய சாதகத்தை யடையத் தாங்களாகவே முன் வராது அவர்களிடம் பகைகொள்ளத்தான் விரும்புவர். அதேமாதிரி அதிகாரம் பெற்ற வர்க்கத்தார் எவரிடமிருந்து அதிகாரத்தை அடைந்தனரோ அவர்களைச் சுலபத்தில் நம்பிவிடமாட்டார்கள். தாங்கள் இழந்த அதிகாரத்தை மீண்டும் அடைய இவர்கள் முயற்சிப்பர். ஆதலால் இவர்களுக்கு இம்மியளவும் பலமில்லாது செய்துவிடவேண்டும் என்று அவர்களை மென்மேலும் ஒடுக்க முற்படுவர். இது இயற்கையாக எவருக்கும் உள்ள ஒரு தன்மை. இதற்கிணங்கவே, பிரிட்டிஷார் அதிகாரத்திற்கு வந்த காலத்தில் முஸ்லிம்கள் அவர்களை பகிஷ்கரித்து உத்தியோகப் பதவிகளிலும் இதர இலாக்காக்களிலும் பங்கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அரசாங்கத்தினரும், முஸ்லிம்கள் தங்களைப் பகிஷ்கரித்தது தங்களுக்குத்தான் சாதகம் என நினைத்து, ஏனைய மத சகோதரர்களைத் தட்டிக்கொடுத்து தங்களைப் பலப்படுத்திக் கொண்டனர்.

ஹிந்து சகோதரர்கள், முஸ்லிம்களிடம் ஆளப்படும் ஜாதியினராக இருந்தமையான், இனி முஸ்லிம்களை அடக்கித்தாங்கள் ஆளும் ஜாதியினராக இருப்பதற்கு இதுதான் தருணம் என நினைத்து, பிரிட்டிஷாருடன் கூட்டுறவு கொண்டனர். ஆதலின் சகலதுறைகளிலும் எவ்விதத் தடையோ போட்டியோ யின்றி தாராளமாகப் பிரவேசித்தனர். இவ்வித நிலைமையில், சுமார் 50 வருஷங்கள்கழிந்தன. இதனால் முஸ்லிம்களிடம் க்ஷீணம் ஏற்பட்டது. அதாவது, "நிச்சயமாக அல்லாஹ் கற்றோரை மரிக்கச் செய்வதன்மூலம் கல்வியைக் குறைக்கிறான்" என்ற ஹதீதுப்படி 50 வருஷ காலம்வரை இஸ்லாமிய ஆட்சி ஆதரவின்றி அந்நியரின் ஆட்சி நெருக்கடியில் சிக்கிய முஸ்லிம்களில் பல கல்விமான்கள் இறந்துபட்டனர். கல்வி படித்து முன்னேற்றத்திற்கான வழியைக் கண்டுபிடிக்கத் தக்க கல்விமான்கள் பலர் உண்டாகவில்லை. ஆதலால், முஸ்லிம்களிடமிருந்த கல்விமான்கள் குறைந்ததைத் தவிர்க்க கற்றோர் ஏற்பட இடமில்லாது போய்விட்டது. கற்றோரில்லாச் சமூகம் மற்றையத் துறையில் வீழ்ச்சியடைவது சகஜம். ஏனெனில், மக்களுக்கு அறிவைப் புகட்டித் தவறான வழியிற் செல்லவிடாது காக்கும் கற்றோர் குழாத்தினர் இல்லையென்றால், கட்டுக்கடங்காமல் தான்றோன்றியாய் நினைத்த துறைகளில் நினைத்தபடி ஒழுங்குமுறையின்றி ஈடுபட்டால் அது இன்னும் அதிக விநாசத்தைத்தான் உண்டுபண்ணும். இதன்படி முஸ்லிம்களிடம் வர்த்தகம் கைத்தொழில் முதலிய பொருளாதாரத் துறைகள் குன்றலாயின. வறுமை வந்தால் சன்மார்க்கம் நிலைநிற்காது என்பது இயல்பு. அதற்கேற்ப வறுமையால் வாட்டமுற்ற முஸ்லிம் சமூகம், சன்மார்க்க நெறியினைப் பின்பற்றுவதையும் கைவிட்டது. ஆனால், ஏனைய சமூகத்தினர் இதனைத் தங்களுக்கு அனுகூலமாகக் கொண்டு முன்னேற்றத்திற்கான சகலதுறைகளையும் கைப்பற்றிக்கொண்டு அதிசீக்கிரத்தில் முன்னேறிக் கொண்டனர்.

இவ்வித நிலைமையைக் கண்ட முஸ்லிம் அறிஞர்களில் ஸர் ஸெய்யிது அஹ்மது, நவாப் முஹ்ஸினுல் முல்க், மௌலானா ஹாலீ, மௌலானா ஷிப்லீ முதலியவர்கள், முஸ்லிம் சமூகத்தை வீழ்ச்சியடைய விடாமற் காத்துச் சகல துறைகளிலும் முன்னேற்றம் வேண்டும் என்ற நோக்கத்தில் பலவாற்றாலும் முயன்றனர். ஸர்ஸையிது அஹ்மதுகான் பிரிட்டிஷாரைப் பகிஷ்கரித்து அவர்களின்

அரசாங்கத்தைவிட்டு விலகி இருப்பது சரியல்ல வாதலால் யாவரும் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கலாசாலைகளுக்குச் சென்று ஆங்கிலங் கற்கவேண்டும் என்ற கிளர்ச்சியைத் தூண்டி அதற்காக முஸ்லிம் கல்விச் சபையை உண்டுபண்ணினர்.

பின்னர் உத்தியோகப் பதவிகளில் முஸ்லிம்களுக்கும் அவர்களுக்குரிய பங்குவேண்டும் என்பதற்காக, முஸ்லிம்களுக்கென ஒரு ராஜியஸ்தாபனத்தை முஸ்லிம் தலைவர்கள் ஏற்படுத்தினர். இதனால் 'முஸ்லிம் லீக்' ஏற்பட்டது. இவ்விதமாக முஸ்லிம்கள் பிரிட்டிஷாருடன் உறவுகொண்டாடத் தலைப்பட்டுக் கடந்த 30 வருஷங்களாக ஒத்துழைத்து வருகின்றனர்.

இதனால் ஏகபோக பாத்தியமாக அனுபவித்து வந்த ஏனைய மத சகோதரர்களுக்கு மனவருத்தம் உண்டாகிறது. நியாயபுத்தியுடன் முஸ்லிம்களின் முயற்சியைக் கவனித்து, தங்கள் சகோதரர்களாகிய முஸ்லிம்களுக்கு, அவர்களின் நியாயமான பங்கை அளிக்க, ஹிந்து சகோதரர்களும் மற்றவர்களும் முன் வருவராயின் அது மிகவும் நேர்மையும் பெருந்தன்மையுமாகும். அவ்வாறில்லாமல் பேராசைகொண்டு அவர்களுக்குரிய பங்கையும் அபகரிக்க முயற்சிப்பராயின் அது அவர்களின் அற்பகுணமாகத்தான் மற்றவர் கருதுவர்.

தற்போது இந்தியாவில் ஏற்படும் ஹிந்து முஸ்லிம் மாச்சரியத்திற்கு இதுதான் பெரும்பாலும் முக்கிய காரணமாகும். இதையன்றி வெளியிற் சொல்லப்படுகிற காரணங்கள் யாவும் இதனால் விளைந்தவைகளே. எனவே, ராஜிய உரிமைகளில் ஒருவரை ஒருவர் வெல்லவேண்டும் என்ற கிளர்ச்சியும் போட்டியும் ஒருபுறமிருக்க, கல்வித்துறையிலுங்கூட இப்பொழுது போட்டிதான் ஏற்பட்டு வருகிறது. முஸ்லிம் கல்விச் சங்கத்தாரால் ஏற்பட்ட கல்விக்கிளர்ச்சியினால் ஆங்காங்கு பல காலேஜ்களும் ஹைஸ்கூல்களும் கல்விக் கழகங்களும் ஏற்பட்டதால், பலர் ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சிபெற்று முன்னேற்றமடைந்தனர். முஸ்லிம்களுக்கென அலிகாரில் ஒரு சர்வகலாசாலையும் ஏற்பட்டுவிட்டது. ஆயினும் இன்னும் போதியளவு முஸ்லிம்களிடம் அரசியல் கல்வி பரவவில்லை.

இதற்குக்காரணம் யாதெனில், ஆங்கிலேயரின் மேனாட்டு நாகரீகமானது அக்கல்வியுடன் இந்நாட்டில் பரவிவருகிறது. இம் மேனாட்டு நாகரீகமானது ஆளும் ஜாதியானருடையதாதலால் ஆளப்படும் ஜாதியினர் அதை ஆர்வத்துடன் கைக்கொள்வதும் இயற்கை. இதற்கிணங்க இற்றைநாளில் ஆங்கிலங்கற்ற இந்தியர்கள், மேனாட்டு நாகரீகத்திலேயே பெரிதும் மோகங்கொண்டலைகின்றனர். பிற மதத்தவருக்கு இந்நாகரீகம் ஒத்துக்கொள்கிறதா இல்லையா என்பதைப்பற்றி நாம் கவலை கொள்ளவேண்டியதில்லை. ஆதலால் அதனைப் விடுத்து, நமது முஸ்லிம் சமூகத்தைப்பற்றிக் கவனிப்போம்: இந்த நாகரீகமானது மேனாட்டவருடையதாக மாத்திரம் இல்லாமல் இஸ்லாம் மதத்திற்கு மாறாகவுள்ள கிறிஸ்தவ சமூகத்தினருடையதாக இருக்கிறது. ஆதலால் இந்நாகரீகம் கொஞ்சங்கூட விரோதமில்லாததாக இருக்க முடியாது. எனவே இஸ்லாத்திற்கு விரோதமான பல அம்சங்கள் அதில் மலிந்து கிடக்கின்றன. ஆதலால் அக்கல்வியைப் படித்த நம்மவர் அதில் மோகங்கொண்டு அதனைப் பின்பற்றுவது நமது இஸ்லாமிய நாகரீகத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் ஆசாரத்திற்கும் ஆகாததாக இருப்பதால், மார்க்க பக்தியுள்ளவர்கள் இதற்குக் காரணம் ஆங்கிலக்கல்விதான் என நினைத்து, அதனை வெறுக்கின்றனர்; தங்கள் குழந்தைகளுக்கு ஆங்கிலங் கற்பிக்க முற்படுகின்றனரில்லை. ஆதலால் முஸ்லிம்கள் அதில் அதிகமாக ஈடுபட இடமில்லாமற் போயிற்று.

நிற்க, வறுமைப் பிணிக்கு வயப்பட்ட முஸ்லிம்களிடம் மார்க்கநெறி தவறுவதைக் கண்ட மதத்தலைவர்கள் முஸ்லிம்களுக்கு மார்க்க கல்வியைப் புகட்டி மார்க்கப்பற்று உண்டுபண்ண முயற்சிப்பதென்றாலோ அதுவும் முன்னேறுவதற்கு வழியில்லை. ஏனெனின், உலக ஆசையில் சிக்குண்டு தரித்திர தசையிலிருப்ப வர்களுக்கு மதக்கல்வியால் இம்மியளவும் பயனிருப்பதாகத் தோன்றவில்லை. பசிப்பிணியை நீக்குவதற்குப் பகலெல்லாம் உழைக்க வேண்டியதிருப்பதால் அதில் அதிகம் ஈடுபட முடியவில்லை. அதற்கு மேலும் மதக்கல்வி கற்றபலர் உலகில் பொருளாதாரத்துறையில் முன்னேறுதிருப்பதைப் பார்த்துப் பசியுள்ளவர் அதன் பக்கத்தில்

போகக்கூட அஞ்சுகின்றனர். இதனால் மார்க்கக்கல்வியும் குன்றிவிட்டது. என்றாலும், மதத்தலைவர்கள் தங்களது மார்க்க பக்தியின் மேலீட்டால் செய்த பிரசாரத்தின் பலனாக மார்க்கல்வியின்பால் யாருக்கும் துவேஷமில்லை. வெறுப்புமில்லை. ஆயினும் அதிற் சில சீர்திருத்தங்களைச் செய்து பசிப்பிணியைப் போக்குவதற்குத் தக்கவாறு சிறிது லௌகிகக் கல்வியையும் புகட்டவேண்டுமென விரும்புகின்றனர்.

காருண்ய கவர்ன்மெண்டாரும் முஸ்லிம்கள்பால் கருணை கொண்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகளைத் தங்களுக்குப் பிரதிகூலமில்லாத முறையில் அளிக்க முன்வந்துள்ளதால், ஆங்காங்கு பல சீர்திருத்தங்களும் உதவியும் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க, முஸ்லிம்களின் கல்வியில்லாக் குறையை கவனித்து அதற்குத் தக்கன செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் விசாரணைக் கமிஷனை ஏற்படுத்தினர். அவ்விசாரணைக் கமிஷனர் செய்தசிபாரிஸின்படி அரசாங்கத்தினர் பள்ளிக்கூடங்களில் முஸ்லிம்களுக்கும் பிரத்தியேக மதக் கல்வியை முக்கியப் பாடமாகப் போதிக்கவேண்டும் எனக் கட்டளையிட்டிருக்கின்றனர். இக்கட்டளையேனும் கிடைத்ததற்கு முஸ்லிம்கள் அரசாங்கத்திற்கு நன்றி செலுத்தவேண்டும். இக்கட்டளைப்படி இம்மாகாணத்திலுள்ள ஸ்கூல்களில் மதப்படிப்புக்கெனத் தனி உபாத்தியாயர்களும் பாடப்புத்தகங்களும் இன்னும் ஏற்பட்டுவிடவில்லை. அத்தி பூத்தாற்போல் ஒன்றிரண்டு இடங்களில் இதுவரை ஏற்பட்டிருக்கின்றனவோ இல்லையோ அதுவும் பூரணமாகத் தெரியவில்லை. அதற்குள்ளாக ஹிந்து சகோதரர்கள் வீண்பயங்கொண்டு பற்பலவிதத்திலும் இடைஞ்சல் செய்து, அதை அமல் நடத்த விடாமற்றடை செய்வதற்கான முயற்சிகளைச் செய்கின்றனர். தங்களுக்கும் பிரத்தியேக மதப்படிப்புத் தேவை என்பதும் அவர்களின் முயற்சியில் ஒன்றாகும். "யான் கண்ட இன்பம் பெறுக இவ்வையகம்" என்றபடி முஸ்லிம்களுக்கு மாத்திரம் மதப்படிக்கு வசதிசெய்து கொடுக்கவேண்டும்; ஏனைய மதத்தினருக்கு அவ்வசதிகூடாது என்றுகூற முஸ்லிம் சமூகம் தயாராக இல்லை. ஆனாலும் ஹிந்து சகோதரர்கள் இத்துணை ஆர்பாட்டமும் ஆவேசமும் கொள்வதுதான் நமக்கு விளங்கவில்லை. முஸ்லிம்களை இன்னும் க்ஷீணதிசையில் அமிழ்த்துவதற்காகவே அவர்கள் மென்மேலும் முயன்று வருகின்றனர் போலும்.

தவிர மதக்கொள்கைகளை மூடக்கொள்கையென்றும், மதக் கல்வி, மக்களை அடிமைப்படுத்துவதென்றும் பிதற்றி முஸ்லிம் வாலிபர்களிடை மதக்கல்வியும் மதப்பற்றும் உண்டாகாமற் செய்வதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். சென்ற 28-11-33-ல் வெளியான தமிழ் நாடு பத்திரிகையிலும் கூட, டாக்டர் வரதராஜுலு நாயுடு பிரசங்கம் செய்ததாக அதன் விசேஷ நிருபர் எழுதியதென்று பிரசுரமாகி இருக்கிறது. இத்தகைய பிரசங்கங்களும் கட்டுரைகளும் முஸ்லிம்களுக்குத் தேவையில்லை. முஸ்லிம்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொள்ளும்வரை மதப்பற்றுள்ளவர்களாகவும் மதக்கல்வியின்பால் ஆர்வமுள்ளவர்களாகவுமே இருப்பர். முஸ்லிம்கள் அழிந்தால்தான் இவ்விரண்டும் அழியும். உலகம் உள்ளளவும் முஸ்லிம்கள் அழியப்போவதில்லை. ஜார்ஜு பர்னாட்ஷா சொன்னதுபோல், இந்து மதமும் ஏனைய மதங்களும் அழிந்து ஒருநாள் யாவரும் முஸ்லிம்களாகப் போவார்கள் என்பது திண்ணம். ஆதலால், ஹிந்து சகோதரர்கள் இத்துறையில் வீண் கிளர்ச்சியோ முயற்சியோ செய்வதை விடுத்து, நியாயமான துறையில் தங்கள் சகோதர முஸ்லிம்களையும் அழைத்துச் செல்ல முயற்சிப்பார்களாக.

உரிமையிழந்த முஸ்லிம்களுக்கு உதவியளிப்பான் வேண்டிச் செய்த ஒரு கட்டளையை, சகலத் துறைகளிலும் முன்னேற்றமடைந்தவர்கள் செய்யும் கிளர்ச்சியையும் சூழ்ச்சியையுங் கண்டு கைவிடாமல் அக்கட்டளையை இம்மாகாணமெங்கும் அமல் நடத்தி ஏழை முஸ்லிம்களுக்கு லௌஹீக வைதீகக்கல்வியை அளிக்க அரசாங்கம் முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

திருகுர்ஆன் செயற்கை.

உலகத்திலுள்ள எல்லா வேதங்களிலும் திருகுர்ஆன் ஒன்றுதான் சந்தேகாஸ்பதத்திற்கிடமில்லாதவாறு, அவ்வேதம் வெளிப்பட்டகாலமுதல் இன்றுவரை இருந்நது வருகிறது என்பது உலகேற்கும் உண்மையாகும். ஆனால், குலபாயே ராஷிதீன்களில் மூன்றுவதான ஹஜ்ரத் உதுமான் றலியல்லாஹுஅன்ஹு அவர்களுக்கு "ஜாமிஉல்குர்ஆன்" என்ற சிறப்புப்பெயர் இருப்பதால், திருகுர் ஆனனது ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் காலத்தில் தான் ஒன்று சேர்த்து இயற்றப்பெற்றிருக்கிறது என்று சில எதிர் மதவாதிகள் தவறாக நினைக்கின்றனர். எனவே, இதன் உண்மையை விளக்கி விடுவது அவசியமாகும். ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்களுக்கு "ஜாமி உல்குர்ஆன்" என்றும், தற்போதிருக்கும் திருகுர்ஆனுக்கு "முஸ்ஹப உதுமானி" என்றும் பெயர் கூறப்படுவது உண்மை. அதன் விபரம் வருமாறு:—

நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நபிப்பட்டம் பெற்றகாலத்தில் அறப் நாட்டில் எழுதும் வழக்சம் அதிகமில்லை. ஆதலால், எழுதத் தெரிந்தவர்களும் மிகச் சுருக்கமாகவே இருந்தனர். குறைஷ்களில் மாத்திரம் அதுசமயம் 17 பேர்களே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களா யிருந்தனர். எனினும், அவர்களுக்கு கல்வியறிவு அதிகமிருந்தது. ஏனெனில், அந்தக்காலத்திலுள்ள அறபிகள், தாங்கள் கேள்விப்படும் முக்கிய விஷயங்களைப் பலகை அல்லது கடுதாசியில் எழுதி வைக்காமல், அவர்கள் இருதயம் என்ற பலகையில் எழுதிவைத்துக் கொள்வார்கள். அதாவது, அதைப் பாடம்பண்ணி மனனஞ்செய்து கொள்வார்கள். இதனால் அவர்களறிந்த அறிவானது பிறர் களவாடலினால் கவரப்படாததாகவும் மிக மிகப் பாதுகாக்கப்பட்டதாகவும் இருந்துவந்தது. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் மனனஞ்செய்வதையும், எழுதுவதையும் விருத்தி செய்தார்கள். ஆதலால், திருகுர் ஆனின் வசனங்களிலிருந்து தங்களுக்கு வஹி அறிவிக்கப்படும்போதெல்லாம் நாயகமவர்கள், முதலில் அதை மனனஞ்செய்து கொள்வதுடன், அதை எழுதிவைப்பதைத் தங்களது முதல் கடமையாகவும் கருதி வந்தார்கள். நாயகமவர்கள் எழுதத் தெரிந்துகொள்ளாத உம்மியாக இருந்ததால், ஸஹாபிகளில் எழுதத் தெரிந்தவர்கள் பலரை, வஹியை எழுதி வைப்பதற்கெனத் தெரிந்தெடுத்திருந்தார்கள். இவர்கள் "காத்திபுல்வஹி" என்ற சிறப்புப்பெயரால் அழைக்கப்பட்டு வந்தார்கள். இவர்களால் வேத வசனம் உடனுக்குடன் எழுதி வைக்கப்பட்டு வந்தது. பின்னர்நாயகமவர்களின் சிஷ்யர்களான ஸஹாபிகள் அதை உடனுக்குடன் மனனஞ் செய்து கொள்ளுவார்கள். எழுதத் தெரிந்த ஸஹாபிகள் தங்களுக்கெனப் பிரத்தியேகமாகவும் எழுதி வைத்துக்கொள்வது வழக்கம்.

இதல்லாமல், முஹாஜிர்களிலும் அன்ஸாரிகளிலும் அநேகர், திருக்குர்ஆனை ஆரம்பமுதலிறுதிவரை மனனஞ் செய்திருந்தனர். இவர்களில் ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக், உமர் பாறூக், உதுமான் துன்னூரைன், அலிமுர்த்தஜா, அப்துல்லாஹிப்னுமஸ்ஊத், ஸாலிம், மூஸா, தைபா, உபய்யுப்னுகஅப், மஆதுப்னுஜபல், தல்ஹா, ஸஅதுப்னு அபீவக்காஸ், அபூஹுறைரா, அப்துல்லா ஹிப்னுஸ்ஸாயிப், அப்துல்லாஹிப்னு உமர், அப்துல்லா ஹிப்னுஆஸ், ஆயிஷா ஸித்தீகா, ஹப்ஸா, உம்முஸல்மா, உபாதத்துப்னுஸாமித், அபூஹலீமா, புலாலத்துப்னு உபைத், தமீம்தாரீ, அக்பதுப்னு ஆமிர், அபூமுஸா அஷ்அரி, (றில்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகிய முக்கிய ஸஹாபிகளும், அஸ்ஹாபுஸ்ஸுப்பாவைச் சேர்ந்தவர்களும் மனனஞ்செய்திருந்தனர். அஸ்ஹாபுஸ்ஸுப்பாவைச் சேர்ந்தவர்கள், நபிகள் நாயகமவர்களிடமிருந்து திருக்குர்ஆனைக் கற்றுக்கொள்வதற்கென தங்கள் வீடுவாசல்களையும் தொழில்களையும் துறந்து, மஸ்ஜிது நபவியில் எப்பொழுதுமிருந்து குர்ஆனைக் கற்று வந்தவர்கள். மார்க்கப் பிரசாரத்திற்கென்று நாயகம் அவர்கள் அக்கம்பக்கத்து ஊர்களுக்கு

அனுப்புவதும், புதிய முஸ்லிம்களுக்கு திருக் குர்ஆனை போதிப்பதற்காக ஆள்களை நியமிப்பதும், இந்த அஸ்ஹாபுஸ்ஸுப்பாவிலிருந்து தான் பெரும்பாலும் தெரிந்தெடுப்பது வழக்கமாக இருந்து வந்தது. இவ்விதமாக மார்க்கக் கல்வியைக் கற்கவும் கற்பிக்கவும் என்று தங்களை அற்பணம் செய்துகொண்டிருந்த அஸ்ஹாபுஸ்ஸுப்பாக்கள் இத்தனை பேர்தான் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும் சில சமயங்களில் அதில் 700, 800 பேர்கள் வரையிலும் கூடச் சேர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வித நிலைமையில், நபிகள் நாயகமவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்தார்கள். ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக்(ரலி) அவர்கள் கலீபாவாக இருந்த காலத்தில்,யமாமா, என்ற ஸ்தலத்தில் நடந்த யுத்தத்தில் திருகுர்ஆனை மனனஞ்செய்த ஹாபிஸ்களிலும் காரிகளிலுமாக 700 நபர்கள்வரை ஷஹீதாகிவிட்டனர். இதையுணர்ந்த ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்கள், ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களிடம்“திருகுர்ஆனை மனனஞ்செய்தவர்கள் இவ்விதமாக யுத்தங்களில் மடிந்துகொண்டிருந்தால் குர்ஆனின் பெரும்பாகம் நாளடைவில் குறைந்துபோமாதலின், திருகுர்ஆனை ஒன்று திரட்டி புத்தகவடிவமாக்கிவிடவேண்டும்” என்று அபிப்பிராயங் கூறினர்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை முற்றிலும் பின்பற்றுபவரான ஹஜ்ரத் ஸித்தீக் அவர்கள், நாயகம் (ஸல்.) அவர்கள் செய்யாத வேலையை நான் எவ்விதம் செய்யத் துணிவேன் என்று கூறித் தாங்களும் அதைச் செய்யத் துணியவில்லை; மற்றவர்களைச் செய்யும்படி கட்டளையிடவுமில்லை. என்றாலும் தூரதிருஷ்டியுள்ள ஹஜ்ரத் உமர்பாறூக் (ரலி.) அவர்கள் மாத்திரம் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளாமல் அடிக்கடி எடுத்துக் கூறுவதில் சலிக்காமலிருந்தார்கள். இறுதியாக ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்களும் இதனையுணர்ந்து அதை ஒன்றுசேர்த்துப் புத்தக வடிவமாக்கி வைக்க வேண்டும் எனத் துணிந்தார்கள். இவ்விதம் ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் அவர்கள் காலத்தில் திருகுர்ஆன் பிரதி ஒன்று புத்தக வடிவமாக ஒன்று சேர்க்கப்பட்டு கலீபாக்கள் வசமே இருந்து வந்தது. ஹஜ்ரத் உமர் (ரலி.) அவர்களுடைய அந்திய காலத்தில் அடுத்த கலீபாவாக யாரையும் குறிப்பாக நியமிக்கப் படாததால் ஹஸ்ரத் அவர்களின் புத்திரியும் நபிகள் நாயகமவர்களின் பத்தினியுமான உம்முல் மூமினீன் ஹஜ்ரத் ஹப்ஸா (ரலி.) அவர்கள் வீட்டில் அமானிதமாக வைக்கப் பட்டிருந்தது.

பின்னர், ஹஜ்ரத் உமர், உதுமான் (றலி.) ஆகியவர்கள் காலத்தில் அறப் தேசத்திற்கப் பாலும் இஸ்லாம் பரவி ரோம், ஷாம், ஈரான் முதலிய பல தேசங்களெல்லாம் இஸ்லாமிய ஆட்சியின்கீழ் வந்தமையாலும், அத்தேசங்களிலுள்ளவர்கள் திருகுர்ஆனைத் திருத்தமாக ஒதவேண்டியதிருந்ததாலும் ஹஜ்ரத் உதுமான் (றலி.) அவர்கள், தமது கிலாபத் ஆட்சி காலத்தில் மேற்கூறப்பட்ட திருகுர்ஆன் பிரதியிலிருந்து பல பிரதிகள் காப்பி எடுத்து கூபா பஸரா, ஷாம், எகிப்து, மதீனா மக்கா, யமன், பஹ்ரைன் முதலிய முக்கிய ஸ்தலங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு தங்களிடமும் ஒரு பிரதி வைத்திருந்தார்கள். அதற்கு இமாம் என்று பெயர். ஹிஜ்ரி 46-வது வருஷம்வரை பந்தோபஸ்தாக இந்த குர்ஆன் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆயினும் மர்வானினுல் பின்னர் காணுமற் போய் விட்டது. ஹிஜ்ரீ 169-ல் மரித்த நாபிஉப்னு அபீநயீம் என்பவர் அந்த இமாம் குர்ஆனைப் பார்த்ததாகவும், அதில் “பஸயக்பீக்கஹுமுல்லாஹு” என்ற ஆயத்தின்மீது ஹஜ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் உதிரம் சிந்திய தன் அடையாளமிருந்ததாகவும் கூறியிருப்பதாக இப்னு அபீஹாத்தம் ரிவாயத்துச்செய் திருக்கிறார்.

ஹிஜ்ரீ 324-ல் வபாத்தான ‘ஆபூஉமைர் காஸிமுப்னு ஸலாம்’ என்பவர் அந்த குர் ஆனைப் பார்த்ததாகவும் அதில் உதிரக் கறை இருந்ததாகவும் கூறி இருக்கிறார்.

பின்னர், ஹிஜ்ரி 654 றமளான்மீ முதல் ஜும்ஆவில், மஸ்ஜிது நபவி நெருப்புப் பற்றிக்கொண்டதால் மஸ்ஜிதின்மேற் றளம்முழுதும் எறிந்துவிட்டதாயினும், இந்த குர்ஆன் வைக்கப்பட்டிருந்த குப்பா மாத்திரம் எறியவில்லை என்று அல்லாமாஷெய்கு ஹுஸைனுப்னு முஹம்மதிப்னிஹஸன் தியார்பக்ரி என்பவர் தம்முடைய தாரீகுஹமீஸில் எழுதி இருக்கிறார். மக்காவில் நமது, இந்தியர்களின் ஞாபகார்த்தமாக இந்தியப்பண

த்திலிருந்து இந்தியர்களாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகிற "மத்ரஸயே ஸௌலத்தியா"வின் பிரின்சிபலான மௌலானா முஹம்மது ஸயீது அவர்கள், சென்ற 18௳ ஸபர்மீ 1345-ல் எழுதிய கடிதத்திலிருந்து அந்த குர்ஆன் மதினாவிலிருப்பதாகத் தெரிகிறது.

பஸராவுக்கு அனுப்பப்பட்ட முஸ்ஹப உதுமானியானது ஒரு காலத்தில் கர்த்தபாவுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கிருந்து அப்துல் மூமின் தமது தலை நகருக்குக் கொண்டு வந்தார். பின்னர் ஹிஜ்ரி 645-ல் கலீபா "முஃதஸித் பில்லா" கைவசம் வந்தது. பின்னர் அபுல்ஹஸன் என்பவர் தில்மிஸ்தினைக்கைப்பற்றியபோது இப்பிரதியானது அவர் கைவசம் கிடைத்தது. கடைசியாக ஹி 745-ல் ஷஹ்ருபாஸ் என்ற இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு அரசாங்க பொக்கிஷத்தில் வைக்கப்பட்டது.

ஹிஜ்ரி 800-ம் வருஷத்தில் "இப்னு பத்தூத்தா" என்ற பிரசித்திபெற்ற சரித்திராசிரியர் இதை பஸராவிலுள்ள ஜாமிஃ மஸ்ஜிதில் பார்த்ததாக எழுதி இருக்கிறார். அப்பால் தைமூர் காலத்தில் அபூபக்ர் ஷாயியின் சார்பாக மர்கத் ஷெய்கு அப்துல்லாஹ்விடம் வைக்கப்பட்டது. அங்கிருந்து போல்ஷ்வீக்கர்கள் கையில் சிக்கி, 1923-ம் வருஷம் மாஸ்கோவுக்குக் கொண்டுபோகப்பட்டு இன்னமும் அங்கிருந்து வருகிறது.

திமிஷ்குக்கு அனுப்பப்பட்ட முஸ்ஹபை ஹிஜ்ரி 657-ல் அபுல் காஸிம் ஸப்தீ என்பவரும், ஹிஜ்ரீ 735 ல் அப்துல் மாலிக் என்பவரும் திமிஷ்கு ஜாமிஃமஸ்ஜிதில்பார்த்திருக்கின்றனர். இதை அல்லாமா ஷிப்லிநுஃமானி அவர்கள் கான்ஸ்டாண்டி நோபிளுக்குச் சென்றபோது திமிஷ்கு நகரில் இருந்ததாகவும், சுல்தான் அப்துல் ஹமீதுகான் அவர்கள் காலத்தில் திமிஷ்கு நகரின் ஜாமிஃ மஸ்ஜிது நெருப்புப் பற்றிக்கொண்ட போது இந்த குர்ஆன் எறிந்துபோனதாகவும் எழுதி இருக்கிறார்.

இவைகளை யல்லாமல் ஹஜ்றத் அலி (றலி.) அவர்கள் கைப்பட எழுதப்பட்ட குர்ஆன் ஷரீபானது "மஷ்ஹது அலி"யில் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பெரியாரால் எழுதப்பட்ட சிலஏடுகள் லாகூரிலுள்ள 'ஷாஹி' மஸ்திஜிதிலுமிருக்கின்றன.

அப்துல்லா ஹிப்னுமஸ் ஊத்(றலி.) அவர்கள், தமது கைப்பட குர்ஆன் மஜீதை எழுதி வைத்திருக்கிறார்கள். 'முஸ்ஹபு ஹப்ஸா' இந்த குர்ஆன் 'அமறுப்னுராபிஉ' என்பவரால் எழுதப்பட்டது.

முஸ்ஹபு ஆயிஷா:—இதை உம்முல்முமினீன் ஹஜ்றத் ஆயிஷாஸித்தீக்காவின் உரிமை விடப்பட்ட அடிமையான அபூயூனுஸ் என்பவர் எழுதினார். இவைகளை யல்லாமல் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ், அப்துல்லா ஹிப்னு உமர், உபய்யுப்னு கஅப் ஆகியவர்களிடமும் கையெழுத்துக் குர்ஆன் இருந்தது.

நபிகள் நாயகமவர்கள் காலத்தில் கொம்புகளிலும் பலகைகளிலும், செங்கல்களிலும் இலைகளிலுமாகப்பலப்பல சாமான்களில் எழுதிவைக்கப்பட்டிருந்தது. ஹஜ்றத் அபூபக்ர்ஸித்தீக் (றலி.) அவர்கள் காலத்தில், அவையாவும் ஒன்று சேர்த்துக் கடுதாசியில் எழுதிப் புத்தகமாக ஆக்கப்பட்டது; ஒவ்வொரு சூரத்தின் ஆரம்பத்திலும் பிஸ்மில்லாவை அடையாளத்திற்காக எழுதி வைக்கப்பட்டது.

ஹஜ்ரத் உதுமான் (றலி.) அவர்கள் திருக்குர்ஆனை குறைஷிகளின் வழக்குப்படி ஆக்கினார்கள். ஏனெனில், வஹியானது குறைஷிகளின் வழக்கப்படியே இறங்கியதாக ஹதீதில் வந்திருப்பதால் குறைஷியின் வழக்குப்படி அதை அமைத்தார்கள்.

பின்னர், ஹஜ்ஜாஜுப்னு யூசுப் என்பார் இராக்கில் கவர்னராக இருந்த காலத்தில், திருக்குர்ஆனை அறபியல்லாதவர்களும் தவறுமல் ஓதுவதற்கு அனுகூலமாக இருக்கும் பொருட்டு 'நுக்தா'க்களையும் 'இஃராபு'களையும் ஏற்படுத்தினார்.

எனவே, திருக்குர்ஆனின் வாக்கிய அமைப்பும், ஆயத்துகளின் வரிசைக் கிரமமும், சூரத்துக்களின் வரிசைக் கிரமமும் நபிகள் நாயகமவர்களால் எவ்விதம் வைக்கப்பட்டதோ அவ்விதமே அன்றுமுதல் இன்றுவரை இருந்து வருகிறது. எனவே, திருகுர்ஆனின் ஆசிரியனாக இருப்பவன், எல்லாம்வல்ல அல்லாஹுதஆலா தான் என்பதும், அதை நம்மவருக்கு ஒன்று திரட்டி இப்பொழுதிருக்கிற அமைப்பில் ஆக்கித் தந்தது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் என்பதும் வெளிப்படை.

உண்மையில் நாயகமவர்கள் தாம் ஜாமிஉல் குர்ஆன் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், தற்போதைய அமைப்பு ஹஜ்ரத் உதுமான் (ரலி.) அவர்கள் முயற்சியால் உலகெங்கும் பரவக் காரணமாயிருந்ததால் ஹஜ்ரத் உதுமான் (ரலி.) அவர்களுக்கு அச்சிறப்புப் பெயர் வந்ததும் ஒருவிதத்தில் மிகப் பொருத்தமானதே.

கீழ்நாட்டுப் பூர்வீகக் கைத்தொழில்கள்

(மௌலானா அப்துஸ்ஸலாம் நத்வீ)

சில காலத்திற்குமுன் ஐரோப்பிய ஸ்திரீ ஒருவர் மேற்கண்ட தலைப்பின்கீழ் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில்,

"மஜ்லின் என்று இப்பொழுது வழங்கப் பட்டுவரும் துணியானது மோசுலிலிருந்து வந்தது. "பில்டாக்கு" என்று சொல்லப்படுகிற இத்தாலித் துணியானது தும்யாத் என்ற நகரிலிருந்து உற்பத்தியாயிற்று. இதை ஆங்கிலத்தில் டெனிட்டி என்று சொல்லுகிறார்கள்" என்று பிரசங்கம் புரிந்தார்.

புல்டாக்கு சம்பந்தமாக மேற்கண்ட ஐரோப்பிய ஸ்திரீ கூறுவது சரியாக இல்லை என்றாலும் அவருடைய ஏனைய ஆராய்ச்சிகள் மிகச் சரியாக இருக்கின்றன. புல்டாக்கு என்பது புல்டாக் என்ற சொல்லிலிருந்து உற்பத்தியானது. இவ்வார்த்தை பக்தாத் என்ற சொல்லின் மறுவுச்சொல். புல்டாக்கு (தௌபுபக்தாதீ அதாவது பகுதாதுப் புடவை) இதை ஐரோப்பியர்கள் குடை செய்வதற்காகத் தங்கள் தேசத்திற்கு வாங்கிச் சென்றனர். இவைகளையல்லாமல் ஐரோப்பிய பாஷைகளில் இன்னும் அநேக வஸ்திரங்களின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவைகள் கீழ்நாட்டிலுள்ள பற்பல இடங்களிலிருந்து முதன்முதலாக ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகப்பட் டிருக்கின்றன. ஐரோப்பாவில் அந்த இடத்துப் பெயர்களே அந்த துணிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. அவைகளிற் சில வருமாறு.—

1. Alepine ஹலபீ.
2. Baldaquin பக்தாதீ.
3. Belebac பக்லபகீ (இது பக்லபக்கிலிருந்து வங்காளத்திற்கு வந்தது. இங்கிருந்தும் இது செய்யப்பட்டிருக்கிறது).
4. Bocassin பூகாஸி (ஹலபுக்கும் மவ்ஸிலுக்கும் மத்தியிலுள்ள ஒரு நகரம்).
5. Brocart புராக்.
6. Cachemire காஷ்மீர்.
7. Caimacami காயிம் மக்காமீ
8. Calicot காலிகோட்டி (காளிக் கட்டத்திலிருந்து மறுவியது).
9. Cambaye கம்பாயீ. (இந்தியாவிலுள்ள கம்பாயத் என்ற ஊரிலிருந்து.)
10. Canequin கானிக்கீனீ. (இராக்தேசத்திலுள்ள கானிக்கீன் என்ற ஊரிலிருந்து.)
11. Chita ஷீத். (இராக்தேசத்தார் இதை சீத் என்கின்றனர்)
12. Damas திமிஷ்கீ.
13. Damithe திம்யாத்தீ.
14. Feeutre பீத்தர்.
15. Fotta பூத்.
16. Fustanalle புஸ்த்தான். (இது ஒரு வகையான உடை. இதைப் பெண்கள் பிஸ்தாத்துணியிலிருந்து தயார்செய்து அணிந்து வந்தனர். பின்னர் உரோமர் இதைத் தங்களுடைய விசேஷ உடையாக்கிக்கொண்டனர்.)
17. Futaina பிஸ்தாத்தீ. (இது எகிப்திலுள்ள ஒரு நகரம். இப்பொழுது இது இருந்த இடத்தில் கைரோநகரம் இருக்கிறது. இந்த இடத்தில் மிக நேர்த்தியான துணி நெய்யப்பட்டு வந்தது.)
18. Gaze கஸீ.
19. Grenada கர்நாத்தி. (ஸ்பெயின் என்று இப்பொழுது வழங்கப்படும் உந்துலுஸ் தேசத்தில் முக்கிய நகரமாக இருந்த கர்னாடாவில் செய்யப்பட்டது.)

20. Habassis ஹபஷீ. (பஸராவிலுள்ள ஹபஸ் என்ற தெருவில் நெய்யப்பட்டது.)
21. Haman ஹமவீ.
21. Indienine ஹிந்தி.
23. Lavantine லாவிந்தி.
24. Madapolam முஸாம்.
25. Magrabin மக்ரிபீ.
26. Maroc மராக்கஷீ.
27. Masulipatam மசூலிபட்டணம்.
28. Macade மக்அத். (உட்காரக்கூடிய வஸ்துக்களின்மீது போடும் விரிப்பு.)
29. Moire மோர். (இது அலைகளைப்போல் வர்ணமிடப்பட்ட துணி).
30. Mahabat மஹாபாதீ. (இஸ்பஹானுக்கும் கும்முக்கும் இடையிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து).
31. Moncayar முகையர்.
32. Moultans முல்தானி. (முல்தான் பட்டணத்திலிருந்து).
33. Mousseline மோசுலி.
34 Nankin நான்கின். (சினதேசத்துப்பட்டணம்).
35. Nankniette நான்கீனிய்யா.
36. Nossaris நௌஸாரி. (இந்தியாவிலுள்ள நௌஸார் என்ற பட்டணத்திலிருந்து).
37. Pekin பீக்கினி. (சீன தேசத்து தலைநகரா யிருந்த பீக்கிங் பட்டணத்திலிருந்து).
38. Sais - Saietta ஸாஜ் என்ற ஒருவகைத் துணி.
39. Siamsise ஸயாமீ.
40. Yabi - Yabis இத்தாபீ. (பக்தாதிலுள்ள இத்தாபிய்யின் என்ற மஹல்லாவிலிருந்து).
41. Tanjeb தன்ஜேப். (இந்தியாவிலுள்ள தன்ஜலீ என்ற ஊரிலிருந்து).
42. Tarqoise துருக்கி.

நாம் மேலே கூறியவைகள் வெறும் வார்த்தையிலிருந்து யுக்தியாய் எடுத்த பிரயோகம் எனக் கருதற்க. சரித்திர சம்பந்தமான ஆதாரமும் இதற்கு சாக்ஷியாக இருக்கிறது. அந்த சாக்ஷியங்களிலிருந்து கீழ்நாட்டிலுள்ள அநேகப் பட்டணங்கள் பற்பலவிதமான கைத்தொழில்களுக்கு மத்தியஸ்தலமாக விளங்கினவையாகத் தெரியவருகின்றன. அக்காலத்து "பாரிஸ்" நகராக விளங்கிய பக்தாது நகரத்தில் மிக மிக நேர்த்தியான பலவகைத் துணிகள் நெய்யப்பட்டன. அதைச்சேர்ந்த பல கிராமங்கள் இத்தொழிலுக்குப் பெயர்பெற்று விளங்கின. ஸபன் என்பது பக்தாது நகரத்தைச் சேர்ந்த ஒரு கிராமம். இதில் ஸபனீ என்ற ஒருவகைக் கருப்புப் புடவை, பட்டும் நூலும் கலந்து தயார் செய்யப்பட்டு வந்தது. இதைப் பெண்கள் உபயோகித்து வந்தனர். "அக்பாருல் உந்துலுஸ்" என்ற தமது சரித்திரப் புத்தகத்தில் 'இப்னுகல்தூன்' என்ற ஆசிரியர் பக்தாதிலுள்ள போர்வைகளைப்பற்றிக் கூறி இருக்கிறார். அவைகள் பட்டு ஜரிகையினால் தயார் செய்யப்பட்டு வந்தன. குதிரைகளை அழகுபடுத்தவும் சிங்காரிக்கவும் இவைகள் உபயோகிக்கப்பட்டன.

கத்தீரா என்ற துணியைப்பற்றி யாக்கூத் ஹமவி என்பவர் பின்வருமாறு எழுதி இருக்கிறார்—

"கத்தீரா என்பது பத்தாதைச் சேர்ந்த பெரியகிராமம். இதில் மிகவும் மெல்லியபருத்திநூல் துணி நெசவுசெய்யப்படுகிறது; இதை வெளியிடங்களிலுள்ள வர்த்தகர்கள் தங்கள் பட்டணங்களுக்கு வாங்கிச் செல்கின்றனர். மக்ஜம் என்பது பக்தாதிலுள்ள ஒரு மஹல்லா. இதில் பற்பல விதமான வலைத் துணிகள் தயார் செய்யப்படுகின்றன"

முகத்தஸி என்ற சரித்திரக்காரர் எழுதுவதாவது:—

"பஸரா நகரத்துப் பட்டுத்துணி, அங்குள்ள வஸ்திரம், அவ்விடத்திலுள்ள இதர பொருள்களைப்பற்றி நீங்கள் கேள்விப்படவில்லையா? ஈலாவில் பருத்தியினால் விலையுயர்ந்த வஸ்திரம் நெசவு செய்கின்றனர். கூபாவில் நேர்த்தியான பட்டுத்தலைக்குட்டைகள் செய்கின்றனர். பக்தாதில் அபூர்வமான வஸ்துக்களும் விதவிதமான பட்டுத் துணிகளும், நுஃமானிய்யாவில் போர்வைகளும் நேர்த்தியான உல்லன் துணிகளும் செய்கின்றனர். பக்தாதில் விலையுயர்ந்த புடவை, தலைப்பாகை, கஸரிய்யா, யூபியிய்யாவில் அங்கவஸ்திரங்கள், தக்ரீத்தில் உல்லன் துணிகள், வாஸிதாவில் பருதாக்கள் தயார் செய்யப்படுகின்றன. இதுவரை நாம் கூறியவைகள் பக்தாதிலுள்ள 'லுகத்துல் அரப்' என்ற

பத்திரிகையில் வெளியான வியாசம். இவ் வியாசக் கர்த்தாவானவர் தமது வியாசத் தின் இறுதியில் தமது நாட்டுக்கைத்தொழில் அழிந்து பட்டதுபற்றி வருத்தமுற்று—

"இன்று இந்தத்தொழில்களின் நாமதே யங்கள்கூட முற்றிலும் அழிந்தொழிந்தன; பட்டுப்புடவையைத் தவிர வேறொன்றும் இப்பொழுதில்லை; ஐரோப்பியத் துணிகள் எல்லாவற்றினுடைய குறல்வளைகளைநெறித்து விட்டன; நமது பூர்வீகக் கைத்தொழில்கள் மறுபடியும் உயிர்பெறுவ தெக்காலமோ?'' என்று எழுதி இருக்கிறார். இந்ததுக்ககர மான விருத்தாந்தம் இம்மட்டுடன் முடிந்து போவதாக இல்லை இது இன்னும் விரிவா கக்கூறமுடியும். இவ்வியாசத்தின் தலையங்கம் பற்பலவிதமான கைத்தொழில்களைப் பற்றி யது. வியாசத்தில் கூறப்பட்ட விஷயம் நெச வுத் தொழிலை மாத்திரம் பற்றியதா யிருக் கிறது. கீழ்நாட்டில் முற்காலத்தில் செய்யப் படாத கைத்தொழில் எதுவுமில்லை. ஆனால் துரதிர்ஷ்டவசவாக கீழ்நாட்டுக்கைத்தொழி லைப்பற்றிய தனிச்சரித்திரம்எதுவும் இல்லை. ஆதலால், அவைகளைப் பற்றிய விவரம் மிகச் சிரமத்துடன் தான் தெரிந்துகொள்ள முடி கிறது. எனினும் முற்காலத்திலிருந்த நமது பூமிசாஸ்திர ஆசிரியர்களும், சஞ்சாரிகளும் ஆங்காங்கு இவைகளைப்பற்றிச் சிறிது கூறி இருக்கின்றனர். இவைகளிலிருந்து பற்பல விதமான கைத்தொழில்களைப் பற்றி ஈண்டு எடுத்தெழுதுவாம் :—

கடிதம்:—பக்தாதில் தாருல்கஸ் என்று ஒரு மஹல்லா இருந்தது. கஸ் என்பது அற பிப்பாஷையில் பட்டுக்குச் சொல்லப்படு கிறது. இந்த மஹல்லாவில் பட்டுவஸ்திரம் அதிகமாகத் தயார் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. எனினும், இந்த மஹல்லா இப் பொழுது முற்றிலும் பாழாகிவிட்ட தென் றும் நான்கு தெருக்கள் மாத்திரம் இப் பொழுதிருப்பதாகவும்,அவைகளில் காகிதம் செய்யப்படுவதாகவும் யாக்கூத்ஹமவீ என்ப வர் தமது நூலில் எழுதி இருக்கிறார்.

ஷாத்திபா என்பது கிழக்கு உந்துலுஸி லுள்ள பெயர்பெற்ற ஒரு பட்டணம். இதில் மிக நேர்த்தியான காகிதங்கள் செய்யப்பட் டன. உந்துலுஸ் முழுவதற்கும் இங்கிருந்து காகிதங்கள் சப்ளை செய்யப்பட்டு வந்தது.

தண்ணீர் பாத்திரங்கள்:—வடமேற்கு ஆப் பிரிக்காவில் டுனிஸ் என்பது பிரசித்திபெற்ற பட்டணம். இப்பட்டணத்தில் தண்ணீர் வைப்பதற்கு மண்ணினால் கூஜாசெய்யப்பட்டு வருகிறது. இதற்கு 'ரீஹிய்யா' என்று பெயர் கூறுகின்றனர். இப்பாத்திரம் மிக வெண் மையாகவும் தெளிவாகவுமிருக்கிறது. இதற் குள் உள்ள சாமான் வெளியில் இலங்கிக் கொண்டு புலப்படும். வேறு தேசங்களில் இதற்கு நிகரான கூஜா இல்லை என்று யாக் கூத்ஹமவீ எழுதுகிறார்.

மரப்பாத்திரங்கள் :—பஅலபக் என்பது கீழ்நாட்டிலுள்ள பிரசித்திபெற்ற பட்டணம் இது கைத்தொழிலுக்குச் சிறந்து விளங் கிற்று. இதைப்பற்றி இப்னுபத்தூத்தா தமது ஸபர் நாமாவில் பின்வருமாறு எழுது கிறார் :—

"இங்கு மரத்தினால் பாத்திரங்களும் நேர் த்தியான கரண்டிகளும் செய்யப்படுகின்றன. இவைகளுக்கு நிகர்இதரபட்டணங்களிலில்லை. இந்த ஜனங்கள் பெரிய கொட்டராவுக்கு தஸ்து என்று கூறுகின்றனர். சில சமயங் களில் ஒரு பெரிய கொட்டராவைச் செய் கின்றனர் அதற்குள் ஒரு சிறு கொட்டரா இவ்விதமாகப் பத்துக் கொட்டராக்கள்வரை ஒன்றிற்குள் ஒன்றாகத் தயார்செய்கின்றனர். ஆனால் பார்ப்பதற்கு ஒரே ஒரு கொட்டரா என்றுதான் புலப்படும். இதேவிதமாக ஒரு கரண்டியில் பத்துக் கரண்டிகள் இருக்கின் றன. இதற்குத் தோலினால் கவர் போட் டிருக்கின்றனர். ஒருவர் உணவருந்த உட் கார்ந்து இவைகளை உபயோகிக்க நினைப்பா ராயின் பார்ப்பவருக்கு இவர் ஒரே ஒரு கரண்டியைத்தான் உபயோகிக்கப்போகிறார் என நினைப்பர். ஆனால் அதனுள்ளிருந்து பத்துவிதமான கரண்டிகளை அவர்கள் எடுத் துக் கொள்வர்.

கனஸா:—இது ஒரு பட்டணத்தின்பெயர். இங்கு ஒருவகைத் துணி நெசவு செய்யப்படு கிறது. அதற்கு கனஸவித்துணி என்று பெயர். இங்கு மூங்கிலினால் தட்டுகள் ஆச் சரியமான விதத்தில் தயார்செய்யப்படு கின்றன. இதன் கம்புகள் மிக ஒழுங்காக இணைக்கப்படுகின்றன. மினுமினுப்பான சிவ ப்பு நிறத்தினால் இதற்கு வர்ணமிடப்படுகி றது. ஒரு தட்டிற்குள் பத்துதட்டுகள் இருக்

கின்றன. ஆனால் பார்ப்பதற்கு ஒரே தட்டு என்றுதான் தோன்றும். இதே மூங்கிலி னால் கொட்டராக்களும் தயார்செய்கின்ற னர். இது உயரத்திலிருந்து விழுந்தாலும் உடைவதில்லை. சூடான சாப்பாட்டை இதில் வைத்தால் அந்தவர்ணம் அழிவதுமில்லை. இந்தியாவுக்கும்குருஸ்ஸானுக்கும் இங்கிருந்து கொண்டு வரப்படுகிறது.

அலப்போ (ஹலப்)வுக்குப் பக்கத்தில் அர் மனூஸ் எனப் பூர்வீகப்பட்டணம் ஒன்றிருந் தது. இங்கு நேர்த்தியான செம்புப் பாத்தி ரங்களும் கலயங்களும் செய்யப்பட்டன.

பளுங்கி சாமான்கள்:—அலப்போ(ஹலப்) முற்காலத்தில் பளுங்கிச் சாமான்களுக் குப் பிரசித்திபெற்று விளங்கிற்று. இப்பட்ட ணத்திற்குப் பக்கத்திலுள்ள மலையில் நான்கு விதமான சுரங்கங்களிருந்தன. அவைகளி லிருந்து கண்ணுடிக்குரியமணல், இரும்புமுத லியபல உலோகங்கள் எடுக்கப்பட்டன. இப் பட்டணம் மாத்திரம் இதற்குப்பெயர் பெற்றி ருக்கவில்லை. வேறுபல இடங்களிலும் இத் தொழில்செழித்தோங்கி இருந்தது. திமிஷ்கு நகரைப்பற்றி இப்னுபத்தூத்தா எழுதுகை யில், ''இப்பட்டணத்தின் கடைத்தெருவில் ரத்தின வியாபாரிகள், புஸ்தக வியாபாரிகள், நூதன நூதனமான பளிங்குப்பாத்திரங்கள் செய்பவர்களின் வர்த்தகக் கடைகள் நிறைந் திருக்கின்றன'' என்று எழுதி இருக்கிறார். பிரபலயுத்தகளமாகிய காதிஸிய்யாவை அல் லாமல் முற்காலத்தில் இப்பெயர் கொண்ட வேறு ஒரு கிராமமுமிருந்தது அந்தக் கிரா மத்தில் கண்ணுடி சாமான்கள் செய்யப்பட்டு வந்ததாக யாகூத் ஹமவீ எழுதி இருக்கிறார்.

தோல் தொழில்—நபிகள் நாயகத்திற்கு முந்தியகாலத்தில் சில இடங்கள் பாதரக்ஷை களுக்குப்பெயர் பெற்றிருந்தனவாகத்தெரிய வருகின்றன. ஹதீதுகளிலும் இது போன்ற பிரஸ்தாபம் இருக்கிறது. இதில் முக்கியமாக யமன், தோலுக்குப் பெயர்பெற்றிருக்கிறது. இதையல்லாமல் சரித்திர புத்தகங்கள் பூமி சாஸ்திரங்களிலிருந்து வேறுபல இடங்களும் இத்தொழிலுக்குக் கீர்த்திபெற்றிருந்தனவா கத்தெரிகிறது. மெரோக்கோவிலுள்ள பிர பலபட்டணமாகிய அஃமாத்தைப்பற்றி யாக் கூத் ஹமவீ எழுதுகையில், '' இவ்விடத்தில் தோல் பதனிடும் தொழில் விமரிசை யாக இருக்கிறது ; உலகத்திலுள்ள ஏனைய தோல்கள் இங்குள்ள தோல்களுக்கு முன் னிலையில் ஒரு வஸ்துவாகக் கூட இல்லை; இவ்விடத்தி லிருந்து மொரோக்கோவி லுள்ள எல்லா நகரங்களுக்கும் ஏற்று மதி செய்யப்படுகின்றன; மேனாட்டு ஜனங் கள் இதை அதிகம் விரும்புகின்றனர் எனக் கூறுகின்றார். இதே விதமாக கதாமிஸ் என ஒருபட்டணம் தோல் பதனிடுவதில் சிறந்து விளங்குகிறது. இங்கு பதனிடப்படும்தோல் மிருதுவாக இருப்பதிலும் பளபளப்பிலும் பட்டை ஒத்ததாக இருக்கிறது.

யமன் தேசத்தில் ஸஃதா என்றொரு பட் டண மிருந்தது. இதில் தோல் ஷாப்புகள் அநேக மிருக்கின்றன. அங்கு ஆட்டுத்தோல் மாட்டுத்தோலினால் பாதரக்ஷைகள் தயார் செய்யப்படுகின்றன.

நெசவுத் தொழில் :—இத்தொழில் விருத் திக்கு முதற்காலம் சுலைமானுப்னு அப்துல் மலிக் கலீபாவாக இருந்த காலத்திலிருந்து ஆரம்பமாகிறது. ஏனெனில், அவர் நேர்த்தி யான உடை யணிபவராகவும் நேர்த்தியான உணவு உட்கொள்ளுபவராகவு மிருந்தார். ஆதலால் அவருடைய ஆட்சிக்காலத்தில் அத் தொழிலுக்கு விருத்தியேற்படுவது இயற்கை. அதற்குப்பின் கீழ்நாட்டிலுள்ள எல்லா நக ரங்களும் கிராமங்களும் இத்தொழிலுக்கு மத்தியஸ்தலங்களாகி விட்டன. அவைகளில் எந்தெந்த விதமான துணிகள் தயாராயின என்பது வருமாறு :—

தொழுகை விரிப்பும் ரத்னக்கம்பளங் களும் :—ஆமுல் என்பது தப்ரிஸ்தானி லுள்ள பிரபல பட்டணம். அங்கு பிரசித்தி பெற்ற தப்ரிஸ்தானி முஸல்லாக்களும் நேர்த்தியான ரத்னக்கம்பளங்களும் தயா ராகின்றன. ஆலஷ் என்பது உந்துலுஸி லுள்ள ஒரு பட்டணம். இங்கு நேர்த்தியான முதல் தரமான ரத்னக் கம்பளங்கள் தயா ராயின. அக்ஸர், அரும் மாகாணத்திலுள்ள ஒரு பட்டணம். அதில் நிகரற்ற உல்லன் மயிர்க்கம்பளங்கள் நெய்யப்பட்டு வந்தன. இங்கிருந்து ஷாம், இராக், இந்தியா, சீனா, துருக்கிஸ்தான் ஆகிய தேசங்களுக்கு ஏற்று மதி செய்யப்பட்டு வந்தது. தப்ஸா என்பது ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பிரபல பட்டணம். இங்கு உறுதியான நீண்ட அகலமான கம்ப

ளங்கள் தயாராயின. இக்கம்பளங்கள் வெகுகாலம்வரை உறுதியா யிருப்பனவா யிருந்தன. துனஸ் எகிப்துக் கடலிலுள்ள ஒரு தீவு. இங்கு சாயவேஷ்டிகளும் வர்ணக் கம்பளங்களும் தயாராயின. அர்மீனியா வைச் சேர்ந்த காலீகலா பட்டணத்தில் தான் முதல் முதல் ரத்னக் கம்பளம் செய் யப்பட்டதாகத் தெரிகிறது. இதனுல்தான் ரத்னக்கம்பளத்திற்கு பாரசிக பாஷையில் காலீன் என்ற பெயர் வந்தது.

ஜஹ்ரம் என்பது பாரசிக தேசத்தைச் சேர்ந்த ஒரு பட்டணம். இங்கு மிக நேர்த்தி யான ரத்னக் கம்பளம் தயாராயிற்று. இதற்கு ஜஹ்ரம் என்றும் ஜாஜம் என்றும் பெயர் கூறப்படுகிறது.

பருதா :—அஹ்வாஸுக்கு அக்கம்பக்கத் தில் ஒரு பட்டணமிருந்தது. அங்கிருந்த ஆட வர் பெண்டீர் யாவரும் உல்லன்நூல் நூற் பவராக இருந்தனர். விரிப்புகளும் பரு தாக்களும் செய்துகொண்டிருந்தனர்.

கந்துஜான் :—ஈரான் (பாரசிக) தேசத்தி லுள்ள ஒரு சிறிய பட்டணம். இவ்விடத்தில் ரத்தினக் கம்பளங்கள், படுதாக்கள், நாற் காலிகள் முதலியன மிக நேர்த்தியாய் செய் யப்பட்டு வந்தன; அர்மீனிக் கைத்தொழில் களுக்குப் போட்டிபோடுபவனவாயிருந்தன. இன்னும் இவ்விடத்திலுள்ள பட்டு வேஷ்டி யில் அரசருடைய நாமம் அல்லது அவருக் கென்றேற்பட்ட விசேஷ அடையாளங்கள் ஆகியவைகளை ஜரிகை நூலினுல் அல்லது அதுபோன்ற வர்ணமுள்ள மினுமினுப்பான நூலினுல் அவ்வஸ்திரத்தில் புட்டாவாக அல்லது கரையாகப் பின்னிவிடுவர். இவ்வித மான பட்டு ஜரிகைக்கரைப் புட்டா வேஷ்டி யானது மிகவும் அலங்காரமாக இருப்பதால் தேசமெங்கும் மிக ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

ருமால் :—ரே என்ற பட்டணத்திற்கும் தாமகரன் என்ற பட்டணத்திற்குமிடையில் இஸ்மினுன் என ஒரு பட்டணம் இருந்தது. அதில் மிக நேர்த்தியான ருமால் செய்யப் பட்டு வந்தது. அரபிப் பாஷையில் இதற்கு மிந்தீல் என்று பெயர். தலைக்குட்டை, சாப் பாட்டு விரிப்பு முதலியவைகளுக்கும் இப் பதத்தை பூமி சாஸ்திரக்காரர்கள் உபயோ கின்றனர்.

(தொடரும்.)

நன்றி பாராட்டுதல்

நம் மாசிகையின் அபிவிர்த்தியை நாடி சதா உழைத்து சந்தாதார்களைச் சேர்த்து பேருதவி புரிந்து வரும் ஆலீ ஜனுப்களான கோ. அ. பகீர் முஹம்மது சாஹிப் (கிள்ளான்) மு. முஹம்மது ஷரீப் சாஹிப் (சிங்கை) A. M. K. ஆலிம் சாஹிப் (கொளும்பு) மௌலவி சுல்த்தான் அஹ்மத் சாஹிப் (ரெங்கூன்) ஆகிய நண்பர்களுக்கு நாம் மிக நன்றிபா ராட்டுவதுடன் அன்னவர்களின் சே வையை மிக மிகப் புகழ்கின்றோம்.

மதிப்புரை.

குத்புநாயகர் முனுஜாத்து :—இது ஸெய்யிதுனு முஹிய்யத்தீன் அப்துல்காதிர் ஜயிலானி (றஹ்.) அவர்கள்மீது அறபி பைத்துராகத்தில் புகழாகவும் இறைவனிடம் வஸீலா வாகவும் பாடப்பட்டிருக்கிறது. பரம வற்பதமேந்தல் என்று இறைவன் துதியாகப் பதமும் சதானந்தக்கும்பி என முஹிய்யத்தீன் ஆண்டவர்கள்பேரிலேயே கும்மி பாட்டும் இத னுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதை உத்தம பாளையம் வித்வான் கா. பீருக்காளை உபாத்தியாயர் அவர்கள் இயற்றி இருக்கிறுர்கள். இதன்விலை அணு 2. வேண்டுவோர் பண்டிட் வா. பீ. நாகூர்மீரான் ஸாஹிப், ஆனந்த வயித்திய நிலையம், உத்தமபாளையம் மதுரை ஜில்லா, என்ற விலாசத்திற்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

முஸ்லிம்களின் நவீன அநுஷ்டானச் சம்ஹாரம்

அனுச்சார பித்அத் ஷிர்க்கு முதலிய நவீன அநுஷ்டானங்களில் கிடந்துழலும் முஸ்லிம்களுக்கும், அனுவசியமான சடங்குகளைக் கைக்கொண்டு கடன்படுவோருக்கும் இஸ்லாத்தின் உண்மை ஆசாரம் யாது என்பதைத் தெளிவுபடுத்தி அத்தகை வீண்டம்பச் செலவுகளினும் அனுச்சாரப் பழக்க வழக்கங்களிலுமிருந்து விடுவிக்கும் அரிய புத்தகம்.

விலை அணு 10.

குர்ஆன் ஆங்கில வியாக்யான ஆராய்ச்சியின் முகவுரை

திருக் குர்ஆனுக்குக் காதியானி அஹ்மதிப் பார்ட்டியின் தலைவர் முஹம்மது அலி, M.A., LL. B., எழுதிய ஆங்கில வியாக்யானத்தில் இஸ்லாத்துக்கு விரோதமாக எழுதியுள்ள தவறுகளிற் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறது. இது பாஞ்சாலத்தைச் சேர்ந்த ஷேக் குலாம்ஹைதர் சாகிபால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

விலை அணு 4.

அஹ்மதியர்களைப்பற்றிய கோர்ட்டுத் தீர்ப்பு

இதில் காதியானி மதஸ்தர்கட்கும் முஸ்லிம்கட்கும் மஸ்ஜித் கப்ருஸ்தான் ஆகியவைகள் சம்பந்தமாக ஏற்பட்ட வியாச்சியங்களும் கோர்ட்டுத் தீர்ப்புகளும் எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணு 2 தான்.

காதியானிப் பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும்

சிலோன் கம்பளையில் காதியானிகளுக்கும், உலமாக்களுக்கும் நடக்க இருந்த மத தர்க்கவாத சம்பந்தமாக எழுதப்பட்டது. காதியானிகளின் தர்க்க நிலைமைகளையும் அவர்களின் தந்திரக் கபடங்களையும் தெரிந்து அவர்களோடு மல்லாடி அவர்களின் குறும்புகளை அடக்க விரும்புவோருக்கு இந்நூல் இன்றியமையாததாகும்.

விலை அணு 6 தான்.

ரத்துல் காதியானி

வஹீ என்பதென்ன ? அது எவருக்கு வரலாம். தற்காலம் வஹீ உண்டா ? இல்ஹாம் என்றால் என்ன ? என்பனவாதி விஷயங்களைப்பற்றி விபரமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கிறது.

விலை அணு 4.

காதியானி மதஸ்தருடன் ஒற்றுமையாமை

விலை அணு 8.

காதியானிக் கொள்கைகள் தலைகாட்ட முற்பட்டிருக்கும் இதுகாலை இந்நூல்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும் என்பதை அறிவித்துக்கொள்ளப் படுகிறது.

கிடைக்குமிடம் :—

முஸல்மான் ஆபீஸ்,

தென்காசி.

மஃரிபத்துல் ஔகாத் (நேரங்களின் விபரம்)

நோன்பு வைக்கும் நேரம், நோன்பு திறக்கும் நேரம், சூரிய உதையம் முதலியவைகளை இதன்கீழ் குறிப்பிடுகிறோம் இதிற் கண்ட நேரங்கள் சென்னை நகருக்கு உரியனவாகும். சென்னைக்கு நேர்மேற்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் கூட்டியும் நேர்கிழக்கில் உள்ளவர்கள் 69½ மைலுக்கு 4 நிமிஷம் வீதம் குறைத்தும் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். கீழே குறிப்பிட்டுள்ள நேரங்களில் அஸ்தமனத்தை 5 நிமிஷம் பிந்தியும் சுப்ஹையும், சூரியோதயத்தையும் 5 நிமிஷம் முந்தியும் அனுஷ்டிப்பது நலம்.

இதனடியில் சில முக்கியமான ஊர்களையும் அவைகள் சென்னைவிட்டு எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதையும், அவ்விடத்திலுள்ளவர்கள் கூட்டிக்கொள்ளவேண்டிய நிமிஷங்களையும் குறிப்பிடப்பட்டிருக்கிறது அதற்குச் சமீபத்திலுள்ளவர்கள் அதற்கேற்றவாறு தங்கள் ஊரின் நேரத்தை நிர்ணயித்துக்கொள்வார்களாக.

ரமலான் மீ	1௳ 7	8௳ 14	15௳ 22	22௳ 28	29௳ 30
நேரங்கள்	ம. நி.	ம. நி.	ம. நி	ம. நி.	ம. நி.
ஸஹர் முடிவு	4—45	4—47	4—49	4—50	4—51
சுப்ஹு சாதிக் (மெய்வெள்ளை)	5—10	5—12	5—14	5—15	5—16
சூரியோதயம்	6—29	6—30	6—32	6—35	6—36
சூரியாஸ்தமனம்	5—51	5—54	5—58	6—2	6—3

முக்கிய பட்டணங்கள்

ஊர்	மைல்	நி	ஊர்	மைல்	நி
விழுப்புரம்	56	3½	தாராபுரம்	193	11¼
திருவண்ணாமலை	59	4	பெங்களூர்	187	10¾
கொழும்பு	25	1½	கோயமுத்தூர்	241	14
இராமேஸ்வரம்	70	4	காஞ்சிவரம்	43	2½
பட்டுக்கோட்டை	67	4	வேலூர்	81	4½
மன்னார்குடி	35	2	ஆற்காடு	81	4½
நாகப்பட்டணம்	31	2	தூத்துக்குடி	147	8½
தஞ்சாவூர்	80	4	ராமனாதபுரம்	103	6
சீர்காழி	39	2	புதுக்கோட்டை	201	12
சிதம்பரம்	42	2	திருச்சினாப்பள்ளி	111	6½
பரங்கிப்பேட்டை	37	2	சேலம்	144	8½
கூடலூர்	37	2	தர்மபுரி	147	8½
செங்கல்பட்டு	22	1	மேட்டுப்பாளையம்	236	14
வாணியம்பாடி	126	7	உதகமண்டலம்	248	14½
திருநெல்வேலி	180	10½	மதுரை	150	8
திண்டுக்கல்	162	9½	சிவங்கை	124	7½

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.